கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 27.09.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



ஸ்ரீ மாதா டிரஸ்ட்

(ஜாதி, மத, இன சார்பு அற்ற ஏழை புற்று நோயாளிகளுக்கு புகலிடம் தரும் தொண்டு நிறுவனம்)



ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்ற இந்த தொண்டு நிறுவனம், **ஸ்ரீ காஞ்சிபெரியவர்களின்** அருளாசியுடன் திருமலை "பாலாஜி" தெய்வ சன்னிதானத்தில் ஜகத்குருவின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான பக்தர் IOC Krishnamoorthy அவர்களை ஸ்தாபகராக நியமனம் செய்து ஆரம்பிக்கப்பட்டது.

அதிக துன்பத்திற்கு ஆளாகும் "புற்று நோயாளிகளில்" மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு பாடுபட்டு வரும் அடையாறு கேன்சர் இன்ஸ்டிட்யூட், ராஜஸ்தானி அசோசியேஷன் (தமிழ்நாடு)ன் பண உதவியால் இந்த நோயாளி களுக்கான காப்பகத்தை கட்டி பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்கள்.

இந்த ஸ்தாபனம் ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி, "ஸ்ரீ மாதா டிரஸ்ட்" இந்த தர்மசாலாவை பராமரிக்கும் மிகப்பெரிய பொறுப்பை ஆகஸ்டு மாதம் 2000ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. அன்றிலிருந்து இன்று வரை எந்தவித தொய்வும் இன்றி, பொதுமக்கள் - நல்ல உள்ளங்கள் அளித்து வரும் நன்கொடைகளின் உதவியின் பலனாக, பல மாகாணங்களிலிருந்து சென்னை அடையாறு புற்று நோய் மருத்துவமனைக்கு புறநோயாளிகளாக வரும் பல் லாயிரக்கணக்கான ஏழைகளுக்கும் உடன் வரும் அவர்களது ஒரு உதவியாளருக்கும் இலவசமாக உணவும், இருக்க இடமும் கொடுத்து காப்பாற்றி வருகிறது இந்த ஸ்ரீ மாதா டிரஸ்ட்.





இந்த மனிதநேய திருப்பணிக்கு உதவுமாறு நிறுவுநர்கள் கூட்டத்தில் ஸ்ரீ ஆச்சார்யாள் உரையாற்றுகிறார். உடன் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிறுவனர் திருக்கிருஷ்ணமூர்த்தி (IOC)



ஏழை புற்றுநோயாளிகளுக்கு ஜகத்குரு தரிசனம்

தர்மசாலாவிற்கு விஜயம் செய்த அன்பர்களின் எண்ணங்கள்...!

திரு. கிருஷ்ணமூர்த்தி தன் **'குருஅருளால்'** மதிப்புமிக்க சமுதாயப்பணியை செய்துவருகிறார் உண்மையிலேயே இது மிகச்சிறந்த பணி.

என்.ராமசர்மா
மேனேஜர், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், காஞ்சிபுரம்

ஒரு தாய் தன் கருவறையில் தன் குழந்தையை எப்படி பாதுகாக்கின்றாளோ, அதேபோல் இங்கு நோயாளிகளை ஒரு தாயைப்போல நேசிக்கிறார்கள்.

எல்.சுப்பையா
சென்னை-6.

வி.கிருஷ்ணமூர்த்தி


நிர்வாக அலுவலகம்:
"குரு கிருபா", 3, சாஸ்தா அவென்யூ,
திருமழிசை தெரு, சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.




நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர்
கைபேசி: 94440 01065
ராஜஸ்தானி தர்மசாலா,
பழைய கேன்சர் இன்ஸ்டிட்யூட் வளாகம்,
ஈஸ்ட் கனால் பேங்க் ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Phone: 2442 0727 / 2440 4950

உங்கள் சேவை தொடர, தொடர்புகொள்ளுங்கள் : திரு.காமாட்சிமணி - 93848 33325
அரிமா.என்.சங்கரம் - 93848 20727 திருமதி எஸ்.ரமா - 93810 20727 | திரு.ஏ.அமெரிக்கன் - 9003247857

"புற்று நோயினால்" கஷ்டப்படும் ஏழை நோயாளிகள், மன அமைதியுடன் இருக்க இடமும் உண்ண உணவும் அளிக்கும் "தர்மசாலாவை" நிர்வகிக்கும் "ஸ்ரீ மாதா டிரஸ்ட்" தன் மனித நேய திருப்பணியில் கடந்த 9 ஆண்டுகளில் 1,40,000த்திற்கு மேற்பட்டவர்களுக்கு உதவி செய்த மன நிறைவோடு 10வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நன்னாளில், அன்பு உள்ளங்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள் !!


நோயாளிகள் தங்கும் வசதியான அறை


சௌகரியம் மிகுந்த உணவு அறை

சற்று அசந்தால் வாழ்க்கையையே பறித்து விடுவதுபோல் பயம் காட்டுகிற புற்றுநோய்







கேன்சருக்கு ஏழை பணக்காரன்கிற பாகுபாடு எல்லாம் கிடையாது. ஒருபக்கம் உயிரைத் துளைக்கிற வலி. இன்னொரு பக்கம் வாழ்க்கையே முடிஞ்சுடுமோங்கிற பயம். கையில் காசு இருக்கிறவங்களுக்கு இந்த வேதனை மட்டும்தான். ஆனால் தினசரி கூலி வேலை செஞ்சு, வயிற்றைக் கழுவ வேண்டிய ஏழைகளுக்கு? வேலைக்குப் போவதை எல்லாம் அப்படியே நிறுத்திட்டு கேன்சருக்கு சிகிச்சை எடுக்க வேண்டிய கட்டாயம். வேலைக்குப் போக முடியாததால் குடும்பச் செலவுகளுக்குத் திணற வேண்டிய அவலம். இப்படி மரண வேதனைப்படுகின்ற பரம ஏழைகளின் கஷ்டத்திற்கு இறைவன் அருளால் நல்ல நிலைமையில் இருக்கும் நாம் ஏதாவது நிவாரணம் அளிக்க வேண்டாமா? யாருடைய உடல் வலியையும் வியாதியின் கொடுமையையும் மற்றவர்கள் பகிர்ந்துகொள்ள முடியாது. இருப்பினும் குறைந்த பட்சம், மனிதநேய அடிப்படையில் அவர்களைப் பேணி பராமரிக்கும் "ஸ்ரீமாதா டிரஸ்ட்" நடத்தி வரும் தர்மசாலாவிற்கு பொருள் உதவி செய்வதன் மூலம் அங்கு தங்கியிருக்கும் ஏழை புற்றுநோயாளிகளுக்கு இலவசமாக உணவு கொடுத்து அவர்களது நோய்க்கு இலவச சிகிச்சை பெற உதவலாமே?




"புற்றுநோய்" - சரியான நேரத்தில் முறையான சிகிச்சை அளித்தால் நிச்சயம் குணப்படுத்தலாம்



புற்றுநோயால் அவதியுறும் ஏழைகள் குணமாக உதவி செய்ய, எங்களுக்கு உதவுங்கள்

நீங்கள் எங்கள் தர்மசாலாவிற்கு விஜயம் செய்து நேரில் பார்த்த பிறகு உங்கள் உதவிகளை இப்படி அளிக்கலாமே ...

- ஒரு நாளைக்கு ஒரு நோயாளியின் உணவுக்காக ரூ.80 அளிக்கலாம்.
- ஒவ்வொரு மாதமும் ஒரு நோயாளி என்ற அடிப்படையில் ஆண்டு முழுவதற்கும் ரூ.1000 அளிக்கலாம்.
- இந்த தர்மசாலாவில் தங்கும் 250 முதல் 300 வரை உள்ள நோயாளிகளுக்கு ஒரு நாள் சாப்பாடு செலவான ரூ.8000 அளிக்கலாம்.
- ஏழை நோயாளிகளுக்கு மதிய உணவு அல்லது இரவு உணவு அளிக்க ரூ.3000 வழங்கலாம்.
- காலை சிற்றுண்டி மட்டும் கொடுக்க ரூ.2000 வழங்கலாம்.
- காலை முதல் இரவு வரை முழு நாள் உணவை ஆண்டுக்கு ஒரு முறை உங்கள் சார்பாக வழங்க ரூ.75000 கொடுத்து நீங்கள் ஒரு "வள்ளல்" ஆகலாம். நீங்கள் கொடுக்கும் இந்த தொகை டிரஸ்டின் காப்பு நிதியில் சேர்க்கப்பட்டு, அதன் வட்டியிலிருந்து இந்த தர்மம் செய்யப்படும்.
- பெரிய மனதுடன் ரூ.100000 கொடுத்து, நீங்கள் இந்த புனித சேவையின் ஒரு நிரந்தர காப்பாளர் ஆகலாம்.

நீங்கள் அளிக்கும் நன்கொடையை, "SRI MATHA TRUST" என்ற பெயரில் காசோலையாக அனுப்பி வைக்கலாம். நீங்கள் அளிக்கும் நன்கொடைக்கு 80(G) பிரிவின்படி வருமான வரிவிலக்கு உண்டு

''கடந்த ஆண்டில் மட்டும் சன் பிக்சர்ஸ் நிறுவனம் ஒன்பது படங்களை வெளியிட்டு அத்தனையும் கமர்ஷியலாக வெற்றி பெற்றிருக்கின்றன. அந்த வரிசையில் இந்த ஆண்டு 'குட்டி', 'எந்திரன்', 'வேட்டைக்காரன்'... என்று அந்த வெற்றிப் பட வரிசை தொடர்கிறது. இதில் அமீர் நடிக்கும் 'யோகி'யும் சேர வேண்டும்'' என்று பகிரங்கமாக வேண்டுகோள் வைத்திருக்கிறார் சன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் முதன்மை அதிகாரி சக்ஸேனா.

(வேண்டுகோள், அவர்களுக்குத் தூண்டுகோலா இருக்குமா?)

'வீரம் கதை மன்னன்' எழுத்தாளர் ராஜேஷ்குமார், கோலிவுட்டுக்குள் அடி எடுத்து வைத்திருக்கிறார். இவரது 'இரவில் ஒரு வானவில்' நாவலை வர்னிகா மூவி மேக்கர்ஸ் நிறுவனம், 'அகராதி' என்ற பெயரில் படமாக்கி வருகிறது. இந்தப் படத்தில் வாலி எழுதிய முக்கோண சிம்மாசனம் பாடலுக்காக ஏவி.எம்மில் 25 லட்ச ரூபாய் செலவில் செட் போட்டிருக்கிறார்கள்.

(செட் செட்டாகி எல்லாரும் செட்டிலானா சரிதான்...)



முக்கோண சிம்மாசனம் 25 லட்சம்!

''தெலுங்கு, கன்னடம் படங்களில் நான் முன்னணி ஹீரோவாக இருந்தாலும் என் தாய்மொழியில் அந்த இடத்தை இன்னும் என்னால் பிடிக்க முடியவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது'' என்கிறார் 'மதன்' படத்தை இயக்கி நடிக்கும் ஜெய் ஆகாஷ்.

(கதையில கான்சன்ட்ரேட் பண்ணுங்க... எல்லாம் சரியாப் போயிடும்...)

நியூஸ் பாய்

'செய்யாறு ரவி' இயக்கத்தில் மக்கள் டீ.வி.யில் வருவதாக இருந்த 'சூற்றப் பரம்பரை' தொடர் நிறுத்தப்பட்டுள்ளது. பிரீயட் கதை என்பதால் படப்பிடிப்புச் செலவு அதிகமாகும் என்பதுதான் காரணமாம். அதனால் வேறொரு முன்னணி தமிழ் சேனலில் கொண்டு வரும் வேலைகள் நடந்து வருகின்றன.

(சேனல் மாறினால் செய்தி மாறாதுல்ல...)

சேனல்களின் நடனப் போட்டிகளிலும் சீரியல்களிலும் நடித்து வந்த நடிகர் ராகவ் 'நஞ்சுபுரம்' என்ற திகில் கலந்த காதல் படத்தில் ஹீரோவாக நடித்திருக்கிறார். பல மாதங்களுக்கு முன்பே திரைக்கு வந்திருக்க வேண்டிய 'நஞ்சுபுரம்', வரும் தீபாவளிக்குப் பிறகுதான் வெளியாகிறது. அதற்குப் பிறகு தனக்கு தமிழ் சினிமாவில் நல்ல 'பிரேக்' கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்.

(நஞ்சுன்னு பேரே சரியில்லையே.)



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



நதிகளை இணைக்க வேண்டும் என்ற குரல் கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. 1834ம் வருடத்திலேயே கங்கை - காவிரி இணைப்பைப் பற்றி ஆராய்ந்தவர் சர் ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலப் பொறியாளர்.

1971-72ல் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் கே.எல்.ராவ் கங்கை-காவிரி இணைப்புக்கான திட்டத்தைத் தீட்டினார். அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியும் அதை நடைமுறைப் படுத்த விரும்பினார். பிரம்மபுத்திரா - கங்கையை

நதிகள்

இணைத்து, அதன் பிறகு மகாநதி மூலம் தெற்கே உள்ள கோதாவரி - கிருஷ்ணாவோடு இணைத்து, அதைப் பின்னர் காவிரியோடு கால்வாய்கள் மூலம் இணைக்க வேண்டும் என்பது திட்டம். ஆனால், இருபதாயிரம் கோடி செலவாகும் என்றவுடன் திட்டம் கிடப்பில் போடப் பட்டது. பின்னர் மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது தஸ்தூர் என்பவர் தயாரித்த 'பூமாலை' திட்டம் பரிசீலிக்கப் பட்டது. ஒன்றும் நடக்கவில்லை. 1982ல் தேசிய நீர்வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு நாடு முழுவதும் மாநில அளவில் நிறைவேற்றும் வகையில் ஐந்து திட்டங்களைத் தயாரித்தது.

ஆனால், திட்டங்கள் எல்லாம் கோப்புகளில் தூங்கிக் கொண்டிருந்தன. இதற்காக நீதிமன்றக் கதவை தட்டியவர் வழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன். ''நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும்; தேசிய அளவில் நதிகளை இணைக்கவேண்டும்;

சமீபத்தில் கட்சி வேலையாக தமிழகம் வந்த காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி, 'தேசிய நதிகளை இணைப்பது சாத்தியமில்லாத ஒன்று! மேலும் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தானது' என்று ஒரு கருத்தை உதிர்த்து விட்டுப் போக, பரபரப்பாகப் பற்றிக் கொண்டது தேசிய மற்றும் மாநில அரசியல் களம். உண்மையில் தேசிய நதிகளை இணைக்க முடியுமா? அதனால் ஏற்படும் ப்ளஸ் - மைனஸ் என்னென்ன என்று இங்கே விவாதிக்கின்றனர்.

ஃப்ளாஷ் பேக்: இந்தியா போன்ற பெரிய நாடுகளில், மாறி மாறி ஒரு பகுதி வளமாகவும் மற்றொரு பகுதி வறட்சியாகவும் இருப்பது இயற்கை. மழைக் காலங்களில் சில நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இவ்வாறு வீணாகப் போகும் நீரைப் பயன்படுத்தும் வகையில்

இணைப்பு!

ராகுல் பேச்சு சரியா..?

கேரள நதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும்'' என்பது இவர் நீதிமன்றத்தில் வைத்த கோரிக்கை. இப்போது இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. வருடந்தோறும் மூன்று லட்சம் கன அடி தண்ணீர் வீணாகக் கடலில்




சென்று கலக்கிறதாம். சமீபத்திய மதிப்பீட்டின்படி மூன்று லட்சம் கோடி ரூபாய் செலவழித்தால், முப்பது ஆண்டுகளில் கங்கை - காவிரி இணைப்பு சாத்தியம் என்கிறார்கள். இப்படி இணைக்கப்பட்டால், புதிதாக ஆறு கோடி ஏக்கர் நிலப்பரப்பை வேளாண்மைக்குப் பயன்படுத்தலாம். இது தவிர, மின் உற்பத்தி, குடி தண்ணீர்ப் பிரச்னை தீர்வு, நீர்வழிப் போக்குவரத்து என்று பல நன்மைகள் உள்ளன. ஒவ்வொரு முறை வாய்தா வரும்போதும், 'கொள்கை அளவில் இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. உடனடித் தீர்வு சாத்தியமில்லை' என்று பதில் மனு தாக்கல் செய்யப்படுகிறது. இந்தச் சூழலில்தான், ''தேசிய அளவில் நதிகளை இணைத்தால் சுற்றுச் சூழலுக்கு ஆபத்து'' என்று தமது தமிழக விசிட்டின்போது சொல்லி, பரபரப்பைக் கிளப்பியிருக்கிறார் ராகுல்காந்தி.

ராகுல் பேச்சு சரியா?: ''ராகுல் சொன்னதில் தவறேதும் இருப்பதாக நான் கருதவில்லை. 1970 - 80களில் நமக்கு சுற்றுச்சூழல் பற்றிய சிந்தனையே இல்லை. இப்போது உலகக் கண்ணோட்டம் மாறி வருகிறது. எந்த ஒரு வளர்ச்சித் திட்டமென்றாலும், சுற்றுச்சூழலுக்கு ஆபத்தில்லாமல் அதை நிறைவேற்ற வேண்டுமென்பதே இப்போதைய நடைமுறை. கங்கை - காவிரி இணைப்பில் காடுகளை அழித்து, மலைகளைக் குடைந்து கால்வாய்களை அமைக்கும் போது, சுற்றுச்சூழல் கட்டாயம் பாதிக்கப்படும். அரிய விலங்கினங்கள் அழியக்கூடும். ஏற்கெனவே மழைப் பொழிவு குறைந்து கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் காடுகளை அழிப்பது என்பது நம் தலையில் நாமே அக்கினி மழையைக் கொட்டிக் கொள்வதாக ஆகும். வளர்ச்சித் திட்டங்களை தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக ஆய்வுக்குட்படுத்திய பின்னரே செயல்படுத்த வேண்டும்.

ஒரு திட்டத்தால் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைக் கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழலுக்குக் குறைந்த சேதாரத்துடன் அதை நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும்'' என்கிறார் திண்டுக்கல் 'அமைதி' அறக்கட்டளையின் தலைவர் பால்பாஸ்கர்.

2000 வருடத்தில் வாஜ்பாய் அரசில் தி.மு.க. இருந்தபோது நதிகள் இணைப்பு குறித்து ஆய்வு நடத்தி அறிக்கை கொடுக்க சுரேஷ் பிரபு என்பவர் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் குழு ஐம்பது சதவிகிதம் பணிகளை முடித்துவிட்டு, 2005ல் அறிக்கையை மத்திய அரசுக்குக் கொடுக்க இருந்தது. ஆனால், 2004ல் பதவிக்கு வந்த காங்கிரஸ் அரசு, இந்தக்

* ராதாகிருஷ்ணன்



கமிட்டியின் பதவிக் காலத்தை நீட்டிக்காமல் விட்டுவிட்டது. லட்சக்கணக்கான கோடிகள் செலவழித்து நதிகளை இணைப்பதைவிட, நீர் மேலாண்மை செய்யும் பட்சத்தில் அட்டகாசமான பலன்கள் கிடைக்கும் என்ற குரலும் கேட்கிறது.



✱ பால்பாஸ்கர்

✱ காளிதாஸ்



நீர்மேலாண்மை: ''தமிழ்நாட்டில் சராசரி மழை 90 சென்டிமீட்டர். ஆனால், இஸ்ரேலில் சராசரி மழை 35 செ.மீ.தான். இருந்தும் திட்டமிட்ட நீர்மேலாண்மை காரணமாக வேளாண்மையில், சாதனை செய்கிறது இஸ்ரேல். நாம் ஏன் அதுபோன்று செய்யக் கூடாது? கங்கை - காவிரி இணைப்பு வேலைகளை இப்போது துவக்கினால்கூட முடிவதற்கு நாற்பது ஆண்டுகள் ஆகும். இப்போதே உலக வெப்பமயமாதல் காரணமாக இமயத்தில் பனிப்பாறைகள் குறைந்து, கங்கையில் தண்ணீர் வரத்து முப்பது சதவிகிதம் குறைந்து போய்விட்டது. காடுகள் அழிக்கப்படுவதும் சுற்றுச் சூழல் மாசுபடுவதன் காரணமாகவும் மழையும் குறைய வாய்ப்பு உண்டு. நாற்பது வருடங்கள் கழித்து கங்கையிலே தண்ணீர் வரத்து இருக்குமா என்பதே கேள்விக்குறி. இந்த நிலையில் மூன்று லட்சம் கோடி செலவழித்து, திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமா? கால்வாய்கள் வெட்டி தெற்குப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டுவர முயலும்போது விந்திய-சாத்புரா மலைகளைக் கடந்து வரவேண்டும். அங்கேயுள்ள காடுகள் அழிக்கப்படுமேயானால் தென்மேற்குப் பருவ மழைக்கு ஆபத்து வந்துவிடும்'' என்கிறார் 'ஓசை' சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவர் காளிதாசன்.

நதிநீர் இணைப்பில் மிகுந்த ஆர்வம் காட்டி வருபவர் முதல்வர் கருணாநிதி. 1971ல் கே.எல்.ராவ் அவர்களைச் சந்தித்து கங்கை-காவிரி இணைப்புக்கு வலியுறுத்தியவர். தமது சட்டமன்ற அனுபவத்துக்குப் பொன்விழா கொண்டாடியபோதுகூட பிரதமருக்கும் சோனியாவுக்கும் அவர் விடுத்த வேண்டுகோள் 'நதிகளை இணையுங்கள்' என்பதுதான். இந்த நிலையில் ராகுலின் கருத்து தி.மு.க. ஸீனியர் பிரமுகர்கள் மத்தியில் கசப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

மாநிலத்துக்குள் சாத்தியமா?: ''நதிநீர் இணைப்புக்கு யாரும் எதிரியல்ல; நான் சட்டமன்றத்தில் அதற்காகப் பல முறை குரல் கொடுத்திருக்கிறேன்'' என்கிறார் கடலூர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கே.எஸ்.அழகிரி. ''ராகுல் ஓர் உரத்த சிந்தனையைக் கிளப்பியிருக்கிறார். இந்தக் கருத்து விவாதத்துக்கு விடப்படவேண்டும். பல நாடுகளில் நதிகள் இணைப்பு நடந்திருக்கிறது. இதனால் எதிர்பாராத ஆபத்தான விளைவுகள் உண்டாகி



யிருக்கின்றன. ரஷ்யாவில் பாலைவனப் பகுதிக்கு ஒரு நதியைத் திருப்பியிருக்கிறார்கள். இதன் காரணமாக, நதியின் நல்ல நீர் கடலில் கலப்பது குறைந்து, அந்தக் கடல் தண்ணீரில் கூடுதல் உப்பு சேர்ந்துவிட்டது. நாளடைவில் அந்தப் பகுதி நிலத்தடி நீரும் உப்பாக மாறிவிட்டதாம். இதுபோன்ற ஆபத்துக்கள் இருக்கின்றன. ஆகவேதான் சுற்றுச்சூழலுக்கு அதிகப் பாதிப்பில்லாமல் மாநிலத்துக்குள்ளேயே முதலில் நதிகள் இணைப்பை மேற்கொள்ளலாம் என்று ராகுல் சொல்லியிருக்கிறார்.''

பர்பாதி-சம்பல்-காலி-சிந்து ஆகிய நதிகளை இணைக்க, மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் போட்டிருக்கிறது மத்திய அரசு. ஆனால், தமிழக நதிகள் இணைப்பு குறித்து கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். சுற்றுச்சூழல் பிரச்னை மற்றும் செலவு காரணமாக இனி கங்கை - காவிரி இணைப்பு என்பது கனவுத் திட்டமாகவே போகும் வாய்ப்புதான் அதிகம். ராகுல் சிவப்புக் கொடி காட்டியிருப்பது அதைத்தான் சொல்கிறது.



- ப்ரியன்



* விழா நாயகர்

செப்: 9 கல்கி விழா!

அமரர் கல்கி எழுதிய 'காற்றினிலே வரும் கீதம்' பாடலும் ராஜாஜியின் 'குறையொன்றுமில்லை'யும் இன்று ஏறத்தாழ அனைத்துப் பாடகர்களும் கையாளும் பாடல்களாகிவிட்டன. எனினும் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவற்றைப் பாடியிருப்பதைக் கேட்டுப் பழகிய காதுகளுக்கு, பிறரது வடிவங்களை ஏற்பது ரொம்பவும் கஷ்டமே! ஆனால், இந்த இரு பாடல்களையுமே இஞ்சிக்குடி சுப்பிரமணியன் தமது நாதஸ்வர வாசிப்பில் கையாண்ட விதம் அலாதியான அழகாக இருந்தது. துளைக் கருவி வாசிப்பு என்கிற போதிலும் வார்த்தைகளைக் கவனமாகப் பிரித்து, பொருளின் பாவம் முழுமையாக வெளிப்படும்படி வாசித்தார் இந்த இளம் கலைஞர். அமரர் கல்கியின் 110வது பிறந்த நாளன்று, கல்கி விருதும் பரிசும் பெற்ற பிறகு கச்சேரி செய்து கொண்டிருந்தார் அவர். கூடுதலாக அன்று எம்.எஸ்.எஸ்ஸின் ஜன்ம நக்ஷத்திரம் வேறு! இஞ்சிக்குடி சுப்பிரமணியனின் இசை நிகழ்ச்சி அமரர் கல்கி, எம்.எஸ். ஆகிய இருவருக்குமே அர்ப்பணிக்கப்பட்டது போல் அம்சமாக அமைந்தது.


காற்றினிலே



கல்கி கிருஷ்ணமூர்த்தி தமிழிசைப் போராளியாக விளங்கியதை நினைவூட்டும் விதமாக, ஸாரங்கா ராகத்தில் விநாயகர் துதி முதல் வாழிய செந்தமிழ் வரையில் தமிழ்ப்பாடல்களாலேயே கச்சேரியை அமைத்திருந்தார் கலைஞர். கன்னட ராகத்தின் எளிமையும் இனிமையும் ஆலாபனையில் கனிந்தொழுக, தண்டபாணி தேசிகர் பாடல்; 'நம்பிக்கெட்டவர் எவரய்யா?' என்ற ஹிந்தோள ராக கீர்த்தனையில், குரலிசையின் மிடுக்கு ஒடுக்குகளை உள்ளடக்கிய கச்சிதமான சங்கதிகள்; பிரதான ராகமான தோடியில், அபூர்வ மனோதர்மமும், அசாத்திய கச்சிதமும், அசத்தலான கார்வைகளும் கோத்து நின்ற அழகு, துக்கடாக்களில் எட்டிப்பார்த்த ஷெனாயின் ஸ்பெஷல் எஃபக்ட் என்று ஒன்றரை மணி நேரத்தில் ஒன்றையும் விட்டு வைக்காமல் பொழிந்து தள்ளிவிட்டார் இஞ்சிக்குடி.



* நாடியெல்லாம் நாதம்...



* நாதஸ்வர இசை ரசிகர்!

வஞ்சனையின்றி அவர் தம் வித்வத்தை வெளிப்படுத்தியபோதிலும் 'காட்சிப் படுத்துதல்' துளியும் இல்லாத கௌரவத்துடன் மிளிர்ந்தது கச்சேரி. உடன் வாசித்த திருமீயச்சூர் ராமநாதன், தவிலில் துணை நின்ற நாங்கூர் செல்வகணபதி, பெரம்பலூரர் மணிகண்டன் ஆகிய மூவரும் இஞ்சிக்குடி இஞ்சினை இம்சிக்காமல் பின் தொடர்ந்த இணைப்புப் பெட்டிகள்!

வந்த கீதம்!



தனியாவர்த்தனத்தில் தவில் கலைஞர்கள் கணக்குப் புள்ளி வைத்து, நாதக் கோலமிட்டார்கள்!

சென்னை, பாரதிய வித்யா பவன் அரங்கில், கல்கி கிருஷ்ண மூர்த்தி நினைவு அறக்கட்டளை நடத்திய விழாவில் இறுதிவரை இசைக் கச்சேரியைக் கேட்டு ரசித்து மகிழ்ந்தார் நிகழ்ச்சித் தலைவர் என்.கோபாலஸ்வாமி. ஓய்வு பெற்ற தலைமைத் தேர்தல் கமிஷனருக்கு நாதஸ்வரக்

* விருது நாயகர்!

"சம்பளத்துக்கு இல்லை



"நாத இசையால எப்பவும் எங்க வீடு நெறைஞ்சிருக்கும். அப்பா சு.முத்துக்குமாரசுவாமி பிரபல நாதஸ்வரக் கலைஞர். சிட்சை பையன்கள் அதிகம். வீட்டில் ஏதேனும் ஒரு நேரத்தில் யாரோ ஒரு சிட்சை பையன் வந்தமர்ந்து வாசித்துக் கொண்டேயிருப்பான். வாசிப்பு சற்றுப் பிசகினால்கூட, அப்பா இல்லாத சமயங்களில், சமையலறையிலிருந்து அம்மா குரல் கொடுத்து அதனைத் திருத்துவார்கள். எங்கள் பூர்வீகத்தில் நாதஸ்வரம் வாசிப்பதில் நானும் என் தம்பியும் இருபதாவது தலை முறைக்காரர்கள்!" என்கிறார் இஞ்சிக்குடி மு.சுப்பிரமணியன்.

திருவாரூர் மாவட்டம் பேரளம் அருகே இஞ்சிக்குடி. சிறு கிராமம். அதன் பழைமைப் பெயர் சந்தன வனம். கிராமம் முழுக்க ஒரு காலத்தில் பரவலாக அத்தனை சந்தன மரங்கள். தற்போதும் உள்ளன, அங்கொன்றும் இங்கொன்றுமாக.

"பார்வதீசுவரர் சுவாமி சன்னிதியும், அதன் மண்டபத் தூண்களும் எனக்கான நாத இசை ஞானமூட்டிய தாய்மடிகள். சன்னிதி முன்பாக அமர்ந்து, என் பால்ய காலங்களில் நாதஸ்வரம் வாசித்தது பசுமையாக நினைவிருக்கிறது.

பால்ய காலத்தில் கோயில் பிராகாரங்களில் நாதஸ்வர இசை எதிரொலித்துக் கொண்டே

கலையில் ஆழ்ந்த ஈடுபாடு என்பது அவர் உரையாற்றிய போதே தெரிந்தது. சிறு வயது முதலே கோயில் விழாக்களில் நாதஸ்வர இசையைக் கேட்டு ரசித்த தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட அவர், நாதஸ்வர இசையே கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சிக்கும் பரவு தலுக்கும் பெரிதும் உதவியிருக் கிறது என்று எடுத்துக்காட்டி னார். இவரது சொந்த ஊர்,



✱ கல்கி அன்பர்களுக்கு நன்றி... கி.ரா..

தவில் மேதை மீனாக்ஷி சுந்த ரம் பிள்ளையின் ஊரான நீடா மங்கலம் என்பது மேடையில் அறிவிக்கப்பட்டபோது அவரது ரசனையின் ரகசியம் அம்பலமாயிற்று!

மற்றொரு ரகசியத்தை அம்பலப்படுத்தினார் வரவேற்புரை ஆற்றிய கல்கி ராஜேந்திரன்: "ஆண்டு தோறும் அறக்கட்டளைக்கு முதல் நன்கொடையாக

✱ பக்கவாத்தியக் கலைஞர்களுக்கு மரியாதை



சாந்தநாயகிக்காக!"



யிருக்கும். மறக்க முடியாத மகரந்த நாட்கள் அவை.

அதிகாலையில் கோயிலுக்குப் போய்விடுவேன். உச்சிக் காலம் வரைக்கும் வாசிப்பேன். அப்போ எங்களுக்குக் கோயில் சம்பளம் உண்டு. சாயரட்சை ஐந்தரை மணிக்குப் பூஜை. அதுக்குப் போனா அர்த்தஜாமம் வரை வாசிப்பேன். காலைல அம்மா தட்டுல சோறு போட்டு வைப்பாங்க. நாலு வாய் அள்ளிச் சாப்பிட்டிருப்பேன். கோயில்ல ஆஜர் மணி சப்தம் கேட்கும். அப்பா என்னை அதட்டுவார். பாதிச் சாப்பாட்டுல எழுந்து ஓடுவேன். அப்ப என் அப்பா சொல்வார்: 'நாம யாரும் சம்பளத்துக்காக வேலை பார்க்கலைடா. சாந்தநாயகிக்காக வேலை பார்க்கிறோம்!'

சாந்தநாயகி சன்னிதியில் எது பேசினாலும் எதிரொலி கேக்கும். இதுக்காகவே நான் அங்கே போய் நின்னு ரொம்ப நேரம் வாசிப்பேன். நான் வாசிக்கற நாதம் அடுத்த வினாடியே எனக்கும் கேட்கும். அப்ப என்னோட பிசகுகளை அடுத்த வாசிப்புல திருத்திக்குவேன்.

என்னதான் அப்பாகிட்டே கத்துக்கிட்டாலும், தனியா ஒரு குருநாதர்கிட்ட கத்துக்க வைக்கணும்னு அப்பாவும் அம்மாவும் முடிவெடுத்தாங்க. பதினொரு வயசுல, பழனி தேவஸ்தானம் நடத்தி வந்த நாதஸ்வர தவில் இசைக் கல்லூரியில் என்னைச் சேர்த்து

ஐயாயிரம் ரூபாய் என். கோபாலஸ்வாமியிடமிருந்து வருகிறது'' என்றார். அவரைப் போலவே அறக்கட்டளையின் மூலதன நிதிக்கு ஆண்டு தோறும் வாரி வழங்கிவரும் எல்லா 'கல்கி' அன்பர்களுக்கும் நன்றி தெரிவித்தார். நாதஸ்வர ரசிகரான கோபால ஸ்வாமி, தாம் அமரர் கல்கியின் ரசிகரும்கூட என்பதைத்



* இறை வணக்கம் செல்வி ஜனனி

தமது சொற்பொழிவில் வெளிப்படுத்தினார். ''கல்கி கிருஷ்ணமூர்த்தி ஓர் எழுத்தாளர் மட்டுமல்ல; அவர் ஒரு பத்திரிகையாளர், சமூகப் போராளி, திரைப்பட கதை வசனகர்த்தா, விமர்சகர்... இத்தனை பொறுப்புகளிலும் உயர் ரசனையும் உயர்நோக்கும் பேணி வளர்த்தவர்'' என கல்கி கிருஷ்ணமூர்த்தியை



* கல்கி அன்பர்கள்

விட்டாங்க. மூனு வருஷ டிப்ளோமா படிப்பு. அங்கே எனக்கு நாதஸ்வர ஆசிரியரா அமைஞ்சவர்தான் என்னோட குருநாதர் திருமாகாளம் வி.சோமாஸ்கந்தம்பிள்ளை. உலகின் மிகச் சிறந்த நாதஸ்வர ஆசிரியர்.

நாதஸ்வர இசை கற்றுத் தருவதில், புதிது புதிதான கோணங்களைச் சொல்லித் தருவதில், அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி. நான் இசைக் கல்லூரியில் சேர்ந்த ஒன்றரை வருஷத்தில், அவர் பணி ஓய்வாகிச் சென்று விட்டார். வேறு எவரிடமும் கற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. கல்லூரியிலிருந்து விலகினேன். 'சான்றிதழ் கிடைக்காது' என்றார்கள். 'பரவாயில்லை' எனச் சொல்லிவிட்டு, என் குருநாதர் வீடு தேடிச் சென்று அங்கு தங்கினேன். மீதம் ஒன்றரை ஆண்டுகள், அங்கேயே தங்கிப் பயின்றேன். என்னுடன் நாதஸ்வரம் பயின்ற நாற்பத்தொரு மாணவர்களில், கல்லூரி விட்டு விலகி தனியாக குருவிடத்தில் பயின்றவன் நான் ஒருவன் மட்டுமே. இஞ்சிக்குடி திரும்பியபோது என்னிடம் சான்றிதழ் கிடையாது. விடை பெறும்போது என் குருநாதர் 'உன் நாடி நரம்பு பூரா நாதம் நெறைஞ்சிருக்குடா அதைக் காப்பாத்திக்கோ... விருத்தி பண்ணிக்கோ!' என்றார்.

இதைவிடச் சிறந்த சான்றிதழ் வேறு என்ன?'' என்று சொல்லி நெகிழ்கிறார் இஞ்சிக்குடி சுப்பிரமணியன்.

செய்திச் சித்திரம்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



நினைவுகூர்ந்தார். 'இசைக் கச்சேரிகள் பரவலாக நடப்பது பெண்கள் முன்னேற்றத்துக்கு உதவும், அவர்கள் தங்கள் கூட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டு ஆண்களுக்குச் சமமாக அமர்ந்து சங்கீதம் கேட்பது போற்றுதலுக்குரியது' என்று அமரர் கல்கி பல்லாண்டுகளுக்கு முன்பே சிந்தித்து எழுதியதை நினைவு கூர்ந்தார் கோபாலஸ்வாமி.

வசனக் கவிதை நடையில் வாசித்தளிக்கப்பட்ட விருதுப் பத்திரத்தையும் பரிசையும் பெற்ற இஞ்சிக்குடி சுப்பிரமணியன், தமது பாதையையும் பயிற்சியையும் எளிதாக்கி வைத்த, தமக்கு முந்தைய கலைஞர்களின் சிறப்புக்குத் தலைவணங்கிப் பேசினார் ஏற்புரையில். சுப்பிரமணியனின் வாசிப்பைக் கேட்க பல முன்னணி இசைக் கலைஞர்கள் வந்திருந்தனர். விருது பெற்றவருக்கு மட்டுமின்றி விருதுத் தேர்வாளர்களுக்கும் கிடைத்த அங்கீகாரம் அது!




தொகுப்பு : **ஸ்ரீநி**

படங்கள் : **ஸ்ரீஹரி**



கல்கி



2009 செப்டெம்பர் 27
விரோதி புரட்டாசி 11
மலர் : 68
இதழ் : 9


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

ராகுல் வருகை; கலைஞரின் கர்ஜனை!

ராகுல் காந்தியின் தமிழ்நாடு வருகை குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்தி, தமிழக மக்களை ஈர்த்திருக்கிறது. "தி.மு.க.வின் குரலை அடக்க, தமிழகத்தில் எந்த சக்தியும் இல்லை" என்று கலைஞர் அவசர கர்ஜனை செய்ததே இதற்குச் சான்றுதான்! 'தனித்துப் போட்டியிடும் அளவுக்கு காங்கிரஸ் தமிழ்நாட்டில் வளர்ச்சியுற வேண்டும்' என்று ராகுல் கூறியதற்கான மறைமுக பதிலே கலைஞரின் இந்த கர்ஜனை!

ராகுல் காந்தியின் சுற்றுப்பயணத்தால் உடனடியாக காங்கிரஸ், தி.மு.க.வுக்குச் சவாலாக மாறிவிடப் போவது இல்லை. ஆனால், அவரது வருகை ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதால்தான் கருணாநிதியைப் பேச வைத்தது! ராகுல் காந்தி தமது சீரான முயற்சிகளைத் தொடருவாரேயானால், தமிழக காங்கிரஸ் இழந்த பலத்தை மீட்க முடியும். நாளையே இல்லாவிட்டாலும் நாளடைவில் தமிழ்நாட்டில் தனித்துப் போட்டியிடவும் முடியும்.

நேரு குடும்பத்து வாரிசு என்கிற முறையில் தமிழ்நாட்டு வாக்காளர்களுள் கணிசமானவர்களின் மனத்தில் ராகுல்காந்தி இடம் பெற்றிருக்கிறார். அவருக்குத் தமிழகம் தந்த வரவேற்பில் இது நிரூபணமாயிற்று. ஆனால், இந்தத் தனி நபர் ஆளுமை பலத்தை நம்பாமல், ராகுல் காந்தி, காங்கிரஸின் அமைப்பு பலத்தைப் பெருக்கவும் வலுப்படுத்தவும்தான் முயற்சி செய்ய வேண்டும். இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர் சேர்க்கை என்பது வெறும் எண்ணிக்கை பலத்தின் நிரூபணமாக நின்றுவிடக்கூடாது. அந்த மனித வளம்,





சமூகப் பணிகளுக்கும் மக்கள் நலத் திட்டங்களுக்கும் மடைமாற்றப்பட வேண்டும். அப்போதுதான் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் தேசப் பிரச்னைகளை நேரடியாக உணரும் அனுபவத்தை அடைவார்கள். இந்த அனுபவம் அவர்களுக்குள் பொதுநல நோக்கை வளர்த்து, மனத்துக்கும் உடலுக்கும் உரம் சேர்க்கும்; களப்பணி அனுபவத்தை அளிக்கும்; கட்சி என்பது பதவியை அடைவதற்கான மார்க்கம் என்பதை மாற்றி, ஜனநாயகப் பணிக்கான நுழைவாயில் என்பதைப் புரிய வைக்கும். இதன் மூலம் காங்கிரஸ் கட்சி மக்களிடம் மீண்டும் நெருங்கி வர முடியும்; இழந்த அரசியல் பலத்தை மீட்கவும் முடியும்.

வாரிசு அரசியலின் அடையாளமாக ராகுல் காந்தி விளங்கினாலும், அவரது அணுகு முறையிலும் சிந்தனையிலும் ஆரோக்கியமான வித்தியாசம் தென்படுகிறது. மக்களோடு மக்களாகப் பழக முனையும் ஆர்வம், நதி நீர் இணைப்புத் திட்டத்தை அரசியல் நிர்ப்பந்தத்துக்காக ஏற்காமல் மாறுபடும் துணிவு, அதற்குப் பதிலாக நவீன பயிர் வளர்ச்சி முறைகளைப் பரவலாக்க வேண்டும் என்கிற பொறுப்பான ஆலோசனை என்று பலவற்றைச் சுட்டிக் காட்டலாம். ஆனால், நாளை 'காங்கிரஸை மீட்டெடுத்த தலைவர்' என்று உலகம் ராகுல் காந்தியைச் சுட்டிக்காட்ட வேண்டுமானால், அவர் சில பொறுப்புகளை ஆற்றியாக வேண்டும்.

தமிழக காங்கிரஸில் ஏற்கெனவே உருவாகியுள்ள பல்வேறு அணித் தலைவர்களின் பார்வையும் பாதிப்பும் இளைஞர் காங்கிரஸ் மீது படியாமல் கவனமாகப் பாதுகாத்தாக வேண்டும்! முறையான உட்கட்சித் தேர்தல்கள் மூலமாக மட்டுமே இளைஞர் காங்கிரஸ் தலைவர்களும் செயல்வீரர்களும் தேர்வு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் அடுத்த தலைமுறையிலாவது கோஷ்டிகளற்ற காங்கிரஸை தமிழ்நாட்டில் நாம் காண முடியும்; அந்த காங்கிரஸ், தனித்து ஆட்சியைப் பிடிப்பது குறித்துச் சிந்திக்கவும் முடியும்!

அஞ்சலி

பால்ய-நதி!

ஒப்பனையற்ற பேச்சால், சிரிப்பு பூசிய சிந்தனையால் ஒவ்வொரு நாளும் ஒரு தகவலை 'விஷயதான'மாய் தமிழ் நெஞ்சங்களில் விதைத்திட்ட தென்கச்சி சுவாமிநாதனின் நினைவு போற்றும் விதமாய், கல்கி தீபாவளி மலர் - 2007ல் அவர் எழுதிய கட்டுரையில் சில பகுதிகள்...

● 1947 ஆகஸ்ட் 15. இது மறக்க முடியாத ஒரு நாள். அன்றைக்குத்தான் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது.

அன்றைக்குத்தான் நானும் 'ஜெயில்'க்குப் போனேன். ஆமாம்; அன்றைக்குத்தான் என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள்.

அப்போது எனக்கு ஐந்து வயது.

பள்ளிக்கூடத்துக்குப் போனால் [illegible] மிட்டாய் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்புறம்தான் தெரிந்தது - அடியும் கொடுப்பார்கள் என்று! அந்தக் காலத்தில் எல்லாம் ஆசிரியர் கையில் சாக்பீஸ் இருக்கிறதோ இல்லையோ... பிரம்பு ஒன்று கட்டாயம் இருக்கும்.

அந்தப் பிரம்பு எவ்வளவு கொடுமையானது



என்பது எங்களின் உள்ளங்கைகளுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் காலத்தில் எல்லாம் அப்படி அடிக்க முடியாது. அடித்தால் அதன் விளைவு வேறு மாதிரியாக இருக்கும். ● ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளை நான் ஆடுதுறை குமரகுருபரசுவாமிகள் உயர்நிலைப் பள்ளியில் படித்தேன். படிப்பில் நான் ஒரு சராசரி மாணவன்தான். மதிப்பெண்கள் மிகவும் குறைவாக வாங்குவது குறித்து என் தகப்பனாருக்குக் கவலை. ஆகவே, ஒரு நாள் என்னை அருகில் கூப்பிட்டு வைத்துக் கொண்டு நாசூக்காக ஒரு புத்திமதி சொன்னார்.

''நீ எப்போதும் உன்னைவிட அதிகமாக மார்க் வாங்குகிற பையன்களோடு பழக வேண்டும்!'' என்றார்.

நான் கொஞ்சம் யோசித்துவிட்டுச் சொன்னேன்.

''அப்பா! நீ சொல்றது சரிதான். ஆனால், என்னைவிட மோசமாக மார்க் வாங்குகிற பையன்கள் வேறே யார்கிட்டே பழகுவாங்க... அதுக்காகத்தான் நான் இருக்கிறேன்!'' இதற்குப் பிறகு என் தகப்பனார் எனக்குப் புத்திமதி சொல்வதையே விட்டுவிட்டார்.

● ஒன்பதாம் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்பு வரை நான் கும்பகோணம் பாணா துறை உயர்நிலைப் பள்ளியில் [illegible] படித்தேன். அங்கே [illegible] கிருஷ்ணமூர்த்தி எங்கள் ஆசிரியர்.

வானொலியில் நான் 'இன்று ஒரு தகவல்' சொல்வதைக் கேட்டுவிட்டு அவர் எழுதிய கடிதத்தில், ''தினமும் நீ சொல்றதைக் காது கொடுத்துக் கேட்கிறேன்!'' என்று எழுதியிருந்தார். உடனே நான் மனசுக்குள் சொல்லிக் கொண்டேன்:

''சார்! படிக்கிற காலத்தில் என் காது உங்ககிட்டே இருந்தது... இப்போ உங்க காது என்கிட்டே இருக்கு!''

அவரை இப்போது பார்த்தாலும் என் காதுகள் நடுங்கும்.

புன்னகைக் கீற்று!

"சிற்றிதழ் என்கிற பெயர்தானே தவிர, இதை வெளியிடுவதில் உள்ள சிரமங்கள், மற்ற இதழ்களுக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல'' என்கின்றனர் க. அம்சப்ரியா, செ.ரமேஷ்குமார் இருவரும். இவர்கள் பதினொரு வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து வெளிவரும் 'புன்னகை' சிற்றிதழின் ஆசிரியர்கள்.



✱ க. அம்சப்ரியா



இரு மாதங்களுக்கு ஒருமுறை கவிதை இதழாகப் 'புன்னகை'ப்பது ஆனைமலையிலிருந்து.

தனியார்ப் பள்ளியொன்றில் தமிழாசிரியராகப் பணியாற்றி வரும் அம்சப்ரியா, அறிவொளி இயக்கப் பணிகளிலும் இயங்கி வந்தவர்.

"அறிவொளி இயக்கத் தொடர்பில் எனக்குக் கிட்டிய நண்பர் செ.ரமேஷ்குமார். எங்கள் எண்ணங்கள் ஒரே அலைவரிசையில் மிதக்க, 'கேட்பினும் பெரிது கேள்' எனும் நெம்புகோல் முழக்கத்துடன் உதயமானது புன்னகை சிற்றிதழ்'' என்கிறார் அம்சப்ரியா.

"தொடக்கத்தில் காற்று எனும் சிற்றிதழ் உருவானது. ஆனால், பொருளாதார இடையூறுகளினால் அச்சகத்தினுள்ளேயே காற்று சிறைப்பட்டது. அடுத்து மூன்று மாதங்கள் மட்டுமே வெளியான 'சூரிய வீதி' மாத இதழ். அதன்பின் 'வேள்வி' காலாண்டிதழாக நடத்தப்பட்டது. கவிதைகளோடு சிறுகதைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்த 'வேள்வி' நான்கு இதழ்களோடு நின்றுபோனது.

இந்த அனைத்து இதழ்களின் தயாரிப்பிலும் உதவிய கவி நண்பர்கள் கோவிந்தராஜ், கனகராஜன், காரை சந்திரசேகரன் ஆகியோரின் பங்கும் குறிப்பிடத்தக்கது'' என நினைவு கூர்கிறார்.

புன்னகையின் நோக்கம், முயற்சிகள்?

"புதிதாகக் கவிதை எழுதத் தொடங்குபவர்களுக்கு இடமளித்து, கவிதைத் தளத்திலிருந்து அவர்களை அடுத்தடுத்த நிலைகளுக்கு நகர்த்திச் செல்வதே எங்கள் நோக்கம். இந்நோக்கம் நிறைவேற ஐந்தாண்டுகளுக்கு முன்பு, பொள்ளாச்சி, ஆனைமலையைச் சுற்றியுள்ள சில கிராமங்களைத் தேர்வு செய்தோம். களப்பணியில் பத்து இளைஞர்கள் வீடு வீடாகச் சென்று புன்னகை சிற்றிதழ் குறித்து விரிவாகப் பேசினோம். ஒவ்வொரு கிராமத்திலும் பத்து பன்னிரண்டு சந்தாதாரர்கள் இணைந்தார்கள். அவர்கள் இன்றளவும் புன்னகையின் சந்தாதாரர்கள்.

வரவிருக்கும் புன்னகையின் அறுபதாவது இதழ், நவீனக் கவிதைகளின் போக்கு குறித்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய கவிதைப் பெட்டகமாகத் திகழும்'' என்னும் அம்சப்ரியாவின் புன்னகையில் நம்பிக்கையின் கீற்று!

செய்திச் சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

"யோகி-சிங்கம்"



முறுக்கேறிய உடம்பும் சிவப்பேறிய கண்களுமாக இயக்குநர் அமீரின் தோற்றத்தில் புது மாற்றம். குடிப்பதற்காகத் தண்ணீர் பாட்டிலை எடுத்தால்கூட தம் புள்ஸ் தூக்கியதுபோல நரம்பு புடைக்கிறது. எல்லாம் 'யோகி'க்கான உழைப்பு. "ஹீரோன்னு களம் இறங்கிய பிறகு கொஞ்சமாவது மெனக்கெட்டுத்தானே ஆகணும். அதான் பத்தியச் சாப்பாடு, ஜிம் பயிற்சின்னு என்னோட உடம்பைப் பார்த்துக்க வேண்டியதாகிவிட்டது" - ஜிம் போய் வந்த சூட்டோடு 'யோகி' பற்றிச் சுடச்சுடப் பேசுகிறார்.

"சென்னையில் உள்ள குடிசைப் பகுதிதான் கதைக்களம். அங்கு வசிக்கும் யோகேஷ்வரன் என்கிற யோகியின் உணர்வுகள்தான் கதை. அதிகமான சென்னைவாசிகள் எட்டுக்கு எட்டு அறையில் நடத்தும் வாழ்க்கையையே தனிப்படமாக எடுக்கும் அளவுக்குச் சுவாரஸ்யம் மிகுந்தது. பசி எடுக்குதுன்னு தெரிஞ்சா சூழ்நிலை, சுற்றியிருக்கும் மனிதர்கள் என எதையும் யோசிக்காமல் அடித்துப் பிடுங்கிச் சாப்பிடும் கேரக்டர்தான் யோகி. சிங்கம் மாதிரின்னு கூடச் சொல்லலாம். இவனோட எந்த நேரமும் சுற்றிக்கொண்டிருக்கும் மூணு பேர்ல ஒருத்தனா கவிஞர் சினேகன் நடிச்சிருக்கார். மற்ற ரெண்டு பசங்களை குடிசைப் பகுதியிலிருந்தே பிடிச்சு நடிக்க வெச்சிருக்கோம். ராஜசுலோச்சனா என்னும் கேரக்டரில் மதுமிதா நடிச்சிருக்காங்க. படம் வந்தபிறகு பெரிய அளவில் அவருக்குப் பேர் கிடைக்கும். இது தவிர இருபது புதுமுகங்களும் நடிச்சிருக்காங்க."

நடிகனா கேமரா அனுபவம்?

"இந்த அனுபவம் எனக்குப் புதுசு தான். எல்லாரையும் வேலை வாங்கியபோது நடிகர்களின் சிரமங்கள் அவ்வளவா தெரியாது. இப்போ நானே களத்தில் நின்றபோதுதான் அதிலுள்ள கஷ்டங்கள் புரிந்தன. எனக்குள் இருக்கும் இயக்குநர் மூளை, நடிகர் அமீரைத் துரத்தித் துரத்தித் தொந்தரவு கொடுத்ததையும் மறக்க முடியாது. எல்லாம் ரெடியாகி, இயக்குநர் சிவா டேக், ஆக்ஷன் சொன்னபிறகு காமிரா சரியா இருக்கா, டிராலி கரெக்டா போகுதா, யாராவது குறுக்கே போறாங்களான்னு பார்க்க ஆரம்பிச்சுடுவேன். அப்புறம் இயக்குநர் சிவா ஓடிவந்து, 'நீங்க இப்போ ஹீரோ; நடிப்பதைத் தவிர மற்றதைப் பற்றி யோசிக்காதீங்க'ன்னு சொல்வார். அப்புறம் கொஞ்ச நாளில் அது சரியாயிடுச்சு."

இவ்வளவு நாள் எடுத்துக்கொண்டது ஏன்?

''இந்தக் கேள்வியைக் கேட்காதவர்களே இல்லை. சென்னை லொகேஷனில் படப்பிடிப்பு நடத்த அனுமதி வாங்குவதற்குள் படும் பாட்டையே ஒரு கதை எழுதலாம். உதாரணத்துக்கு சென்னை சிட்டி சென்டரில் நடந்துபோற மாதிரி ஒரு ஸீன். இதுக்கு பர்மிஷன் கேட்கப்போனபோது, முதலில் கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க. கெஞ்சிக் கூத்தாடி பர்மிஷன் வாங்கினா, பகலில் எடுக்க முடியாதுன்னு கண்டிஷன் போட்டாங்க. அப்புறம் இரவு பத்துமணிக்கு மேலதான் எடுத்தோம். ஒரு மணி நேரத்துக்கு நாற்பதாயிரம் ரூபா வாடகை. நடந்துபோற ஸீன் மட்டும் அஞ்சு மணிநேரம் எடுத்தோம். அப்புறம் கடைக்குள்ள போற மாதிரி ஸீன் எடுக்க கடை ஓனர் தனியா வாடகை கேட்கிறார். படத்துல முக்கியத்துவம் இல்லாத சின்ன ஸீனுக்கே சில நாட்களும் பல லட்சங்களும் செலவானபோது, படம் முழுகம் எடுக்க எவ்வளவு சிரமப்பட்டிருப்போம்னு யோசிங்க. ஒருவழியா படம் முடிஞ்சு மற்ற வேலைகள் நடந்துக்கிட்டிருக்கு. 11 கோடி ரூபாய் செலவில் தயாராகிவிட்ட 'யோகி'யை தீபாவளிக்குப் பார்க்கலாம்.''

உடல் ரீதியா எடுத்துக்கொண்ட சிரமங்கள்?

''மூணு வேளையும் அசைவம் சாப்பிடுகிற ஆளு நான். 'யோகி'க்காக பச்சைக் காய்கறி, சப்பாத்தி, அவித்த முட்டையில் வெள்ளைக் கரு மட்டும்னு என்னோட மெனு பத்தியமாகி, மூலிகை வைத்தியர் வீட்ல

மாதிரி!''



இயக்குநர் அமீர் பேட்டி

இருக்கிற மாதிரியான ஃபிலிங் வந்துடுச்சு. ஜிம்முக்குப் போனா சரியா எட்டு மணி நேரம் தூங்கணும். அப்படியே தூங்கப்போனா, உடம்பில் உள்ள செல்களெல்லாம் விழித்துக்கொண்டு நீ எப்படித் தூங்கறேன்னு பார்த்துடுவோங்கிற மாதிரி விறுவிறுன்னு இருக்கும். வெயில்ல காயந்து தோலெல்லாம் கறுத்து இறுகிப் போச்சு.''

ஆக்‌ஷன் காட்சிகளில் நடித்தபோது அடிபட்டுச்சாமே?

''ஆமா, ஹாலிவுட் தரத்துக்குச் சண்டைக் காட்சிகளைப் படமாக்கியுள்ளோம்.



சீர் மேவும் கூவத்துல
சீரழியும் நாத்தத்துல
சிங்காரச் சென்னை போற்றி..!

இரண்டு சண்டைக் காட்சிகளைப் படமாக்க மட்டும் ஐம்பத்தொரு நாட்கள் எடுத்துக்கொண்டோம். 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தை இருபது நாட்களிலேயே எடுத்திருக்காங்க. அந்தச் சாதனையை 'யோகி' முறியடிப்பதுபோல ஒரே ஒரு சண்டைக் காட்சியை முப்பது நாட்கள் எடுத்துள்ளோம். (சொல்லிவிட்டுச் சிரிக்கிறார்) இதுக்கு என்ன அவசியம்னு கேட்டா, தரமா, ரியலா இருக்கணும் என்கிற மெனக்கெடல்தான்.''

யுவனோட வொர்க் எப்படி?

''வழக்கம்போலவே ரொம்பவே பிரமாதம்னுதான் சொல்லணும். என்னுடைய படங்களுக்கு இசையமைக்கும்போது மட்டும் மாடர்ன் இளையராஜாவா மாறிடுவார் யுவன். நான் என்ன மாதிரி விஷுவல் பண்ணுவேங்கிறத புரிந்துகொண்டு ரீரெக்கார்டிங்கிலும் பாடல்களிலும் அந்த மூடைக் கொண்டு வந்துவிடுவார். யோகில மொத்தம் நாலு பாட்டு.

நானும் ஒரு பாட்டு பாடியிருக்கேன். 'பருத்தி வீரன்' படத்துல 'ஏய் டண்டக்கா' என்னும் குரலை நான்தான் கொடுத்தேன். அதை ஞாபகம் வைத்துக்கொண்டு இதுல என்னைப் பாடவச்சுட்டார்.''

'சீர்மேவும் கூவத்துல/ சீரழியும் நாத்தத்துல/ சிங்காரச் சென்னை போற்றி...'

என்று தொடங்கும் பாடலில் சினேகனும் பாடியுள்ளார். என்னோட படங்களில் ஒவ்வொரு பாட்டுக்கும் யுவன் ஒரே ஒரு டியூன்தான் போடுவார். இந்தப் படத்திலும் அதேமாதிரிதான் நடந்தது.''

இயக்குநர் சுப்ரமணியசிவா?

''திருடா திருடி' படம் எனக்குப் பிடித்த படம். எல்லாரும் அந்தப் படத்துல 'மன்மதராசா' பாட்டைப் பற்றித்தான் பெரும்பாலும் பேசினாங்க. ஆனா, அது ரொம்ப அழகான ஒரு காதல் கதை. அதை ஜாலியா சொல்லியிருந்தார். சிவாவின் திறமையைப் புரிந்துகொண்ட அடிப்படையிலேயே அவரது இயக்கத்தில் நடித்தேன். படம் வந்த பிறகு சுப்ரமணியசிவா இன்னொரு கோணத்தில் தெரிவார். ''

-மகிமைராஜன்

அமுதசுரபி

மாத இதழ்

(Prop. Shriram Trust)

62

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஆசிரியர்: டாக்டர் **திருப்பூர் கிருஷ்ணன்**, எம்.ஏ., பி.எச்.டி

அக்டோபர் இதழ்

தீபாவளிச் சிறப்பிதழ்

தூரிகையின் கோலாகலம்...
எழுதுகோலின் கொண்டாட்டம்...

- அக்டோபர் இதழின் வழக்கமான அம்சங்களும் இணைந்து அக்டோபர் அமுதசுரபி இதழே மாபெரும் சிறப்பிதழாக, வண்ண மயமாக மலர்கிறது. ஆண்டுதோறும் வெளிவரும் தீபாவளி மலரின் அதே பிரம்மாண்டம்.
- எண்ணற்ற படைப்பாளிகளின் எண்ண ஓவியங்களும் பிரபல ஓவியர்களின் வண்ண ஓவியங்களும்.
- அமுதசுரபிக்கென்றே கோடிட்டு தீட்டிய பிரத்தியேகமான கலைநயம் கமழும் பலவண்ண அட்டைப்படம்...
- ஆன்மீகம், இசை, நடனம், ஓவியம், பழைய இலக்கியம், நவீன இலக்கியம், கல்வி, மருத்துவம், அறிவியல் என இல்லாத துறை இல்லை. பாதுகாக்க வேண்டிய கலை இலக்கியப் பொக்கிஷம்.



சந்தா விவரம் (உள் நாடு)		
1 ஆண்டு	5 ஆண்டு	ஆயுள் சந்தா
ரூ.250/-	ரூ.1250/-	ரூ.5000/-
வெளிநாடு ஆண்டுச் சந்தா ரூ.2000/-		
சிறப்பிதழ்கள் (தீபாவளிச் சிறப்பிதழ்), தபால் மற்றும் இதர செலவுகள் உட்பட		

தீபாவளிச் சிறப்பிதழ்

முந்நூறுக்கும் மேற்பட்ட பக்கங்கள்

விலை ரூ.100/- மட்டுமே

AMUDHASURABI


A-7, 2nd Avenue, Anna Nagar East, Chennai-600102.

Tel : 26286869 **Telefax :** 26283366 **E-Mail :** amudhasurabi@gmail.com

For Placing Advertisement Please Contact : L. Kumaresan, Mobile : 9840362648 or through email

நூலகத்துக்கு வெளியே நீண்ட வகுப்பறை. மாணவர்கள் வந்தமர்கிறார்கள். பொது அறிவு மற்றும் சமூக கலை இலக்கியப் புத்தகங்கள் ஒவ்வொருவருக்கும் தரப்படுகிறது. வாசித்து குறிப்புகள் எழுதிக் கொள்கிறார்கள். ஈரோடு, மாணிக்கம் பாளையம் அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் தமிழ், ஆங்கில, கணித, சமூக அறிவியல் மற்றும் இதர பாட வகுப்பு களைப் போல, இது நூலக வகுப்பு.

''தமிழ்நாட்டிலேயே அரசு மேனிலைப் பள்ளியில் நூலக வகுப்பு நடத்தப்படுவது இங்கு மட்டுமே. பத்து பன்னிரண்டாம் வகுப்புகள் தவிர ஏனைய வகுப்பு கள் ஒவ்வொன்றுக்குமாக வாரத் தில் இரண்டு நாட்கள் நூலக வகுப்புகள் நடக்கின்றன. இது மாணவர்கள் மத்தியில் தொடர்ந்து வாசிக்கும் பழக்கத் தையும், மனோபாவத்தையும் அதிகரிக்கச் செய்யும்!'' என் கிறார் மிகச் சிறந்த நூலகருக் கான விருது பெற்ற நட ராஜன்.



* நூலக வகுப்பில்...

''அரசு மேனிலைப் பள்ளிக்கென மகாராஜா கல்வி நிறுவனங்களின் தலைவர் பரமசிவம், பதினேழு லட்ச ரூபாய் செலவில் புதிய வகுப்பறைகள் கட்டித் தந்துள்ளார். சக்தி மசாலா நிறுவனத்தின் சக்தி தேவி அறக்கட்டளை 'வழிகாட்டி' எனும் மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் எமது பள்ளியைத் தத்தெடுத்திருக்கிறது. ஒரு லட்ச ரூபாய்க்குப் புத்தகங்கள் தந்து, நூலக நிர்வாகச் செலவுகளை சக்தி மசாலா நிறுவனமே ஏற்றுக் கொண்டுள்ளது. பள்ளியின் சுற்றுச்சூழல் தரமும், மாணவர்களின் கல்வித் தரமும் மேம்படுவதற்கு, நன்கொடையா ளர்கள் பலரும் உதவி செய்து வருகின்றனர். கடந்த இரண்டு மாதங்களாக எமது பள்ளியில் 'வெள்ளித்திரையில் பள்ளிப்பாடம்!' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம்'' என்கிறார் தலைமை யாசிரியர் ராஜமாணிக்கம்.

மாணவர்களுக்கென அமைக் கப்பட்ட ஒலி ஒளி வடிவ வசதி கொண்ட அரங்கில், எழுபது எம்.எம். அகன்ற திரை. எதிரே தரையில் மாணவர்கள். அவர்களுக் குப் பின்னே, ஒரு டேபிளில் லேப்டாப். எல்.சி.டி. புரொஜக்டர். வெள்ளித்திரையில் பள்ளிப் பாடத் திட்ட ஆசிரியர். அவர் கையில் ஸ்பீக்கர் வித் மைக். ஆங்காங்கு ஒலிப்பெருக்கிப் பெட்டிகள். மின்





● ராஜமாணிக்கம்

விசிறிகள். அறையில் இருள். அகண்ட திரையில் ஒளி.

"ஆறாம் வகுப்பு முதல் ப்ளஸ் டூ வகுப்பு மாணவர்கள் வரை அவரவர்க்கான நேரங்களில் 'வெள்ளித்திரையில் பள்ளிப் பாடம்' நிகழ்த்தப்படுகிறது. வகுப்பறையில் பாடம் கேட்பதற்கும், இங்கு அகன்ற திரையில் குறிப்பிட்ட பாடங்களை ஒலி-ஒளி வடிவில் கேட்கவும் பார்க்கவும் நிறைய வித்தியாசம். மனத்தில் சட்டென பதிந்துவிடுகிறது. மாலை நேரத்தில் ஸ்போக்கன் இங்கிலீஷ் திரையிடப்படுகிறது. 'சிடி'யில் பேசுவோர் எளிய முறையில் ஆங்கிலம் பேசுகின்றனர். அரசு பள்ளியில் படிக்கும் நாங்கள் இத்தகைய வசதிகளை கனவிலும் எதிர்பார்க்கவில்லை!'' எனக் கூறுகின்றனர் மாணவர்கள்.

''அரசு தந்துள்ள லேப்டாப், எல்.சி.டி. புரொஜக்டர், கலர் டீ.வி., டி.வி.டி. பிளேயர் இவற்றுடன் நன்கொடையாளர்களின் உதவியுடன் இத்திட்டத்தினை எமது பள்ளி நிர்வாகம்,

வெள்ளித்திரையில் பள்ளிப் பாடம்!



● திரையில் பாடம்...

இதரப் பள்ளிகளைக் காட்டிலும் விடாது செயல்படுத்தி வருவது எமது பள்ளியின் தனிச் சிறப்பு!'' எனக் கூறுகின்றனர் முதுகலை இயற்பியல் ஆசிரியர் வி.நடராஜன், முதுகலை தாவரவியல் ஆசிரியர் பூபதி. இவர்கள்தான் கூடுதல் பணியாக, வெள்ளித்திரை பள்ளிப்பாடத் திட்ட ஆசிரியர்கள்.

"பத்தாம் வகுப்பு, ப்ளஸ் டூ பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதலிடத் தேர்ச்சி. பத்தாம் வகுப்பில் 98 சதவிகிதம் தேர்ச்சி. ப்ளஸ் டூவில் 95 சதவிகிதம். அரசு பள்ளிகளில் சிறந்த தேர்ச்சி, ஏழை எளிய மாணவர்களுக்கான கல்வித் தொண்டு, பல்துறை ஊக்கம் இவற்றின் அடிப்படையில் ஐ.எஸ்.ஓ.2008 தரச்சான்று பெற்றுள்ளது எமது பள்ளி!'' என்கிறார் தலைமையாசிரியர் ராஜமாணிக்கம்.

செய்திச் சித்திரம் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

கதை:

தென் தமிழகத்தில் 'சாமியாடிகள்' வெகு பிரசித்தம். இவர்களுடைய அருள் வாக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் வேத வாக்கு. 'கோடாங்கி' குறும்படத்தில், சாமியாடிகள் ஊர்ஊராகப் போய் குறி சொல்கிறார்கள். தனிப்பட்ட மனிதர்களுக்கான ஆருடம் அல்ல அது. அவர்கள் சொல்வது, ஒட்டுமொத்த மனித சமுதாயத்துக்கான எதிர்காலம். அதிலும் குறிப்பாக நாம் அன்றாடம் பயன்படுத்தும் தண்ணீரைப் பற்றி விலாவாரியாகப் பேசுகிறார்கள். ஏரி, குளம், கண்மாய்கள் மாசுபட்டுவிட்டன. நிலத்தடி நீர் குறைந்து வருவதற்கான காரணம் என்ன?

பாலைவிட நீரின் விலை அதிகமாகப் போகிறது. நமக்கு ஏற்படும் பெரும்பாலான நோய்களுக்கான காரணம் அசுத்தமான தண்ணீர்... என்று மக்கள் கூட்டத்தைத் திரட்டி, விலாவாரியாகப் பேசுகிறார்கள் இந்த சாமியாடிகள்.

இயக்குநர் கே. ரங்கநாதன்

திரைக்கதை அமைத்து, கூடவே ஒளிப்பதிவும் செய்திருக்கிறார். தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையைச் சேர்ந்தவர். ஏற்கெனவே, 'விதை நெல்', 'ஒரு ஊர்ல ஊரணி' போன்ற பல குறும்படங்களை இயக்கியிருக்கிறார். இவர் இயக்கியிருக்கும் 'வள்ளுவமே வாழ்க்கை' என்ற படம் திருப்பூர் அரிமா சங்கத்தின் சிறந்த குறும்படத்துக்கான பரிசைப் பெற்றிருக்கிறது. கைபேசி எண்: 9443795885.



பாலுசத்யா

'கோடாங்கி'க்கு வலு சேர்த்தவர்கள்:

ரோஸ் முகிலன் - கதை, வசனம்:

இவர் எழுதிய மதுரை வட்டார மொழி வசனத்தை, ஒரு இடத்தில் கூடப் பிறழாமல் அதன் ஏற்ற, இறக்கத்தோடு எல்லா பாத்திரங்களும் அச்சு அசலாகப் பேசுகிறார்கள். பிரபல திரைக்கலைஞர்கள் சண்முகசுந்தரம், பெரிய கருப்புத் தேவர்... போன்றவர்கள் நடித்திருந்தாலும், அவர்களையும் தாண்டி சாமியாடிகள் மனத்தில் நிற்கிறார்கள்.



'நீர்'தாங்க சாமி!

ஆனந்த் - படத் தொகுப்பு :

வெகு கச்சிதமாக இவருடைய கத்திரி வேலை பார்த்திருக்கிறது.

இசை - செல்வா:

உறுமியும், தாரை தப்பட்டையும், மேளச் சத்தமும் கிராமத்துத் திருவிழாவுக்கான எஃபெக்ட்டைக் கொண்டு வந்துவிடுகிறது.

என்ன சொல்கிறார் ரங்கநாதன்?

இந்தப் படத்துக்காகக் கிட்டத்தட்ட ஐயாயிரம் பேரோட வாழ்ந்திருக்கோம். அது வித்தியாசமான அனுபவம். கிராமம், கிராமமாப் போயி இயல்பா மக்களோட, மக்களா சேர்ந்து நின்னு படம் பிடிச்சோம். உலகத்தைப் பொறுத்தவரை 'நீர்'தான் சாமி. அது மாசுபடுறதுக்குக் காரணமே பொது ஜனங்கள்தான்.

அவங்களைத் திட்டி உறைக்கிற மாதிரி சொன்னாதான் புரியும். ஆனா, அவங்களை எப்படித் திட்டுறது? அப்போதான் இந்த சாமியாடிகள் யோசனை வந்துச்சு. சாமி என்ன சொன்னாலும் மக்கள் கேட்டுப்பாங்க. அதுதானே நம்ம பாரம்பரியம்!

விமர்சனமாகச் சில வரிகள்:

நாற்பது நிமிடங்கள் என்பது குறும்படத்துக்கு ரொம்ப அதிகம். ஆனால், சித்திரைத் திருவிழா, அச்சு அசல் கிராமங்கள், மீதமிருக்கும் மண்வாசனையைச் சுமந்த மனிதர்கள், இசை, சாமியாடிகள், அற்புதமான ஒளிப்பதிவு எல்லாம் சேர்ந்து படத்தோடு நம்மை ஒன்ற வைத்துவிடுகின்றன. இது ஒரு பிரசாரப் படம் என்ற உறுத்தல் மட்டும் கடைசிவரை குறைய மாட்டேன் என்கிறது. ⊙



* ரங்கநாதன்

20-20 ஆட்டங்கள் ஒட்டுமொத்த கிரிக்கெட்டையும் தன் வசப்படுத்தி விடுமோ என்கிற பெரிய அச்சம் சமீபகால மாக ஏற்பட்டிருக்கிறது. டெஸ்ட் கிரிக்கெட்டின் ஆயுள் பற்றி ஓயாது பேசிவந்த கிரிக்கெட் உலகம், இப்போது அவசர அவசரமாக ஒருநாள் கிரிக்கெட்டின் போக்கு பற்றி மிகத் தீவிரமாக விவாதித்து வருகிறது. ரசிகர்களிடம் ஒருநாள் ஆட்டம் குறித்த அசிரத்தை வருவதற்குமுன், அதைப் புதுமாப்பிள்ளைபோல் சிங்காரிப்பதற்கான ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன.

ஆஷஸ் தொடரின் வரவேற்புக்குப் பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டின் ஆயுள்மீது எல்லோருக்கும் சிறிது நம்பிக்கை வந்துவிட்டது. ஆனால் ஒருநாள் போட்டிகளை என்ன செய்து தேற்றலாம் என்று இப்போது கிரிக்கெட் வல்லுநர்கள் ஆழ்ந்த யோசனை கொண்டுள்ளனர். சச்சின் சொல்கிறார்: ''ஆளுக்கு இரண்டு 25 ஓவர்கள் ஆடலாம். முதலில் ஒரு அணி 25 ஓவர் ஆடி முடித்தபிறகு எதிரணி அடுத்த 25 ஓவர்கள். இப்படி ஆடுவதால் டாஸினால் உண்டாகும் லாபநஷ்டங்கள் குறைக்கப்படும்'' என்கிறார். சர்வதேச கிரிக்கெட் வாரியமும் சச்சினின் யோசனைக்குக் காது கொடுத்திருக்கிறது. உண்மைதான்; இலங்கையின் பிரமதேசா மைதானத்தில் டாஸில் தோற்றாலே மேட்ச்சில் தோற்றதாக எண்ணிக்கொள்ள வேண்டியதுதான். மீதி ஆட்டம், 'மேன் ஆஃப் தி மேட்ச்சை'த் தீர்மானம் செய்வதற்காக மட்டுமே நடத்தப்படுகிறது.

ஆனால் சச்சினின் யோசனையில் பெரிய சிக்கல் இருக்கிறது. முதலில் ஆடும் அணி 25 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 100 ரன்கள் எடுக்கிறது என்று வைத்துக்



உயிர்பெறுமா

‘ஒரு நாள்’?

ச.ந.கண்ணன்



கொள்வோம்.

அடுத்ததாக ஆடும் அணியில் ஷேவாக், தில்ஷன் போன்ற வீரர்கள் தொடக்க ஆட்டக்காரர்களாக இருந்தால் பதினைந்தே ஓவர்களில் 100ஐக் கடந்துவிடுவார்கள். பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? சச்சினின் மாற்று யோசனையில் இப்படி நிறைய குழப்பங்கள் இருக்கின்றன. 40 ஓவர்களாகக் குறைக்கலாம் என்கிறார் கும்ப்ளே. இரண்டு வருடங்களில் அதுவும் அலுப்பு தட்டிவிட்டால் 30, 20 ஓவர் வரை குறைக்கவேண்டி வருமா?

1996 உலகக்கோப்பை ஒருநாள் போட்டியில்தான் சச்சின் என்கிற மாபெரும் மேதையை முழுவதுமாக அடையாளம் கண்டு கொண்டது கிரிக்கெட் உலகம். எனவே மைதானத்துக்கு வெளியே நடக்கிற மாற்றங்களைவிட மைதானத்துக்கு உள்ளே தகுந்த மாற்றங்களைக் கொண்டுவந்தால் ஒருநாள் கிரிக்கெட் நீர்க்காயுசாக இருக்கும். ஷூ லேஸ் உயரத்துக்குக் கூட பந்து எழாத பிட்ச்சுகளை முதலில் அடியோடு ஒழிக்கவேண்டும். பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பளிக்கும் பிட்ச்சுகள் கட்டாயமாக்கப்பட வேண்டும். இரண்டாவது, மூன்றாவது பவர் பிளேக்களை இருபதாவது ஓவருக்குப் பிறகு இடைவெளி விட்டுப் பயன்படுத்தினால் அந்தச் சமயங்களில் நிகழும் ஆமை ஆட்டங்களை ஒழிக்கலாம். முக்கியமாக, அடுத்தடுத்த நாட்களில் ஆடப்படும் ஆட்டங்கள் ஒழிக்கப் பட வேண்டும் (இந்திய கிரிக்கெட் வாரியம் தலையிட்டாலும்கூட). ○

“ஷூ லேஸ் உயரத்துக்குக்கூட பந்து எழாத பிட்ச்சுகளை முதலில் அடியோடு ஒழிக்க வேண்டும். பந்து வீச்சாளருக்கு வாய்ப்பளிக்கும் பிட்ச்சுகளைக் கட்டாயமாக்க வேண்டும்!”



மதுரை சம்பவம்

மற்றுமொரு மதுரை படம். அதாவது அடிதடி, ரவுடியிஸம், பஞ்ச் டயலாக், பதற வைக்கும் கொலை, பழிவாங்கத் துடிக்கும் ஹீரோ, ஹீரோவுக்குக் கண்மூடித்தனமாக முட்டுக்கொடுக்கும் கதை. என்கவுன்டரில் போட்டுத் தள்ளும் போலீஸ் காதலியின், ஹிட் லிஸ்ட்டில் காதலன் (ஹீரோ) இருப்பது சற்றே நிமிர வைக்கும் வித்தியாசம்.

ஹீரோ ஹரிக்குமார் பரவாயில்லை; பாஸ் மார்க் வாங்குகிறார். ஆக்ஷன் காட்சிகளில் அலப்பறையைக் கொடுப்பதும், காதல் காட்சிகளில் கண்களுக்குள் பல்ப் எரிய வைப்பதுமென கவனத்தில் வியாபிக்கிறார். என்ன... 'நாங்க சுவிட்ச் போட்டாதான் சூரியன் எரியும்', 'மோசமானவங்கல்ல நாங்க முக்கியமானவங்க' - என ஏகத்துக்கு ரைமிங்கில் பேசி கொஞ்சம் டரியலாக்குகிறார்.

ஹீரோயின் அனுயா. அட்ரா சக்கை ரகம். SMS-ல் குல்பி ஐஸாகக் கண்களுக்குள் குளிந்தவர், காக்கி ட்ரெஸ்ஸில் ராக்கெட்டாகச் சீறுகிறார். முதிர்ச்சியான நடிப்பில் மொத்தக் கை தட்டலும் அவருக்குத்தான். ஆல மரத்தான் கேரக்டரில் ராதா ரவி. அனுயாவைப் பற்றி அவர் கொடுக்கும் ஒற்றை பஞ்ச் போதும், அவரின் நடிப்பு அனுபவத்துக்கும் ஆழத்துக்கும்.

'ஐயாம் தாமஸ்' என என்ட்ரி ஆகும் ஒவ்வொரு சீனிலும் காமெடியில் எகிறும் சந்தானபாரதி, 'இப்போதானே உள்ளே போனோம் அதுக்குள்ள வெளியே வர்றோம்' என உள்ளே வெளியே ஆடும்போது தியேட்டர் சிரிப்பால் அதகளமாகிறது. நடுரோட்டில் முத்தம் கொடுத்தால் எந்தப் பெண்ணாவது காதலிப்பாளா? ஆனால், ஹீரோயின் அனுயா காதலிக்கிறார். இப்படி கதையில் லாஜிக் 'இடியோ இடியென' இடிக்கிறது. ஜான் பீட்டரின் பின்னணி இசையில், சுகுமாரின் கேமராவில், மதுரை மண் வாசம். ஹீரோ பில்டப் காட்சிகள், காதைப் பஞ்சராக்கும் பஞ்ச் டயலாக், ரத்தப் பொறியல் காட்சிகள், அழுக்குத் தலைமுடியோடு அடிதடியில் இறங்கும் அடியாட்கள்... என சம்பவங்கள் எதுவும் ரசிக்கும்படி இல்லை.

- கமலி

முதுமை - உங்கள் உடலுக்கே, உள்ளத்திற்கல்ல...



காஞ்சி மஹா பெரியவர் துணை

ஸ்ரீ அவ்வை ஹோம்

(ஆதரவற்ற அன்னையருக்கு புகலிடம் அளிக்கும் ஓர் அன்பாலயம்)

11, அதிபத்தர் சாலை, சேக்கிழார் நகர், குன்றத்தூர்
சென்னை-600 069. போன்: 044-3200 4200



அனைவரும் கொண்டாடும் தீபாவளியை ஆதரவற்ற அன்னையரும் கொண்டாட உதவுங்கள்



தீபாவளி நல்வாழ்த்துக்கள்! வேதமாதா காயத்ரி தேவியின் பேரருளாலும் மஹா சுவாமிகளின் ஆசியுடனும் சமுதாயத்தினரால் நிராகரிக்கப்பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். இங்கு ஆதரவின்றித் தவிக்கும் வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் இலவசமாகப் பூர்த்தி செய்து வருகிறோம். தினசரி இறைவழிபாடு, தியானம், கூட்டுப் பிரார்த்தனையுடன் திருமுறை பாராயணம் செய்து அவர்களை பராமரித்து வருகிறோம். உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் நீடூடி வாழ அன்னையர்களின் கூட்டுப் பிரார்த்தனை தினமும் நடைபெறுகிறது. அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் தீபாவளி பண்டிகையை ஆதரவற்ற அன்னையரும் கொண்டாட உங்கள் அன்பளிப்புகளை பொருளாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். வயதான அன்னையருக்கு தீபாவளி திருநாளில் தாங்கள் செய்யும் சிறு உதவியும் நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தை குளிரச் செய்வதற்கு இணையாகும். தாங்களும் குடும்பத்துடன் இந்த இல்லத்தை பார்வையிடலாம்.

ஒரு நாள் காலை உணவுக்கு ரூ.400/- அனுப்பும் அன்பர்களுக்கு துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் மதிய உணவுக்கு ரூ.450/- அனுப்பும் அன்பர்களுக்கு ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் இரவு உணவுக்கு ரூ.350/- அனுப்பும் அன்பர்களுக்கு நவரத்தின மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் உணவுக்கு ரூ.1100/- அனுப்பும் அன்பர்களுக்கு ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்

5 நாள் உணவுக்கு ரூ.5,500/- அனுப்பும் அன்பர்களுக்கு பவள மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

10 நாள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான (ஸ்ரீகாயத்ரி எந்திரத்துடன்) பெரிய டாலர் ஒன்று அனுப்பி வைக்கப்படும்

அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1300/- அனுப்பும் அன்பர்களுக்கு சந்தன மாலை அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்பும் அன்பர்களுக்கு முத்துமணி மாலை அனுப்பி வைக்கப்படும்

தங்களின் திருமண நாள், பிறந்த நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், பண்டிகை நாட்கள், அமாவாசை மற்றும் பௌர்ணமி, கிருத்திகையில் வயதான அன்னையர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து, அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅவ்வை ஹோமில் அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் காயத்ரி ஹோமம் நடைபெறுகிறது. இதில் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ.300/-



காயத்ரி என்பதன் பொருள் தன்னை துதிப்பவரை, ஜபிப்பவரை காப்பாற்றுவது என்பது பொருள். காயத்ரி வழிபாடு நமக்கு நீண்ட ஆயுள், புகழ், செல்வம், கல்வி, மன அமைதி மற்றும் புத்திர பாக்கியத்தை அளிக்கிறது. காயத்ரி மூல மந்திரம் பாவங்களை அழித்து, புண்ணியத்தை வளர்ப்பதற்கு தோன்றிய மந்திரமாகும். நோய் நொடிகளை தவிடுபொடியாக்கும் சக்தி இதற்கு உண்டு. குடும்ப பிரச்னைகள், செவ்வாய், நாக தோஷங்கள், திருமணம், வியாபார தடைகளை போக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இந்த காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணமாக ரூ.300/- அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் தெளிவாக எழுதி அனுப்பினால், தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனியாக சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம், ஸ்ரீ காயத்ரி மகா மந்திரம், மகா மிருத்யுஞ்சய மந்திரம் மற்றும் ஜெப மாலை அடங்கிய சிடியும், காயத்ரி வண்ணப்படமும், காயத்ரி தேவி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும். காயத்ரிதேவியின் மகா மந்திரம் அனைத்து இல்லங்களிலும் ஒலித்து ஐஸ்வர்யம் பெற வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். வயதான அன்னையரை பாதுகாக்கவும் ஸ்ரீகாயத்ரி ஹோமத்தில் பங்கு பெறவும் தங்கள் நன்கொடையை மேற்கண்ட முகவரிக்கு Cheque/DD/MO மூலமாக SRI AVVAI HOME, CHENNAI என்ற பெயருக்கு அனுப்பி காயத்ரி தேவியின் திருவருளால் பூரண ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று, துன்பங்கள் நீங்கி, புகழ் மிகுந்த வாழ்க்கை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

பெறுபவர்களை விட கொடுப்பவர்களே பாக்கியவான்கள் - சுவாமி விவேகானந்தர்

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

ஆதரவற்ற அன்னையர் வாழ்வில் தீப ஒளி ஏற்றுவோம்!

பொங்கலுக்கு

சிக்கரைப் பொங்கலுக்கு உப்பு போடலாமா? 'போடலாம்' என்கிறார் கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன். கடந்தவாரம் தென்காசியில் நடைபெற்ற ரசிகமணி டி.கே.சியின் 128ஆவது பிறந்தநாள் விழாவுக்கு வந்த கி.ரா.வை கல்கி வாசகர்கள் சந்தித்தார்கள்... 87 வயது இளைஞர் கி.ரா. பேசியதிலிருந்து.

''உனக்கெல்லாம் என்னல தெரியும்? நல்லா திங்கத்தான் தெரியும்பாங்க நம்ம ஆட்கள். ஆனா இங்க திங்கக்கூட தெரியல பாதிப் பேருக்கு. ஒரு கல்யாண வீட்டில பாயசத்தை தம்ளர்ல ஊத்திக் குடிக்காங்க. இலை போட்டுச் சாப்பிடறதே இலையில இருக்கிற பச்சையம் உணவோடு சேர்ந்து உள்ளே போகணும்ங்கிறதுக்காகத்தான். அதுசரி இலை மாதிரியே பேப்பர்ல அடிச்சு வந்தாச்சு. பிறகு தம்ளர்ல குடிச்சா என்ன? கிண்ணத்துல குடிச்சா என்ன? வாயில குடிக்காங்களே அதுவரைக்கும் சந்தோஷம்.

குற்றாலத்துக்கு வந்து குடைபிடிக்காம் பாரும்பாங்க. வெட்கத்தை விட்டுச் சொல்லுதேன். நானே குற்றாலத்துக்கு வந்து ரசிகமணி வீட்டில் வெந்நீரில்தான் குளிச்சேன். குளிக்கக்கூட இங்க பல பேருக்குத் தெரியல. அருவியில குளிக்கிறது தனிக் கலை. அதை எனக்குச் சொல்லித் தந்தது ரசிகமணிதான். முதல்ல அருவிலபோய் நிக்கோம்லா... உடம்பு கொஞ்சம் கொஞ்சமா சூடாகும். பிறகு கொஞ்சம் கொஞ்சமா குளிரும். குளிர்ந்த உடனே வெளியே வந்துடணும். அருவித் தண்ணி வேகமா விழுற இடத்துல எண்ணெய் வைச்சா போதும். இங்க பாதிப் பேரு உடம்பெல்லாம் எண்ணெயைத் தேய்ச்சுக்கிட்டு, குளிச்சுட்டு வாரவன் மேல இழுவிட்டுப் போயிடுறான். அப்ப சாப்பிடவும் தெரியல... குளிக்கவும் தெரியலதானே நம்மாளுகளுக்கு.


முதலாம் உலகப் போருக்கு இந்திய மக்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு ஒத்துழையாமத்தான், இரண்டாம் உலகப் போர் வந்தவுடனே தலைவர்கள்கிட்ட எல்லாம் அரசாங்கம் கெஞ்சிச்சு. காந்தி தலைமையில முடியவே முடியாதுன்னுட்டாங்க. தலைவர்களையெல்லாம் தூக்கி உள்ள போட்டுட்டாங்க. ஆனாலும் மக்கள்கிட்ட சுதந்திர தாகத்தை சூசகமாகச் சொல்லணுமில்லா. தினமணி, விகடன், கல்கி இந்தப் பத்திரிகைகளில் எல்லாம் சங்கீத விமர்சனம் வரும். அது அப்படியே தமிழிசை இயக்கமாக மாறி கல்கி, ராஜாஜி, ஆர்.கே.சண்முகம் செட்டியார், கே.பி.சுந்தராம்பாள் இவங்க மூலமாகவும், கவிமணி, பாரதி இவங்க பாட்டு மூலமாகவும் மக்கள்ட்ட சுதந்திர தாகம் தணியாம இருந்துச்சு.



● ஏ.எஸ்.குமார்

● சொக்கம்பட்டி ரஹீம்

அப்பல்லாம் பொஸ்தகம் படிக்கற பழக்கம் வளர்ந்துக்கிட்டிருந்த நேரம். அப்பத்தான் டி.கே.சி.யைப் பார்த்தேன். என் நண்பன் கு.அழகிரிசாமி ஹைஸ்கூல்ல படிச்சவன். அவுக ஹெட்மாஸ்டர் சிவக்கொழுந்து முதலியார், மேடை தளவாய் குமாரசாமி முதலியார். நான் பாத்த இந்த இரண்டு முதலியாரும் கறுப்பு. டி.கே.சி முதலியாரும் அப்படித்தான் இருப்பாருன்னு நான்



✱ டி.கே.சி.

பார். எல்லா படைப்பை யும் பாராட்டுவார். ஆனால் விமர்சனம் செய்ய மாட்டார்.

கம்பர் எழுதினதே பதினாலாயிரம் பாட்டுத்தான். இப்ப பதினாலாயிரத்து அறுநூறு பாட்டு இருக்கு. இதெல்லாம் கம்பன் எழுதலைன்னு துணிச்சலா சொன்னவரே டி.கே.சி.தான். சிவபுராணத்துல ஒரு பாட்டு. 'புல்லாய்ப் பூண்டாய்'னு தொடங்கும். கடைசியா 'கல்லாய், மனிதராய்' அப்படின்னு ஒரு இடத்துல வரும். அதை 'கல்லா மனிதராய்'னு மாத்தினவரு ரசிகமணிதான். இந்தப் பாட்டுல டார்வினோட பரிணாம தத்துவம் இருக்கு. இந்தத் திருத்தத்தை இலக்கிய உலகம் ஏத்துக்கிடுச்சு.

உப்பு போடலாமா?

நெனைச்சேன். மனுஷன் செவப்புன்னா செவப்பு, அப்படி ஒரு செவப்பு. பள்ளிக்கூடம் ஒழுங்கா போவாத என்கிட்ட ரொம்ப ஒட்டுதலா இருப்

ஒருத்தன் அரிசி மூடைன்னு நெனைச்சு மணல் மூடையைச் செமந்துட்டு வந்தான். வீட்டு வாசப்படி ஏறும்போதுதான் கொஞ்சம் மணல் சிந்திருச்சு. சவத்தைக் கீழே போடுவானா... இவ்வளவு நேரம் செமந்துட்டோமேன்னு அரிசிப் பானைல கொட்டுவானா... கிராமத்துப் பக்கம் ஒரு கதை சொல்லுவாங்க. அப்பன் வெட்டின கிணறு உப்பு தண்ணின்னா அதையேவா குடிக்க முடியும்? இதுக்குதான் சொன்னேன் துணிச்சல் வேணுமின்னு. அந்த இலக்கியத் துணிச்சல் டி.கே.சி.கிட்டே ரொம்ப இருந்துச்சு.



✱ கி.ரா

சர்க்கரைப் பொங்கலுக்கு உப்பு போடலாமா? போடலாம்... தெரியாம நாம அதிகமா இனிப்பைச் கொட்டிட்டோம்னா தித்திப்பு அதிகமா இருக்கும். அப்ப கொஞ்சம் உப்பு போட்டா போதும். தித்திப்பு சமமாகி சரியான இனிப்பா விடும்'' என்கிறார்.

கி.ரா. கமகம பேட்டி

செய்திச் சித்திரம்:
ஏ.எஸ்.குமார்

மில்லியன் டாலர் கேள்வி!



பாரதி நகர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அந்த அதிகாலை வேளையில் டெலிஃபோன் வந்தபோது, இன்ஸ்பெக்டர் ஹரிராமன்தான் ரிஸீவரை எடுத்தார்.

''பாரதி நகர் போலீஸ் ஸ்டேஷன்?''

''ஆமா...''

''ஹரி...! நான் லாயர் சதாசிவம் பேசறேன். க்யூரியோ கார்டன் அவென்யூ...

''ஓ... நீங்களா...! என்ன இவ்வளவு காலையில் ஃபோன்...?''

''ஒரு அவசரச் செய்தி! நான் வழக்கமாய் வாக்கிங் போற ரூட்ல இருக்கிற ஒரு வீட்ல பெண்கள் அலர்ற சத்தம் கேட்டது. ஓடிப் போய்ப் பார்த்தேன். ஒரு இளம் பெண்ணும் வயதான அம்மாவும் என்னைப் பார்த்ததும் ஒரு ரூமைக் காட்டி, 'உள்ளே கொலைகாரன் இருக்கான். போலீஸுக்கு ஃபோன் பண்ணுங்கன்னு' அழுதாங்க... அந்த அறைக்கு ஜன்னல்கள் எதுவும் இல்லாததினால் வெளிப் பக்கமாய்த் தாழ் போட்டிருந்த அந்தக் கதவின் சாவி துவாரத்தில் கண்ணை வெச்சுப் பார்த்தேன். உள்ளே யாரோ ரத்த வெள்ளத்தில் மல்லாந்து கிடந்தாங்க. பக்கத்தில் ஒரு இளைஞன் தவிப்போடு நின்னுட்டிருந்தான். எனக்கு ஒரே

அதிர்ச்சி. அந்த அம்மாகிட்டே கொலை யானது யார்ன்னு கேட்டேன். 'என் பையன் பாஸ்கர்'ன்னு சொன்னாங்க. பாடிக்குப் பக்கத்துல நின்னுட்டு இருக்கிறவன் யார்ன்னு கேட்டேன். 'இந்த வீட்டு வேலைக்காரன் வேணு'ன்னு சொன்னாங்க. வேணு, பாஸ்கரோட அறைக்குள் நுழைஞ்சு அவனைக் கத்தியால குத்திக் கொலை செஞ்சதை அந்த அம்மாவும் அந்த இளம் பெண்ணும் பார்த்து இருக்காங்க. வேணு தப்பிச் சுட்டுப் போயிடக் கூடாதுங்கறதுக்காகக் கதவை வெளிப்பக்கமாய்த் தாழ்போட்டுட்டாங்க. வேணு இப்போ உள்ளே.''

''நல்ல காரியம் பண்ணியிருக்காங்க... இப்ப வந்துடறேன்.''

இன்ஸ்பெக்டர் ஹரிராமன் ஸ்தலத்துக்குப் போய்ச் சேர்ந்தபோது அந்த வீட்டுக்கு முன்னால் ஒரு கும்பல் சேர்ந்திருந்தது.

வாசலிலேயே காத்திருந்த லாயர் சதாசிவம் ஹரிராமனை எதிர்கொண்டார்.

''எந்த ரூம்...?''

சதாசிவம், ரூமைக் காட்ட ஹரிராமன் சாவி துவாரம் வழியாகப் பார்த்தார்.

ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்த ஓர் இளைஞனும் அவனுக்குப் பக்கத்தில் பிரமை பிடித்த நிலையில் உட்கார்ந்திருந்த இன்னோர் இளைஞனும் தென்பட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் கதவின் வெளிப்பக்கத் தாளைத் திறந்துகொண்டு உள்ளே போக, உட்கார்ந்திருந்த இளைஞன் ஓடிவந்து அவருடைய கால்களில் விழுந்தான்.

''அ...அய்யா...! நான்.. இந்தக் கொலையைப் பண்ணலை. எஜமான் காலையில அஞ்சு மணிக்கு அவரை எழுப்பிவிடச் சொன்னார். அதுக்காகதான் இந்த ரூமுக்குள்ளே வந்தேன். நான் ரூமுக்குள்ளே வரும்போது இப்படி ரத்தச் சகதியில் விழுந்து செத்துப் போயிருந்தார்.



நான் அதிர்ச்சியடைந்து போய்ப் பார்த்துட்டு இருக்கும்போதே, அம்மா கதவைச் சாத்தி வெளிப்பக்கமாய்த் தாழ் போட்டுட்டு நான்தான் கொலை பண்ணிட்டதாய்க் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ண ஆரம்

பசகட்டாங்க... சத்தியமாய் நான் இந்தக கொலையைப் பண்ணலைங்கய்யா...''

வேணு உடல் நடுங்கிக்கொண்டே சுவரோரமாய்ப் போய் உட்கார்ந்தான். ஹரிராமன் அந்த வயதான பெண்ணை நோக்கிப் போனார். அழுது அழுது களைத்துப் போயிருந்தாள் அவள்.

''உங்க பேர் என்னம்மா?''

''அலமேலு...! இது என் பொண்ணு சுதா. உள்ளே செத்துக்கிடக்கிறது என் பையன் பாஸ்கர்...'' சொன்னவள் பெரியதாய் அலறிக்கொண்டே பாஸ்கர் இறந்து கிடந்த அறைக்குள் நுழைய முயல ஹரிராமன் தடுத்தார்.

''உள்ளே போகாதீங்கம்மா...! வேலைக் காரன் வேணு, 'தான் இந்தக் கொலையைப் பண்ணலை'ன்னு சொல்றான். அதனால மொதல்ல ஃபாரன்ஸிக் வந்து பார்த்துக் கைரேகைகளைப் பதிவு பண்ணட்டும்.''

அலமேலு அடித்தொண்டையி லிருந்து சத்தினாள்.

''இன்ஸ்பெக்டர்...! அந்த வேலைக்கார நாய் பொய் சொல்றான். என் பையன் மார்பு மேல ஏறி உட்கார்ந்துட்டு கத்தியால குத்தியதை நானே பார்த்தேன். பார்த்துட்டு நான் சத்தம் போட்டதும் என்னைத் தாக்க வந்தான். நான் உடனே ஓடிப்போய் கதவை இழுத்து வெளிப்பக்கமாய்த் தாழ்ப்பாள் போட்டேன்.''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் அழுதுகொண்டிருந்த சுதா இப்போது தலையசைத்தாள். ''அம்மா... சொல்றது உண்மைதான் இன்ஸ்பெக்டர்... அண்ணனைக் கொலை பண்ணினது வேலைக் காரன்தான்.''

''உன்னோட அண்ணனை அவன் ஏன் கொலை பண்ணனும்?''

''தெரியலை இன்ஸ்பெக்டர்...'' சுதா சொல்லிக்கொண்டு இருக்கும்போதே கான்ஸ்டபிள் ஒருவர் பக்கத்தில் வந்து நின்றார்.

''ஸார்... பாடியோட ஹார்ட் போர்ஷன்ல ஆழமாய் ஒரு கத்திக் குத்து விழுந்திருக்கு. ஆனா...''

''என்ன ஆனா...?''

''கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கத்தி ஸ்பாட்ல இல்ல ஸார்... அந்த

மகரந்தம் ஏந்திய மலரைப் போல்
அர்த்தம் தாங்கியவார்த்தை மாதிரி
சுமக்கிறாய்
நமக்கான புதிய வரவை

குறுங்காணியில்
குருத்துவிட்டிருக்கும் கதிரை
சுற்றிச் சுற்றி வரும்
சிறு விவசாயியின் எச்சரிக்கை உணர்வு
இருவருக்குமென்றாலும்

சுகமோ
சிசேரியனோ
ஆகப்போகிற பயத்தில் நீ

தலை சாயும் வாழையையும்
செம்மாந்த தாரையும்
தாங்கும் கழியாக நான்.

- சி.செழியரசு



வேணுகிட்டேயும் எந்த வெப்பனும் இல்லை.''

இன்ஸ்பெக்டரின் முகம் திகைப்பில் விழுந்தது.

''மொதல்ல ஃபாரன்ஸிக்குக்கு ஃபோன் பண்ணுங்க...''

ஃபாரன்ஸிக் அதிகாரிகளோடு சாதுர்யாவும் வந்தாள்.

பத்துக்குப் பத்து என்ற



அளவிலான அறை. அறையில் ஜன்னல்கள் இல்லை. ஸ்பிலிட் ஏ.ஸி. ஒன்று அறையை மிதமான குளிரில் நிரப்பி வைத்திருந்தது. அறையின் சுவரோரமாய் ஒரு கட்டில். பக்கத்தில் சுவரில் பதிக்கப்பட்ட ஷெல்ஃப். அதில் அந்த வார விகடன், கல்கி, குமுதம். அதற்குப் பக்கத்தில் ஒரு மினரல் வாட்டர் பாட்டில், ஒரு ஃப்ளாஸ்க்.

சாதுர்யா அந்த ஃப்ளாஸ்கைத் திறந்து பார்த்தாள். உள்ளே சூடாய் பால். ஹரிராமன் பக்கத்தில் வந்தார்.

''என்ன மிஸ் சாதுர்யா...! டிட் யூ கெட் எனி ட்ரேஸ்...?''

''பெரிய சைபர்...! தன்னோட மகன் பாஸ்கரைக் கத்தியால் குத்தி, வேணு கொலை செய்ததை அலமேலு தன் கண்ணாலே பார்த்து இருக்காங்க. அலமேலுவோட பொண்ணு சுதாவும் பார்த்து இருக்காங்க. ஆனா வேணு தான் அந்தக் கொலையைப் பண்ணலைன்னு தீர்மானமாய்ச் சொல்றான். அவன் சொல்றது உண்மைதானோன்னு நம்பறதுக்கு வசதியாய்க் கொலை செய்யறதுக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி ஸ்பாட்ல இல்லை. வேணு கத்தியை வெளியே வீசவும் வழியில்லை. ஏன்னா அறையில் ஜன்னல்களே இல்லை. மேலும்... நீங்க ஸ்பாட்டுக்கு வந்த பிறகுதான், வெளிப்பக்கத் தாழ்ப்பாளைத் திறந்த பின்னாடிதான் வேணு அறையை விட்டு வெளியே வந்திருக்கான். கான்ஸ்டபிள்கள் அவனைச் சோதனை போட்டுப் பார்த்த போதும் தீப்பெட்டி பீடியைத் தவிர வேற எதுவும் அவன் கிட்டே இல்லை. ஒரு கத்திரியோ அல்லது வேற ஏதாவது ஒரு வெப்பனையோ தன்னோட உடம்புக்குள்ளே மறைச்சு வைக்க முடியாது.''

''அப்படீன்னா... அம்மாவும் பொண்ணும் சொல்றது பொய்யா...?''

''மே...பி...! அலமேலுவோட கணவர் உயிரோடு இருந்தவரைக்கும் சொத்துப் பிரச்னை இருந்திருக்கு. அவர் ஹார்ட் அட்டாக்கில் இறந்துபோன பிறகு ரெண்டு வருஷம் மறுபடியும் பிரச்னை கிளம்பியிருக்கு. அது தொடர்பாய் இந்தக் கொலை நடந்து இருக்கலாம்.''

''சாதுர்யா! நீங்க சொல்றதைப் பார்த்தா அம்மாவும் பொண்ணும் சேர்ந்து...''

''அந்த முடிவுக்கும் தீர்மானமாய் வர முடியலை மிஸ்டர் ஹரிராமன்...''

ஹரிராமன் புன்னகைத்தார்.

''இது ஒரு மில்லியன் டாலர் கேள்வி!



வேணுவைக் கைது செய்யறதா வேண்டாமா?''

''தாராளமாய்க் கைது செய்யலாம். ஏன்னா கொலை நடந்த அறைக்குள்ளே அவன் இருந்திருக்கான். அறையில் 'வெப்பன்' இல்லேன்னாலும் வேற எதையாவது யூஸ் பண்ணி கொலை செய்யவும் வாய்ப்பு இருக்கே...?''

''ஸாரி... மிஸ் சாதுர்யா... அதுக்கான வாய்ப்பே இல்லை.''

தனக்குப் பின்பக்கம் குரல் கேட்டு சாதுர்யா திரும்பிப் பார்த்தாள்.

ஃபாரன்ஸிக் அதிகாரி சர்மா தெரிந்தார்.

''பாஸ்கரோட ஹார்ட் போர்ஷனில் அரையடி ஆழத்துக்கு ஒரு பலமான ஆயுதத்தால் குத்து விழுந்து உடனடி மரணம். அந்த அறையை தரோவா ஒவ்வொரு மில்லிமீட்டராய் செக் பண்ணிட்டேன். அந்த அறையில் ஒரு குண்டூசிகூட இல்லை. இந்த கேஸில் வேணுவை மட்டும் சந்தேக வட்டத்துக்குள் வைக்கறது சரியில்லை. அந்த அம்மாவையும் பெண்ணையும் வட்டத்துக்குள்ளே கொண்டு வரணும்...''

இன்ஸ்பெக்டர் ஹரிராமன் சொன்னார்.

''அப்படீன்னா... எல்லாரையும் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிட வேண்டியதுதான்...!''

மத்தியானம் பன்னிரண்டு மணி. போலீஸ் ஸ்டேஷனுக்கு சாதுர்யா வந்தாள். செல்ஃபோனில் யாருடனோ எரிந்து பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஹரிராமன், சாதுர்யாவைப் பார்த்ததும் பேச்சை முடித்துக்கொண்டு செல்ஃபோனை அணைத்தார்.

''வாங்க... மிஸ் சாதுர்யா...''

வரவேற்றவர் காலியான நாற்காலியைக் காட்டினார். சுழலும் ஃபேனுக்குக் கீழே உட்கார்ந்தாள் சாதுர்யா.

''என்ன பாஸ்கரோட போஸ்ட் மார்ட்டம் முடிஞ்சுதா...?''

சாதுர்யா, தன் கையிலிருந்த அரசாங்க சாணி நிறப் பேப்பர்களைக் காட்டினாள்.

''பாஸ்கரோட போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சுது. ரிப்போர்ட்டும் ரெடி.''

சாதுர்யா சக்ஸஸ் - 11

சாதுர்யா பேசறேன்... சுந்தரமூர்த்தி இறந்துபோனது பத்தி விசாரிக்க ஹோட்டல் அறைக்குள்ளே நுழைஞ்சதுமே சுந்தரமூர்த்தியோட உடல் பார்வைக்குக் கிடைச்சுது. அவன் உடலைச் சுத்தி குறிப்பா முகத்துல நான்கைந்து ஈக்கள் சுற்றிச் சுற்றி வந்து, அப்புறம் டீபாய் மேல போய் உட்கார்ந்ததைப் பார்த்தேன். டீபாய் முனையைக் கூர்ந்து பார்த்தபோது அதில் லேசா இரத்தக் கறை தெரிஞ்சது. சுந்தரமூர்த்தியோட உடம்புல எங்கேயும் இரத்தக்கறை

''ரிப்போர்ட் என்ன சொல்லுது?''

''கனமான ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டு, உடனடி மரணம்.''

''என்ன ஆயுதம்?''

''ஸ்பெஸிஃபிக்கா அதைச் சொல லலை... பட் குத்துப்பட்ட இடத்தில் தேங்கியிருந்த ரத்தம் அடர்த்தியில்லாமே டைலூட்டா இருந்திருக்கு.''

''சரி... மிஸ் சாதுர்யா... கொலையாளி யார்... அந்த வேலைக்காரன் வேணுவா...? இல்லை... அம்மாவும் பொண்ணுமா?''

''வேலைக்காரன் வேணுதான்!''

''எப்படிச் சொல்றீங்க...?''

''அவனோட ஃப்ளாஷ்பேக்கைக் கொஞ் சம் தோண்டி எடுத்தேன். வேணு அந்த வீட்ல ஒரு வருஷமாய் வேலை பார்த் துட்டிருக்கான். அதுக்கு முந்தி அந்த வீட்ல அவனோட மனைவி பொன்னி சமையல் வேலையைப் பார்த்துட்டு இருந்திருக்கா. ஒரு சமயம் வீட்ல யாரும் இல்லாத நேரத்துல பாஸ்கர் பொன்னியை ஃபோர்ஸ் பண்ணிக் கெடுத்திருக்கான். கறைபட்ட உடம் போடு வாழ விரும்பாத பொன்னி, தற்கொலை பண்ணிக்கிட்டு இறந்து போயிருக்கா. இந்த உண்மை வெளியு லகத்துக்குத் தெரியாது. ஆனாலும் அதை எப்படியோ ஸ்மெல் பண்ணிட்ட வேணு, பாஸ்கரைச் சமயம் பார்த்துத் தீர்த்துக்கட்ட அதே வீட்ல வேலைக்குச் சேர்ந்துட்டான். உடனடியாய்த் தீர்த்துக் கட்டினா சந்தேகம் வரும்ன்னு நினைச்சு ஒரு வருஷம் பொறுமையாய் வெயிட் பண்ணி இன்னைக்குக் காலையில் முடிச்சுட்டான்.''

''சரி... அவன் கொலை பண்ண உபயோகப்படுத்தின ஆயுதம் எது...?''

''அதையும் கண்டுபிடிச்சுட் டேன்...! பாஸ்கர் கொலை செய்யப் பட்ட அறையில் சில பொருள்கள் இருந்ததைப் பார்த்தோம். அதுல ஒரு பொருளை உபயோகப்படுத்தித்தான் கொலை பண்ணியிருக்கான்.''

''இதுக்கு மேலும் சஸ்பென்ஸ் வேண்டாம் சாதுர்யா. சொல்லுங்க.. அது என்ன பொருள்?''

சாதுர்யா சொல்ல ஆரம்பித்தாள்.

இல்லாததால தலைப்பாகம் டீபாய் விளிம்பில் படுற மாதிரி தடுமாறி விழுந்திருக்கலாம்னு நினைச்சேன். இரண்டாவதாக கிடைச்ச பி.எம்.ரிப்போர்ட்ல அது உறுதியாயிடுச்சு. சுந்தரமூர்த்திக்குத் தலைமுடி அடர்த்தியாயிருந்த காரணத்தால இரத்தம் வெளிப்பார்வைக்குத் தெரியலை.

சரியான விடையை யூகித்து எழுதி, குலுக்கலில் தேர்வான வாசகர்கள் விவரம் வட்டமேஜை பக்கத்தில்...

துப்பறியும் போட்டி-12



வாசகர்களே!

சாதுர்யா கண்டுபிடித்து விட் டாள். உங்களால் முடிகிறதா...?

I.Q. அதிகம் உள்ள கல்கி வாச கர்களுக்கு 'க்ளூ' வேண்டாமே...! கதையை மறுபடியும் ஒரு தடவை படித்துப் பாருங்கள். 'க்ளூ' க்யூ வரிசையில் வந்து நிற்கும்.

சரியான பதிலை போஸ்ட் கார்டில் எழுதி துப்பறியும் போட்டி - 12 என்று குறிப் பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கடைசித் தேதி: **23.09.09**



* சசிதரூர்

'ஃபைவ் ஸ்டார்' சர்ச்சை!

கடந்த செப்டம்பர் ஆறாம் தேதி, செம முகூர்த்த நாள், கூடவே ஞாயிற்றுக்கிழமையாகவும் அமைந்து விட, அன்று குருவாயூர் கோயிலில் நடந்த திருமணங்களின் எண்ணிக்கை மட்டும் 194. இது ரெக்கார்டு பிரேக் என்கிறார்கள். வழக்கமாக நாளொன்றுக்குச் சராசரியாக 75 திருமணங்கள் நடக்குமாம். காலையில் ஐந்து மணிக்குத் தொடங்கி, ஒவ்வொரு ஜோடியாக மேடைக்கு அழைக்கப்பட்டு, தாலிகட்டி முடிக்க பகல் பன்னிரண்டரை ஆகிவிட்டது. இடையில் வந்த ராகுகாலத்தைக் கூட யாரும் கண்டுகொள்ளவில்லை. ***(194 ஜோடி திருமணம் சாதனையல்ல; ஜோடிகள் மாறாமல், நல்லபடியாகத் திருமணங்கள் நடந்ததுதான் சாதனை!)***

தேர்தலில் ஜெயித்து, மத்திய அமைச்சரானதும், சசி தரூர் டெல்லியில் உள்ள கேரளா ஹவுசில் தங்கிக்கொள்ளும்படி சொன்னது கேரள அரசு. ஆனால், அவர் மறுத்து விட்டார். காரணம், ''கேரளா ஹவுசில் உடற்பயிற்சி செய்ய ஜிம் இல்லை; பிரைவசி இல்லை.'' எனவே, டெல்லியில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் கடந்த மூன்று மாதங்களாகத் தங்கி, தம் வேலையைப் பார்த்தார். மத்திய அரசு சிக்கன நடவடிக்கைகளில் இறங்குவதாக அறிவிக்க, தரூர் நட்சத்திர ஹோட்டல் ஜாகை சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது. நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, 'தரூர் நட்சத்திர ஹோட்டலிலிருந்து காலி செய்ய வேண்டும்' என்று அறிவுறுத்தி இருக்கிறார். தரூர், 'நான் மக்கள் வரிப் பணத்தில் நட்சத்திர ஹோட்டலில் தங்கவில்லை. சொந்தப் பணத்தைத்தான் செலவழிக்கிறேன்' என்று தன் பிளாக் (blog) மூலம் பதிலடி கொடுத்திருக்கிறார். ***(மக்கள் பணத்தை, தங்கள் சொந்தப் பணமா நெனைக்கிறவங்கதானே அரசியல்வாதிங்க!)***

இந்த வருடம் ஓணத்தையொட்டி துணிமணிகள், நகை, இதர பொருட்களின் விற்பனையோடு சேர்த்து மதுபான விற்பனை ஓஹோதானாம்! பண்டிகையின் முதல்நாள் மட்டும் மது விற்பனை 34 கோடியைத் தாண்டியதாம். கடந்த ஆண்டு ஓணம் சீசன் முழுவதிலுமாக மது விற்பனை 160 கோடியாம். இந்த வருடத்தில் இது டபுள் செஞ்சுரி அடித்து

விட்டது. சாலக்குடியில் ஒரு கடையில் மட்டும் விற்பனை ஒரே நாளில் 22 லட்சம். ***(இருந்தாலும் எங்க ஊர் குடிமகன்களுடன் உங்களால் போட்டி போட முடியுமா சேட்டன்களே?)***

யும், சரத்குமாரும் நடிக்க, அவரது வாழ்க்கையைப் படமாக எடுத்திருக்கிறார்கள். மலையாளம், தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் என்று ஐந்து மொழிகளில் வெளியாகும் படத்தின் இயக்குநர் ஹரிஹரன். ஸ்கிரிப்ட்: மலையாள இலக்கிய ஜாம்பவானான எம்.டி.வாசுதேவன் நாயர். இசை: இளையராஜா. ஒலிப்பதிவு: ஆஸ்கர் அடிச்ச ரசூல் பூக்குட்டி. ***(எங்க ஊர்லகூட மருதநாயகம் பத்தி எடுக்கப் போறதா ரொம்ப காலமா சொல்லிக்கிட்டே இருக்காங்க!)***

- பரத்ராம்



* ரசூல் பூக்குட்டி



* பழசி ராஜாவாக மம்மூட்டி

கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள கிராமம் கூரச்சுண்டு. அங்கே வசிக்கும் 1300 பேரும் மரணத்துக்குப் பிறகு தங்கள் கண்களைத் தானம் கொடுக்கப் பதிவு செய்திருக்கிறார்கள். அதன்படி இந்தியாவின் நூறு சதவிகித கண் தான கிராமமாக கூரச்சுண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. ***(கல்விக் கண் திறப்பதில் சாதிச்சவங்க, இப்போ கண் தானத்திலும் சாதிச்சிருக்காங்கய்யா சாதிச்சிருக்காங்க!)***

பழசி ராஜா, கேரளாவைச் சேர்ந்த ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். மலையாளத்தில் மம்மூட்டி

சூறையாடிச் சென்றவனின் வருகை!

ரவிசுப்ரமணியன்

வருஷங்கள் நரையோடிய பின்பு
திடீரென இன்று வந்தாய்.

உணவிட்டு அடைத்து வந்தேன்
ப்ரிய நாய்களை, பூனையை

குற்ற உணர்வின் கிலேசங்கள் ஏதுமற்ற
உன்னை உபசரித்தேன்

வெளியே கத்திக்கொண்டிருந்தன
காகங்கள்
கனத்த கணங்களைக் கலைத்தபடி

நேசிக்கும் பாடல் ஒன்று
நேரமற்ற நேரத்தில் எங்கிருந்தோ
ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சாவதானமாய் சிகரெட் சாம்பலைத்
தட்டியபடி
கர்வம் ததும்பும் அலட்சியத்துடன்
பேசத் துவங்கினாய்



என இரவுகளை பகலகளை
இன்பத்தை ஏகாந்தத்தை
எல்லாவற்றையும் தின்ற
அதே உரையாடல்

மாய உலகின் லாகிரி முடிச்சுகளிலிருந்து
இன்னும் மீளாது மறுபடியும் உதிர்த்தாய்
உன் போதனைகளை

ஒரு கைபேசி அழைப்பில்,
விடைபெறக் கூட நேரமற்று
பேசியபடியே கையசைத்து
வெளியேறினாய்

இந்தமுறை கதவைத் தாழிட்ட பின்பு
எல்லா உரையாடல்களையும் கூட்டி அள்ளி
தொட்டிச் செடிகளின் வேர்களில்
இட்டு வைத்தேன்
காலையில் ஏனோ
எல்லாச் செடிகளும் வாடியிருந்தன.





சங்கராபுரம்

அடுத்த நாள் காலையிலேயே ஆர்க்கிடெக்ட் இருவரும் வந்துவிட்டனர்.

அலுவலகத்தில் அவர்களுக்குத் தேவையான விவரங்கள் தரப்பட்டன. உருவாகப் போகும் இந்த நகரத்தில் ஸ்வாமிகள் என்னவெல்லாம் எதிர்பார்க்கிறார் என்பதைக் கேட்ட ஆர்க்கிடெக்ட் இருவரும் பிரமித்துப் போய்விட்டனர்.

ஸ்வாமிகள் பூஜையை முடித்து அனைவருக்கும் தீர்த்தம், பிரசாதம் வழங்கிய பின்பு இருவரையும் சந்தித்தார்.

''நான் எதிர்பார்க்கிற எல்லா கட்டடங்களையும் உடனடியாக செய்து முடிக்க முடியாது; வசதியில்லேன்னு நேக்கு நன்னாத் தெரியும். ஆனா, நாம எப்போதும் நல்ல காரியங்களைப் பண்ண நினைக்கும்போது, நம்ம திட்டங்களைப் பெரிசாத்தான் போடணும். எதிர்மறையான சிந்தனையில்லாம ஒரு பாசிட்டிவ் நோக்கிலே பிரச்னையை அணுகினா, இன்னிக்கில்லேன்னா நாளை - இல்லேன்னா மறு நாள் - எப்படியும் நடத்தி முடிச்சுடலாம். பகவான் தகுந்த வழிகாட்டுவான்.

அப்புறம் டெக்னிகலா நீங்க என்ன பண்ணப் போறேள்னு நான் கேக்க மாட்டேன். நேக்கு அவ்வளவு புரியாது. ஆனா உங்களுக்கு நன்னாத் தெரியும். இருந்தாலும் நேக்குத் தோண்றதச் சொல்றேன்.

சுத்தி மலைகள் இருக்கறதாலே 'சாயில் ஸ்ட்ரெங்த்' நன்னாத்தான் இருக்கும்னு நெனைக்கிறேன். இருந்தாலும் டெஸ்ட் பண்ணிப் பாக்கறதுலே தப்பில்லே.

எந்தக் காரணத்துக்காகவும் சுத்தியிருக்கிற மலைகள் மேலே கையே வைக்கக் கூடாது. இயற்கையைப் பாழ்பண்ணக் கூடாது. கூடுமான வரைக்கும் இயற்கையை ஒட்டியே நாம வாழப் பழகிக்கணும். மனுஷ வாழ்க்கை கேலிக் கூத்தாவும் பிரச்னையாவும் மாறினதுக்குக் காரணமே, நாம இயற்கையை மதிக்கத் தவறினதுதான்.

அப்புறமா முக்கியமா ஒண்ணு. பள்ளத்தாக்கிலே பூமி, மேடும் பள்ளமுமா இருக்கும். அதனாலே நிலத்தைச் சமன் பண்றேன்னு வெட்டி பெறட்டக் கூடாது. இப்பல்லாம் புல் பத்தையை ஒட்ட வச்சு செயற்கையா லேண்ட் ஸ்கேப்பிங்னு பண்றாளே? அதுவும் அழகாத்தான் இருக்கு. அதைப்போல, புல் பத்தைகளுக்குப் பதில் கட்டடங்கள் இருந்துட்டுப் போகட்டும்'' - ஆர்க்கிடெக்ட் இருவரும் சிரித்தார்கள்.

டால்மியாபுரம் கணேசன்

''மலையிலேருந்து ஓடி வர்ற அருவி நீரைத் தேக்கி வைக்க, கடைக்கோடியிலே ஒரு நீர்த்தேக்கம் உருவாக்க மறந்துடாதீங்கோ.

இன்னொரு முக்கியமான விஷயம். மலையோட வடபுறத்திலே லிங்கரூபமா ஒரு ப்ரொஜக்ஷன் இருக்கு. அதுக்குக் கோயில் கட்றேன்னு சுத்தியிருக்கறவா ஆரம்பிச்சுடுவா. அதுக்கு அனுமதிக்கவே கூடாது. கோயில் கட்டிட்டானா, அடுத் தாப்பலே போறதுக்கு வழி வேணும்னு மலையை உடைச்சு படி அமைப்பா. 'தென் கைலாசம்'னு பேர் வச்சு சிவராத்திரி பூஜை, பிரதோஷ பூஜைன்னு ஒண்ணொண்ணா சேத்துண்டு போய் பெரிய க்ஷேத்திரமா ஆக்கிடுவா. அப்புறம் ஜனங்க வசதிக்குன்னு, கடை கண்ணின்னு ஒவ்வொண்ணா ஆரம்பிச்சு ஒரு வியாபார ஸ்தலமாயிடும்.

பகவான் லிங்க ரூபமா அங்கே போய் ஒக்காந்திண்டு இருக்கான்னா, அதுக்கு ஒரு காரணம் இருக்கணும். பக்ஷிகள், ஆகாசம், வாயு, மேலே பறக்கிற ஏரோப்ளேன், வருண பகவான் இதுக்கெல்லாம் தரிசனம் குடுக்கறதுக்காக இருக்கலாம். நாம யாரு அதைத் தடுக்க? பரமேஸ்வரன் கைலாசத்திலே இருக்கார்னு நம்பிக்கை. அதுக்காக இமயமலைக்குக் கூரை போட முடியுமா?'' - பெரியவா பலமாகச் சிரித்தார்.

இப்படி பல விஷயங்கள் சொல்லிக்



கொண்டே வந்தார். ஸ்வாமிகளுக்கு எல்லா சப்ஜெக்டிலும் உள்ள ஆழ்ந்த புலமையையும் தீர்மானமான முடிவையும் பார்த்து ஆர்க்கிடெக்ட் இருவரும் வாயடைத்து நின்றனர்.

''சரி, தேவை என்னன்னு உங்களுக்குப் புரிஞ்சிருக்கும்னு நெனைக்கிறேன். ஆக வேண்டியதைப் பாருங்கோ... இனிமே நீங்களாச்சு - கிருஷ்ணமூர்த்தியாச்சு'' என்றபடியே மேனேஜர் ராமஸ்வாமியை அழைத்து ஆர்க்கிடெக்ட் இருவருக்கும் என்ன ஃபீஸ் உண்டோ அதைக் கொடுக்கச் சொன்னார்.

ஸ்வாமிகள் கையால் ஒரு ரூபாய் கொடுத்தால் போதும் என்றும், தங்களை ஆசீர்வதிக்கும்படியும் இருவரும் நமஸ்கரித்தனர்.

தங்கத்திலடித்த காமாக்ஷியம்மன் காசு, சோபன அக்ஷதை, குங்குமப் பிரசாதம் இருவருக்கும் வழங்கப்பட்டது. பெற்றுக்கொண்டு மறுபடியும் நமஸ்கரித்துப் புறப்பட்டனர். சொல்லிக் கொண்டே வந்த கிருஷ்ணமூர்த்தி, நீண்ட பெருமூச்சு விட்டார்:

''அந்த மகானோட சித்தம் இந்த நகரம்; நீங்க மேலோட்டமா பாத்திருப்பேள். உள்ளே போய் சுத்திப் பாருங்கோ... மனுஷ முயற்சி மட்டுமே இப்படி ஒண்ணை சிருஷ்டிக்க முடியாதுன்னு புரியும்.''

தம் நெஞ்சைத் தட்டி, ''இந்தக் கிருஷ்ணமூர்த்தி, அந்த மந்திரிகள், வந்திருந்த ஆர்க்கிடெக்டுகள், மேஸ்திரி



இந்தக் காலத்தில் சிலபேரைப் பற்றிக் கேள்விப்படுகிறோம் - பண விஷயத்தில் ரொம்பவும் நியாயமாயிருப்பவர், கணக்குகளில் ரொம்பவும் கறார் என்று. ஆனாலும் இப்படிப்பட்டவர்களுடைய ஆல்-ரௌண்ட் காரக்டரை (எல்லா அம்சங்களிலும் அவர்களுடைய நடவடிக்கைகளை)ப் பார்த்தால் அவற்றில் சிலதில் திருப்தி இல்லாமலும் பலபேருடையது இருக்கிறது. ஒன்று இருந்தால் ஒன்று இல்லாமலிருக்கிறது. படிப்பு, வயசு, காரியத்திறமை எல்லாம் சேர்ந்து, நடத்தையிலும் எல்லா அம்சங்களிலும் சுத்தமாக இருக்கிறார்களா என்று பார்த்தால், எங்கேயாவது இடறுகிறது. நாமும், 'பரவாயில்லை; அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லாட்டா பாதகமில்லை' என்று இவர்களிடம் நாட்டு நிர்வாகத்தை ஒப்புவிக்கிறோம்.

உள்பட... எல்லாருமே கருவிகள். இந்த நகரம், இந்த மாதிரிதான் இங்க எழும் பணும்னு சங்கல்பம் பண்ணது பெரியவா. அவரோட சங்கல்பம் எதுவோ, அதுதான் ஈஸ்வர சங்கல்பம். போய் ஓரளவு பாத்துட்டு வாங்கோ... அப்புறம் பேச லாம்!''

அவர் முகத்தில் சற்றே களைப்பு தென்பட்ட மாதிரி இருந்தது. அப்போது உள்ளே நுழைந்தார் மானேஜர். அவரைப் பார்த்ததும், ''ஜோஸப், இவாளைக் கூட்டிண்டு போய் சுத்திக் காமி'' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

'சங்கராபுரத்தில் ஜோஸப்பா? இதென்ன?' என்ற கேள்வியோடு பூரணியைப் பார்த்தான் அரவிந்தன். அவரைப் புரிந்துகொண்ட ஜோஸப் சொன்னார்:

''இங்கே ஒரு கோயில் இருக்கு. அதைப் பார்த்தா, உங்க சந்தேகம் மறைஞ்சிடும்'' என்றபடியே, ''இருங்க காரை எடுத்து வரேன்'' என்று போனார்.

'ட்டுர்' என்ற சப்தத்தோடு வந்து நின்றது வண்டி. அதைக் கண்ட இருவருமே ஆச்சரியப்பட்டனர்.

''இது ஸோலார் கார். இந்த சங்கராபுரத்துல தொண்ணூறு சதவிகிதம் ஸோலார் பவர்தான் பயன்பாட்டுல இருக்கு. அதோ பாருங்க'' என்று கைநீட்டினார்.

சூரிய ஒளியைச் சேமிக்கும் பாட்டரிகள் கூரையெங்கும் மிகப்பெரும் அளவில் தென்பட்டன. தூரத்தில் தென்பட்டது அருவி. சுற்றிலும் அழகழகான கட்டடங்கள்; விளையாட்டு மைதானம்... வண்டியில் அமர்ந்தபடி பார்த்துக் கொண்டே வந்தனர்.

''இதுதான் கோயில்'' என்றார் ஜோஸப். வடிவமே வித்தியாசமாய் இருந்தது.

பிரமாண்டமான ஸ்தூபி வடிவம்! அதன் உச்சியில் அசோகச் சின்னம். ஸ்தூபியின் நான்கு புறமும் தாமரை இதழ்கள் தென்பட, வாயிலுடன் கூடிய மண்டபங்கள். நான்கும் நான்கு ஆலயங்கள்!

ஒன்று ஹிந்துக் கோயில்; மற்றது மசூதி; அடுத்தது சர்ச்; இன்னொன்று குருத்வாரா! நான்குமே ஏ.சி. செய்யப்பட்டவை. அதனால், ஓரிடத்தின் வழிபாடு மற்றதைப் பாதிக்காது. பூரணியும் அரவிந்தனும் பிரமை பிடித்து நின்றனர்.

(தொடரும்)

ஆனால், 'ஹ்யூமன் நேச்சர்' (மனுஷ்ய இயற்கை) போகிற போக்கில், இப்படிக் கலந்தாங்கட்டிகளாக இருக்கிறவர்களுக்கு ஒரு பதவி, ஸ்தானம் என்பது கிடைத்தபிறகு, ஐந்துக்கு இரண்டு என்பது ஒன்று, அரை, கால், ஸைஃபர் என்று சரிந்துகொண்டே போகிறது. இதனால்தான், அர்த்த சுத்தத்தை மட்டும் சொல்லாமல், ஆனாலும் அதுதான் பொது நிர்வாகத்தில் மிகவும் முக்கியமான விஷயமாதலால், அதைப் பிரித்து முதலிடம் கொடுத்துச் சொல்லி, அதோடுகூட 'ஆத்ம சுத்தம்' என்பதாக, ஒருவனுடைய ஆல்-ரௌண்ட் காரக்டரும் பழுதில்லாமல் பூர்ணமாயிருக்க வேண்டுமென்று விதியில் சேர்த்திருக்கிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

★ எம்கே.அருள்ராஜா,
பெரிய திருக்கோணம்

மலர்களில் மணக்கும் மலர் எது?

ஆண்டாள் சூடிக் கொடுத்த மலர்கள்... ஆண்டவனை மணக்க வைத்தன!

★ அ.ஷண்முகசுந்தரம், பெங்களூர்

இரண்டு 'மைனஸ்'கள் கணிதத்தில் தவிர வேறு எங்கு 'ப்ளஸ்' ஆகும்?

'நான்' என்னும் MYNESS நம்மிடம் இருந்து Minus ஆனால், சந்தோஷம் Sur'plus'!

★ பா.அசோக், விருதுநகர்

வாடகை வீடு, சொந்த வீடு என்ன வித்தியாசம்?

வித்தியாசம் இல்லாமல், ஒற்றுமையாக எல்லோரும் இப்போது வாடகை ஃப்ளாட் அல்லது சொந்த ஃப்ளாட்டில் தான் வசிக்கிறார்கள். ரியல் எஸ்டேட் போகும் ரேட்டில் சொந்த வீட்டுக்கே வாடகை கொடுக்க வேண்டிய காலமும் வரலாம்!

★ ஜி.பாலசுப்ரமணியன்,
ஸ்ரீவில்லிப்புத்தூர்

'பட்ட காலிலே படும்' என்று காலை மட்டும் கூறுகிறார்களே, ஏன்?

தெருவில் நடப்பதற்குப் பதிலாக நீந்திப் பாருங்கள். பட்ட கையிலேயே படும்!

"சொந்தக் குரலில்



★ சாருமதி, கல்கத்தா

எது அதிர்ஷ்டம்? எது துரதிர்ஷ்டம்?

அதிர்ஷ்டம் அடிக்கும். துரதிர்ஷ்டம் துரத்தித் துரத்தி அடிக்கும்!

★ அ.சு.கிருஷ்ணன்,
புதுச்சேரி

எங்கள் புதுச்சேரி பற்றி ஒரு சின்ன கவிதை ப்ளீஸ்?

'அவ்வை ஷண்முகி' ஹிந்தியில் எடுக்கப்பட்ட போது, வசன

கிரேஸியைக் கேளுங்கள்

மொழி மாற்றத்துக்காக எழுத்தாளர் குல்லொரைச் சந்தித்தேன். தமிழ் வசனங்களைக் கேட்டு விட்டு அவர், ''மதறாஸிகளுக்கு நல்ல நகைச்சுவை உணர்வு'' என்றார். அது என்னவோ தெரியாது. இந்த மதறாஸிக்கு (அடியேன்) எல்லாமே புதுச்சேரி 'மதர்-ஆசி'தான். கேட்ட கவிதை கீழே...



...பாட ஆசைப்பட்டதுண்டா?"

அம்மா எனச்சொல்லி சும்மா இருந்திடு
நம்மால் இயன்ற(து) அதுதானே - பெம்மான்
அரவிந்தர் அன்னை குருதெய்வம், வேறு
உறவிந்த வாழ்வில் எதற்கு....'

★ **ஏ.கே.நாசர், டி.ஆர்.பட்டினம்**

ஒரு மனைவி தன் கணவனை எந்தக் கோலத்தில் மட்டும் பார்ப்பதற்கே விரும்ப மாட்டாள்?

திருமணக் கோலத்தில்!

★ **அ. யாழினி பர்வதம், சென்னை-78**

தேன் எடுத்தவன் புறங்கையை நக்கினால் தப்பா?

தேன் எடுத்தவன் புறங்கையை நீங்கள் நக்கினால் அது தப்பு மட்டுமல்ல, எச்சிலும்கூட.

★ **என். சண்முகம், திருவண்ணாமலை**

'தோல் இருக்க சுளை முழுங்கி' எவன்?

எமன். உடல் இருக்க உயிர் முழுங்கி!

★ **மு.மதிவாணன், அரூர்**

சொந்தக் குரலில் பாட வேண்டும் என்று எப்போதாவது விபரீதமாக ஆசைப் பட்டதுண்டா?

எவ்வளவு ஆசைப்பட்டாலும் மற்றவர்களின் குரலில் பாடினால் அது மிமிக்ரி ஆகிவிடாதா! நான் என் சொந்தக் குரலில்தான் பாடுவேன். நீங்கள் சொன்ன விபரீதம் ஆகாமல் இருக்க, கேட்பவர்கள் இரவல் காதுகளைப் பயன்படுத்துவது பெட்டர்!

★ **வி.ஜி.சத்தியநாராயணன், நங்கநல்லூர்**

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் ஏன் மீசை வைத்துக் கொண்டிருக்கிறார்?

தம்முடைய நெருங்கிய தோழன் பாரதியாருக்கு கம்பெனி கொடுக்க!

★ **வாசுதேவன், அயிரோலி**

ஒரு மாறுதலுக்கு நம் வீடுகளில் மிக்ஸி, கிரைண்டர்களுக்குப் பதிலாக உரல், அம்மி, குழவி, உலக்கை வந்தால்?

கல்லானாலும் கணவர்கள் சார்பாக இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்!

★ **ஆர்.செண்பகவல்லி, விருதுநகர்**

உண்மை உறங்கும் என்கிறார்களே.... அப்ப பொய்?

பேந்தப் பேந்த விழிக்கும்!

★ **குலசை நஜ்முதீன், காயல்பட்டிணம்**

எந்தப் பொண்ணை நம்பக்கூடாது?

அது தெரியாது. நம்ப பொண்ணை நம்பலாம்!


"எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் மணியார்டருக்குக்கூட கமிஷன் வாங்கமாட்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்..."
கட்சிக்கு நாயா உழைச்சுருக்கேன் தலைவரே!
வேணும்னா 'வெட்னரி டாக்டர்' பட்டம் தரச் சொல்றேன்.
- அம்பை தேவா
அரசியல்ல இதெல்லாம்


நாடு முன்னேறணும்னா நல்ல திட்டங்களை வகுக்கணும்...
எத்தனையாலே..?
- ராஜி ராதா
மரக்கன்று நடுவதில் தலைவர் ரொம்ப ஆர்வமா இருக்காரே!
நாளைக்கு ஒரு கலவரம், சாலை மறியல்னா ரோட்டுக்குக் குறுக்கே வெட்டிப்போட மரம் வேண்டாமா?
- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்
"தலைவர்அடிக்கடி, 'எண்ணிப்பாருங்கள்... நன்றாக எண்ணிப் பாருங்கள்...' னு பொதுக்கூட்டத்துல சொல்றாரே ஏன்?"
"தலைவர் ஜெயிச்சுப் போனா தொகுதிப் பக்கமே வர்றதில்லையே... ஏன்?"
"சுத்திச் சுத்தி மக்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாதுன்னு தான்...!"
- பெ.பாண்டியன்
"வோட்டுப் போட குடும்பத்துல உள்ளவங்களுக்கு ஐந்நூறு ரூபா கொடுத்தது சரியா இருக்கான்னு எண்ணிப் பார்க்கச் சொல்லியிருப்பார்!"
- சீர்காழி வி.ரேவதி
சகஜமப்பா!

வட இந்தியாவின் ஒரு புழுதிப் பிரதேசத்திலிருந்த சிமெண்ட் தொழிற்சாலையில் அந்த விபத்து நடந்தபோது, கௌதம் பங்க்கரின் மேல் நின்றுகொண்டிருந்தான்.

ஓடிக் கொண்டிருந்த ஒரு தொழிலாளி மேலே பார்த்து, "கௌதம் ஸாப்... ஆக்ஸிடென்ட் ஹோகயா..." என்று குரல் கொடுக்க, அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

கௌதம்தான் சைட் இன்சார்ஜ். பி.இ மெக்கானிக்கல் என்ஜினீயரிங் படித்து, வேலைக்குச் சேர்ந்து, 27 வயதில் சைட் இன்சார்ஜ் பொறுப்பு கிடைத்தபோது சந்தோஷமாக இருந்தது. இந்த ஐந்து வருட அனுபவத்தில், இப்போதுதான் முதன் முதலாக ஒரு தொழிற்சாலை விபத்தைச் சந்திக்கிறான்.

பதற்றத்துடன் ஸ்டீல் படிக்கட்டுகளில் இறங்கிய கௌதம், கும்பலை விலக்கிவிட்டு, கன்வேயரை நெருங்கினான்.

"கோன் ஹை?" என்றான்.

"ஆப்கா லேபர் ஸாப்... சிவராஜ்"

சிவராஜ் என்றவுடன், கௌதம் அதிர்ந்தான். இருபது வயதுதான் இருக்கும். இவர்கள் நியமித்த ஆள்தான். பாய்லர் எரக்ஷனுக்

ஜி.ஆர்.சுரேந்தர்நாத்

கான சில சிறிய வேலைகளுக்காக, இவர்களே உள்ளூர் ஆட்களை வேலைக்கு வைத்திருப்பார்கள். அவர்களுக்கு இந்த சிமெண்ட் தொழிற்சாலை பொறுப்பேற்றுக் கொள்ளாது. கௌதமின் நிறுவனம்தான் அவர்களுக்குப் பொறுப்பு. சிவராஜ் உள்ளூர் ஹிந்திவாலா.

ப்ளாண்ட்டில் சிவராஜுடன் பணியாற்றும் பிரசாத்தை நெருங்கி,

"என்னாச்சு?" என்றான் ஹிந்தியில்.

"கன்வேயர் பெல்ட்ல, நிலக்கரியோட கம்பி ஒண்ணு கலந்து போய்ட்டிருந்துச்சு. எடுக்கறதுக்காக அப்படியே கைய விட்டான். இழுத்துடுச்சு ஸார்.."

"புல் கார்ட இழுத்துருக்கலாம்ல?"

"தெரியும் ஸார்... எத்தனையோ தடவை சொல்லியிருக்கேன். அன்னைக்கு ஒரு தடவை இப்படித்தான் ஒரு துணியை எடுத்தான். அன்னைக்கே சொன்னேன்."



கனா காணும் காலங்கள்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை - 6



மீண்டும் சலசலப்பு சத்தம். அந்த சிமெண்ட் தொழிற்சாலையின் பர்சனல் ஆஃபீஸரும், யூனியன்காரர்களும் வந்திருந்தார்கள். பி.ஓ.விடம் விஷயத்தைக் கூறினான் கௌதம். யூனியன்காரர்கள், பி.ஓ.விடம் ஏதோ சத்தமாகப் பேசினார்கள். பி.ஓ. அவர்களிடம் ஏதோ சமாதானமாகக் கூறினார். அதற்குள் தகவல் தெரிவிக்கப்பட்டு, ஆம்புலன்ஸ் வந்து சேர, சிவராஜின் உடல் எடுத்துச் செல்லப்பட்டது.

சில நிமிடங்களிலேயே ஃபேக்டரி இன்ஸ்பெக்டர் வந்து சேர... மீண்டும் சலசலப்பு. அவர்தான், இப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளை ஆய்வு செய்யும் அரசு அதிகாரி. ப்ளாண்ட்டினுள் நுழைந்தவுடனேயே வேகமாக, ''சைட் இன் சார்ஜ் கோ புலாவ்..'' என்றார் கடுமையாக.

கௌதம் பதற்றத்துடன் அவரை நெருங்கினான்.

''நாம் க்யா?''

''கௌதம் ஸாப்...''

தொடர்ந்து ஹிந்தியில், ''பையன் மேஜரா, மைனரா?'' என்றார்,

''மேஜர்தான் ஸாப்...''

''அப்புறம் ஏஜ் ப்ரூஃப் சர்டிஃபிகேட் காமிக்கணும். சேஃப்டில லாம் ஒண்ணும் கிடையாதா?''

''புல்கார்டெல்லாம் இருக்கு ஸார். நிறுத்தாம பையன், கையை விட்டுட்டான்.''

''புல்கார்டு வொர்க் பண்ணுதா?''

''யெஸ் ஸார்...''

''நான் செக் பண்ணணும்...''

''பண்ணலாம் ஸார்...'' என்று கௌதம் கூறிக் கொண்டிருக்கும்போதே அங்கு வந்த

பி.ஓ., ஃபேக்டரி இன்ஸ்பெக்டரை அணைத்தாற்போல் அழைத்துச் சென்றார். உள்ளூர்க்காரர். ஆள் தெரிந்திருக்கும். அவரிடம் பேசிவிட்டு வந்த பி.ஓ., கௌதமை ஓரமாக அழைத்துச் சென்றார்.

''என்ன ஸார்... ரொம்ப கடுமையாப் பேசுறாரு...'' என்றான் கௌதம்.

''பணம் கைக்கு வர்ற வரைக்கும், அப்படித்தான் பேசுவாரு.''

''பணமா?''

''ஆமாம்... அப்பதான் கேஸ் போடாம, தனிநபர் கவனக்குறைவுன்னு க்ளோஸ் பண்ணுவாரு. ஏதாச்சும் ஏசகுபிசகா எழுதிட்டான்னா வம்பு. போலீஸ் கேஸாயிடும். ரெண்டு லட்ச ரூபா இவனுக்குக் கொடுத்துட்டா ஒண்ணும் பிரச்னையிருக்காது.''

பேண்ட் பாக்கெட்டிலிருந்து தனது மொபைலை எடுத்த கௌதம், நடுக்கத்துடன் ஜி.எம்.மின் நம்பரை அடித்தான்.

''என்ன கௌதம்... ஹவ் ஆர் யூ?'' என்று உற்சாகமாகப் பேச ஆரம்பித்த ஜி.எம்.மிடம் விவரத்தைக் கூறினான். எதிர்முனையில் சில வினாடிகளுக்கு மௌனம். பிறகு, ''ரெண்டு லட்சம் ரொம்ப அதிகம். ஒரு லட்சத்துக்கு முடி...'' என்றார்.

கௌதம் பி.ஓ.விடம், ஜி.எம். கூறியதைத் தெரிவித்தான். அவர், ''இங்கல்லாம் இது ஃபிக்ஸட் ரேட்... உனக்காகப் பேசிப் பாக்குறேன்'' என்று பேசிவிட்டு வந்தவர், ''அந்த பைசாகூட குறைக்கமாட்டானாம். இன்னைக்கே வந்தாகணுமாம். இப்ப உன்கிட்ட எவ்வளவு இருக்கும்?''

''கம்பெனி பணம் ஒரு ஐம்பதாயிரம் ரூபாய் இருக்கும். அங்கேயிருந்துதான் அனுப்பச் சொல்லணும். வேற என்ன செலவு இருக்கு சார்?''

''ம்... லேபர் கமிஷனர் ஆஃபீஸ்ல, செத்துப் போனவனுக்கு காம்பன்ஸேட் பண்றதுக்காக, மூணு வருஷ சம்பளம் டெபாசிட் பண்ணணும். அப்புறம்... இதோ போலீஸ் வந்துருச்சு. அவங்களுக்கு ஒரு அஞ்சாயிரம் ரூபாயாச்சும் கொடுத்துத்தான் ஆவணும். அப்புறம் ஹாஸ்பிடலைப் பொறுத்தவரைக்கும் ஒண்ணும் பிரச்னை இல்ல. நான் ஒரு ஆளை அனுப்புறேன். அவன்கிட்ட பத்தாயிரம்


காதல் கவிதை

✱ யார் முதலில்
பேசுவதெனத் தயங்கி
நிற்கையில்
எங்கோ ஒரு சரத்தில்
ஏதோ ஒரு பூ
உதிர்ந்து போகிறது...

✱ உன்னிடம்
பேச வேண்டுமென நானும்
என்னிடம்
பேச வேண்டுமென நீயும்
நினைத்துக் கொள்ளும் நிமிடங்களில்
எங்கோ ஒரு செடியில்
ஏதோ ஒரு பூ மலர்கிறது...

✱ என் கண்களில்
கொஞ்சம் புன்னகையையும்
என் உதடுகளில்
கொஞ்சம் கண்ணீரையும்
ஏந்தி நிற்கிறேன்...
எதைப் பரிசளிக்கப் போகிறாய்?

- பாரதிகிருஷ்ணன்



கொடு. போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சு, பாடியை வீட்டுக்குக் கொண்டுபோறவரைக்கும் அவன் பாத்துக்குவான். அப்புறம் மெயின் மேட்டர்... உடனே செத்துப் போனவங்க வீட்டுக்கு, ஏதாச்சும் செட்டில்மெண்ட் செஞ்சாதான் யூனியன்காரங்க பாடியை எடுக்க விடுவாங்க.''

கௌதம் தலையில் கையை வைத்துக் கொண்டு, அருகிலிருந்த சிமெண்ட் கட்டையில் அமர்ந்தான்.



மீண்டும் ஜி.எம்.மிடம் பேசி விஷயத்தைச் சொல்லி பணம் ஏற்பாடு பண்ணச் சொன்னான்.

பி.ஓ. அனுப்பிய ஆளுடன், ஜீப்பில் அரசு மருத்துவமனைக்குச் சென்றான். போகும் வழியில் ஏ.டி.எம்.மில் பணம் எடுத்துக் கொண்டான். மருத்துவமனையில் அவனுடன் வந்த ஆளின் கையில் பத்தாயிரத்தைக் கொடுத்தான். அவன், ''ஒரு ரெண்டு அவர்ல முடிச்சுடலாம் ஸார்'' என்று கூட்டத்தில் காணாமல் போனான்.

பி.ஓ. வந்துவிட்டார்.

''வா... வந்து யூனியன்காரங்க கூட பேசி செட்டில்மெண்ட் முடிவு பண்ணு. சிவராஜ் ஃபேமிலிக்கு மூணு லட்சம் ரூபாய் கொடுக்கணுங்கிறாங்க. இன்னைக்கே அம்பதாயிரம் கொடுக்கணும். அடுத்த வாரம் பாலன்ஸ் பணம் கொடுக்கணும்'' என்றார்.

''ஸார் லேபர் கமிஷனர்கிட்ட வேற ஒண்ணேகால் லட்சம் கட்டப் போறோம். அந்தப் பணம் அவங்களுக்குதான் வந்து சேரும். அதனால இதை ஒரு ரெண்டு லட்சத்துக்கு முடிச்சுடுங்க சார்... இதுக்கே ஜி.எம்.கிட்ட நான் பேசியாகணும்.''

பி.ஓ. சென்று அவர்களிடம் விஷயத்தைக் கூறினார். உடனே யூனியன்காரர்கள், சிவராஜுடைய குடும்பத்தை அழைத்துக் கொண்டு அவனை நோக்கி வந்தனர். சிவராஜின் அம்மா போல் தெரிந்த ஒருத்தி, இவனைப் பார்த்தவுடன் கையெடுத்துக் கும்பிட்டு அழுதாள். ஹிந்தியில் ஏதோ கூறினாள். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

மேலும் சில நிமிடப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, இரண்டரை லட்சம் கொடுப்பதென்று முடிவாயிற்று. களைப்புடன் கௌதம் மரத்தடியில் அமர்ந்தான். இவனருகில் வந்த பி.ஓ., ''போலீசுக்கு...'' என்று இழுக்க, கௌதம் இயந்திரம் போல், ஐந்தாயிரத்தை எடுத்து நீட்டினான். போலீஸ்காரர்கள், இவனுக்கு சலாம் செய்துவிட்டுக் கிளம்பினர்.

சுடுகாட்டிலிருந்து அனைவரும் கலைந்து செல்ல... எரிந்துகொண்டிருந்த சிவராஜின் சடலத்தைப் பார்த்துக்கொண்டே நின்றான் கௌதம். பி.ஓ. இவனருகில் வந்து, ''போலாமா?'' என்றார்.

''நீங்க போங்க ஸார்... நான் கொஞ்ச நேரத்துல வந்துடுறேன்.''

எரிந்துகொண்டிருந்த சடலத்தைப் பார்க்கப் பார்க்க சிவராஜின் முகம், மெல்ல மெல்ல கௌதம் முன் உயிர் பெற்று எழுவது போல் தோன்றியது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு...

கம்பெனி கெஸ்ட் ஹவுஸ். ஒரு நாள் இரவு,

எட்டு மணி போல் இருக்கும். கம்ப்யூட்டரில், செவன் ஜி ரெயின்போ காலனி பாடல் கேட்டுக் கொண்டிருந்தான் கௌதம்.

''கனா காணும் காலங்கள்...
கலைந்தோடும் மேகங்கள்...''

என்று பாட்டில் ஆழ்ந்திருந்தபோது, திடீரென்று ஜன்னலுக்கு வெளியே ''ஆ...'' என்ற சத்தம் கேட்க, வேகமாக டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான். சிறு வயதாகத் தெரிந்த ஒருவன், ஜன்னருலகில் காலைப் பிடித்துக் கொண்டு தரையில் உட்கார்ந்திருந்தான்.

''கோன் ஹை?''



என்றான்.

''உங்க லைட்டுலதான் வேலை செய்றேன். பேரு சிவராஜ்'' என்றான் ஹிந்தியில்.

''இங்க என்ன பண்ணிட்டிருக்க?''

''பாட்டு கேட்டுட்டிருந்தேன்.''

''தமிழ்ப் பாட்டா கேட்டுட்டிருந்த?''

''ஆமாம்... கன்னா... காண்ணும் காலங்கள்...'' என்று அவன் கொச்சையான தமிழில் பாடிக் காண்பிக்க, கௌதம் சிரிப்புடன், ''உள்ள வா...'' என்றான்.

உள்ளே நுழைந்தவனின் முகத்தை நோக்கினான். கண்களில் எந்தக் கள்ளத் தனமும் இல்லை.

''நல்ல பாட்டு. யாரு மியூஸிக்?'' என்றான் ஹிந்தியில்.

''யுவன்ஷங்கர் ராஜா மியூஸிக். இளையராஜா கேள்விப்பட்டிருக்கியா? அவரோட பையன். இளையராஜாவும், தமிழ்ல பெரிய மியூசிக் டைரக்டர்.''

''ஓ... தினம் ராத்திரி இந்தப் பக்கம் வந்தேன்னா பாட்டுச் சத்தம் கேட்டுச் கன்னா, நின்னு கேட்டுட்டுதான் போவேன்'' என்ற சிவராஜைப் பிரியத்துடன் பார்த்தான்.

அன்று முதல் தினமும் இரவு, பாடல் கேட்க சிவராஜ் வந்து விடுவான்.

''எங்க ஊரு பிடிச்சிருக்கா உங்களுக்கு?''

''பிடிக்கலதான்.''

''ஏன்?''

''மொதல்ல பாஷை. எனக்கு அரைகுறையாதான் ஹிந்தி தெரியும். அதுவே இங்க வந்து கத்துக்கிட்டதுதான். அப்புறம் மூணு வேளையும் சப்பாத்தி தின்னு தின்னு நாக்கு செத்துப் போயிடுச்சு.''

மறுநாள் இரவு சிவராஜ் ஒரு டிபன் கேரியருடன் வந்தான்.

''என்னது இது?''

''எங்க வீட்டுக்குப் பக்கத்துல ஒரு மதராஸி இருக்காங்க. அவங்ககிட்ட சொல்லி வாங்கிட்டு வந்தேன். தினமும் ராத்திரி தர்றேன்னுருக்காங்க...'' என்றவனை தெய்வத்தைப் பார்ப்பது போல

பார்த்தான்.

அன்றிலிருந்து, சிவராஜின் மேல் கௌதமுக்குத் தனிப்பிரியம். சிவராஜ் தினமும் இரவில் சாப்பாட்டோடு வந்து விடுவான். பாட்டு கேட்பான். எத்தனைப் பாடல்கள் கேட்டாலும், அவனுக்கு யுவன்ஷங்கர் ராஜா பாடல்கள்தான் மிகவும் பிடித்திருந்தன.

''இன்னைக்கு இதைக் கேளேன்...'' என்று கம்ப்யூட்டரில் தேடினான் கௌதம்.

''யு வ ன் ஷ ங் க ர் பாட்டா...?''

''இல்ல... அவங்கப்பா இளைய ராஜாவோட ஆல்பம் ஒண்ணு. வெறும் இ ன் ஸ் ட் ரு மெ ன் ட் மியூஸிக்தான். ஹவ் டு நேம் இட்ன்னு பேரு... கேட்டுப் பாரு...'' என்ற கௌதம் 'டு எனிதிங்' என்ற இசைப்பாடலில் க்ளிக் செய்தான். சிவராஜ் ரசனையுடன் கேட்க ஆரம்பித்தான். சில விநாடிகளிலேயே அவன் கண்கள் மூடின. தலை மட்டும் மெலிதாக ஆடிக் கொண்டிருந்தது. கௌதம் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''சொர்க்கத்துக்குள்ள போனா இப்படித்தான் இருக்குமா சாப்?'' என்று கேட்க, கௌதம் பிரியத்துடன் அவன் தலையைக் கோதிவிட்டான். அப்போதே கௌதம் முடிவு செய்துவிட்டான். சிவராஜுக்கு ஒரு ஐபாட் வாங்கித் தருவதென்று.

நேற்று மாலைதான் நேரம் கிடைத்தது. அருகிலிருந்த நகரத்துக்குச் சென்று ஐபாட் வாங்கிக் கொண்டு வந்தான். இரவு கம்ப்யூட்டரிலிருந்து சிவராஜுக்குப் பிடித்த யுவன் ஷங்கர்ராஜா பாடல்கள்... ஹவ் டு நேம் இட்... நத்திங் பட் விண்ட்... ரஹ்மான் பாடல்கள்... என்று அவனிடமிருந்த அனைத்து சிறந்த இசையையும் ஐபாடில் டவுன்லோட் செய்திருந்தான். இன்று மாலை, வேலை முடிந்து சிவராஜ் வீட்டுக்குச் செல்லும்போது கொடுக்கலாம் என்று அந்த ஐபாடை எடுத்து வந்திருந்தான். அதற்குள்...

எரிந்துகொண்டிருந்த தீயைப் பார்க்கப் பார்க்க கௌதமின் கண்கள் கலங்க ஆரம்பித்தன. பாக்கெட்டினுள் கையை விட்டு அந்த ஐபாடை எடுத்தான். காற்றில் தீ அலைய... அலைய... சிவராஜ் மனகக்குள் கொஞ்சம், கொஞ்சமாக விஸ்வரூபமெடுத்துக் கொண்டிருந்தான்.





''இங்கல்லாம் ரஹ்மான்தான் ஃபேமஸ். யுவன்ஷங்கர் வந்தாக்கூட ஃபேமஸ் ஆயிடுவாரு சாப்...''

''எப்ப லாப் கல்யாணம் பண்ணப் போறீங்க?''

''உங்க ஊருக்கு ஒரு தடவை அழைச்சுட்டுப் போறீங்களா லாப்?''

கையிலிருந்த ஐபாடை முகத்தோடு சேர்த்து இறுக்கிக் கொண்டு கதறிக் கதறி அழ ஆரம்பித்தான் கௌதம். ●

சுனேனாவுக்கு விசிலடிக்கும் கூட்டம் பெருகிவிட்டது. 'காதலில் விழுந்தேன்', 'மாசிலாமணி' அடுத்தடுத்த இரண்டு படங்களும் சூப்பர் ஹிட்டாக, சுனேனாவின் கால்ஷீட் டைரி காய்த்த மரமாகி விட்டது. இப்போது மேடம், பரத்துடன் 'திருத்தணி' படப்பிடிப்பில் பிஸி.

பி அண்ட் சி ரசிகர்கள் மனசிலும் சீட் போட்டுட்டீங்க. எப்படி ஃபீல் பண்றீங்க?

''அல்வா சாப்பிட்ட மாதிரி மனசெல்லாம் இனிப்பா இருக்கு. எனது படங்கள் ஹிட்டானது மட்டுமல்லாமல் எல்லா ஆடியன்ஸ் மனசுக்குள்ளேயும் நான் விழுந்துள்ளதால் எனக்கு இரட்டிப்பு சந்தோஷம் தான். இதைத் தக்கவைத்துக் கொள்வது எனது சாமர்த்தியம்.''

இப்போது நடித்து வரும் படங்களில் கேரக்டர்கள் பற்றி?

'''யாதுமாகி'யில் கிராமத்துப் பெண் வேடம். பாவாடை தாவணின்னு கிராமத்துல இருக்கிற என்னைப் பட்டணத்துக்கு அழைத்துவரும் சூழல்தான் கதை. என் கதாபாத்திரம்தான் கதையின் முக்கியத்துவம்னு சொல்லலாம். படம் வந்தபின், சுனேனா எக்ஸலண்ட் பெர்ஃபார்மன்ஸ்ன்னு நீங்க பாராட்டத்தான் போறீங்க. 'கதிர்வேல்' பக்கா கமர்ஷியல் படமா இருக்கும். சரண் ஸாரிடம் இணை இயக்குநராக இருந்த வெங்கடேசன்தான் இயக்கியுள்ளார். இதுல மாடர்ன் பெண்ணா நடித்திருக்கிறேன், காமெடி மிக்ஸிங்கில் துறுதுறு கேரக்டர். நல்ல என்டர்டெயினர் ஃபிலிம்மா இருக்கும்.

'திருத்தணி' படத்தோட கேரக்டர் என்னன்னு இப்போ சொல்லக்கூடாது. சொன்னா டைரக்டர் பேரரசு கோபத்துக்கு ஆளாகணும்.''

என்ன மாதிரி கேரக்டர் பண்ண ஆசை?

''நான் ஆசைப்பட்டா போதுமா? அமையணுமே. எல்லாமே இயக்குநர்கள் கையில் தான் இருக்கு. எனது கேரக்டர் கதையுடன் தொடர்புடையதா இருக்கணும். டூயட்டுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் கதையென்றால் ஒப்புக்கொள்ள மாட்டேன்''

சொந்தக் குரல்ல பேசி நடிக்கும் ஆர்வம் இருக்கா?

''நிச்சயமா ட்ரை பண்ணணும். இப்போ தான் தமிழ் கற்றுக்கொள்ள ஆரம்பிச்சிருக்கேன். இன்னும் கொஞ்ச நாள்ல டப்பிங் பேசுற அளவுக்கு வந்துடுவேன். டப்பிங் பேசுறது சாதாரண விஷயமல்ல. அதுவும் கிட்டத்தட்ட நடிப்பு மாதிரிதான்.''

ரியல் லைஃப்ல சுனேனா எப்படி?

''பல நேரங்களில் மூடியா இருப்பேன். சந்தோஷமான நேரங்களில் செம சவுண்ட் பார்ட்டியா மாறிடுவேன் ஷூட்டிங் ஸ்பார்ட்டில் செம ஜாலி பொண்ணு நான். எமோஷனல் ஸீனில் என்னையும் அறியாமல் அழுதுவிடுவேன். 'யாதுமாகி' படத்தில் ஒரு ஸீனில் நடிக்கும்போது, கிளிசரின் கொண்டு வருவதற்குள் என் கண்கள் கலங்கிவிட்டன. செண்டிமெண்ட் பார்ட்டின்னு சொல்லலாம்.''

ப்ளஸ்/மைனஸ்?

''தெலுங்குப் படங்களில் நடிக்க முயற்சி பண்ணிக்கொண்டிருந்த நேரம். கிட்டத்தட்ட ஒரு ஐம்பது படங்களிலாவது எனது ஸ்டில்களை ரிஜக்ட் பண்ணியிருப்பாங்க. மூக்கு சரியில்லை, கண்ணு சரியில்லைன்னு ஏதாவது குறை சொல்லித் திருப்பி அனுப்பிடுவாங்க. என்னை எதற்காக குறை சொன்னாங்களோ, அந்த மைனஸ்களே இப்போது ப்ளஸ்களாக மாறியுள்ளன. 'காதலில் விழுந்தேன்' படத்தின் தியேட்டர் விசிட்டுக்காகப் போனபோது, என்னைப் பார்த்த ரசிகர்கள் கிட்ட ஓடிவந்து உங்க சிரிப்பு நல்லாயிருக்கு, ஆக்டிங் நல்லாயிருக்குன்னு பாராட்டினப்போ நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.''

- மகிமைராஜன்


செண்டிமெண்ட்
பார்ட்டி!

காவேரி நதியின் பரிசல் துறையில் அரசமரம் ஒன்று செழிப்பாக வளர்ந்து, கப்பும் கிளையுமாகப் படர்ந்து நிழல் தந்துகொண்டிருந்தது. இளங்காற்று வீசியபோது அதனுடைய இலைகள் ஒன்றோடு ஒன்று உராய்வதில் ஏற்பட்ட 'சலசல' சப்தம் மிகவும் மனோகரமாயிருந்தது. அரசமரத்துடன் ஒரு வேப்பமரமும் அண்டி வளர்ந்து இருந்தது. இவற்றின் அடியில் இருந்த மேடையில் ஒரு கல்லுப்பிள்ளையார் எழுந்தருளி இருந்தார்.

பிள்ளையார் சதாசர்வதா இருபத்துநாலு மணி நேரமும், அவருக்கெதிரே கொஞ்ச தூரத்தில் இருந்த ஒரு காப்பி ஹோட்டலைப் பார்த்த வண்ணமாய் இருந்தார். ஆனால், அவருக்கு ஓர் அரை கப் காப்பி எப்போதாவது யாராவது கொடுத்தது உண்டோ என்றால், கிடையாது. சில சமயங்களில் காப்பிக்கொட்டை வறுக்கும்போது வரும் வாசனையை அனுபவிப்பதுடன் அவர் திருப்தி அடைய வேண்டி இருந்தது.

வேலம்பாளையம் ஒரு சின்னஞ்சிறிய கிராமம். அதற்குச் சமீபத்தில் உள்ள ரயில்வே

பரிசல்துறை பிள்ளையார்!



அமரர் கல்கி

ஸ்டேஷன் பதின்மூன்று மைல் தூரத்திலிருப்பது. கிராமவாசிகள் ரொம்பவும் சாமான்யமான ஜனங்கள். குடியானவர்களும் கைக்கோளர்களும் ஹரிஜனங்களும்தான் அங்கே வசித்தார்கள். காவேரிக் கரையில் இருந்தும் ஜலக் கஷ்டம். அவ்விடம், காவேரி ஆற்றின் தண்ணீர், சாகுபடிக்குப் பயன்படுவதில்லை. பூமி அவ்வளவு மேட்டுப் பாங்காயிருந்தது. சாதாரணமாய், கரையிலிருந்து வெகு ஆழத்தில் ஜலம் போய்க் கொண்டிருக்கும். பெரு பிரவாகம் வரும் காலத்தில் அரச மரத்தின் அடி வேரைத் தொட்டுக் கொண்டு போகும்.

இப்படிப்பட்ட பட்டிக்காட்டிலே கொண்டு வந்து காப்பி ஹோட்டல் வைத்திருந்தார் ஒரு பாலக்காட்டு ஐயர். அவர் வடதுருவத்துக்குப் போய்ப் பார்த்து, அங்கேகூட ஹோட்டல் அதிகமாகி, வியாபாரம் கம்மியாய்ப் போனதைத் தெரிந்து கொண்டுதான் இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம்.

வண்ணத் தூரிகை

பரிசல் துறையிலிருந்து கிராமம் கொஞ்ச தூரத்திலிருந்தது பரிசல் துறைக்கு அருகில் இரண்டே கூரைக் குடிசைகள். அவற்றில் ஒன்றிலேதான் ஹோட்டல். அதன் வாசலில் இங்கிலீஷிலே 'டிரிப்ளிகேன் லாட்ஜ்' என்றும், தமிழிலே 'பிராமணாள் காப்பி டீ கிளப்' என்றும் எழுதிய போர்டு ஒன்று தொங்கிற்று. அன்று சந்தை நாள் ஆகையால் ஹோட்டலில் வியாபாரம் அதிகம். ஐந்தாறு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் இரண்டொருவர் தையல் இலையில் வைத்திருந்த இட்டிலியை சிரமத்துடன் விண்டுவிண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

('பரிசல்துறை' கதையிலிருந்து...)





நீங்க ஆஃபீஸ்ல பிஸியா இருக்கற மாதிரி காட்டிக்கிட்டு ஓ.பி. அடிக்கற ஊழியரா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்க... நீங்க உண்மையாவே ஓ.பி. அடிக்கறீங்களா... அதை மத்தவங்களுக்குத் தெரியாம செய்றீங்களான்னு நாங்க சொல்றோம்.

1. உங்கள் மானிட்டரில் முக்கியமான ஏதேனும் ஒரு ஃபைலையோ, கோடையோ (code) திறந்து வைத்து விட்டு ஏதோ யோசிப்பது போல அதையே பார்த்துக்கிட்டிருப்பீங்களா?

2. அடிக்கடி நெற்றியைச் சொறிந்து கொண்டு, அவ்வப்போது பற்களைக் கடித்துக் கொண்டு, ஏதாவது ரெண்டு வார்த்தை டைப் செய்துவிட்டு யோசிப்பது போல் பாவ்லா காட்டுவீங்களா?

3. கம்ப்யூட்டர் மவுஸை உபயோகிக்காம, கீ போர்டு ஷார்ட் - கட் கீ -க்களை உபயோகித்து பிஸியா, வேகமா வேலை செய்யற மாதிரி காட்டிக்கறீங்களா?

4. அடிக்கடி கம்ப்யூட்டரை முறைத்து அல்லது வெறித்துப் பார்த்து, நகத்தையும் கடிக்கறீங்களா?

5. சீட்டில் சாய்ஞ்சு உட்காராம முன்னால் இழுத்து விட்டு சில நிமிடங்களுக்கு சீட் நுனியில் உட்கார்ந்து டைப் அடிச்சிட்டிருப்பீங்க... கரெக்டா?

6. அவ்வப்போது பேப்பர், ஃபைல்களைக் கலைச்சு பெருமூச்சு விடுவீங்க. நீங்கள் எதையோ தேடுறதா மத்தவங்க நினைச்சுக்குவாங்க. கடைசியில் ஏதாவது ஒரு பேப்பரை எடுத்துச் சிரித்தபடியே ''யெஸ்...'', ''சக்சஸ்'' - இப்படி ஏதாவது சொல்லி ஸீன் போடுவீங்க... அப்படித்தானே?

7. வேலையே இல்லன்னாலும் எங்காவது எழுந்து வேகமா நடந்து போவீங்க, ஏதோ முக்கியமான விஷயம்னு எல்லாரும் நினைக்கணும்னு... சரிதானா?

8. ஆஃபீஸில் நடந்து போகும்போது எதிர்ல வர்றவங்க ஹாய், ஹலோ, சொன்னாலும் பதிலே சொல்லாம போய்ட்டு அப்புறம் 'பிஸியா இருந்தேன், ஸாரி'னு பீலா விடுவீங்கதானே?

9. செல்ஃபோனை வைப்ரேட்டர் அல்லது சைலண்ட் மோட்ல போட்டுட்டு, சீரியஸா முகத்தை வைச்சுக்கிட்டு யாரோடவோ பேசற மாதிரியே மெயின்டெயின்



ஜாலிக்கூத்து

செஞ்சுக்கிட்டிருப்பீங்களே...?

10. இதையெல்லாம் மீறி உண்மையாகவே ஏதாவது நல்ல விஷயம் செஞ்சுட்டா, அவ்வளவுதான்... அதை எல்லார்கிட்டயும் பெருமையா



இந்த மேட்டர் முதல் பாரா படிச்சவுடனே ‘சே... நானா... ஓ.பி.யா? சான்ஸே இல்லை’ன்னு அடுத்த பக்கத்துக்குப் போயிருந்தா நீங்கதான் உங்க ஆஃபீஸ்ல சின்ஸியர் சிகாமணி! மத்தவங்க... நாங்க சொல்லியா தெரிஞ்சுக்கப் போறீங்க... உங்க ஐடியா எல்லாம் இப்போ பல பேருக்குத் தெரிஞ்சிருக்கும். பார்த்து சூதானமா நடந்துக்குங்க.

பேசிக்கிட்டே அட்லீஸ்ட் அடுத்த ரெண்டு மாசமாவது ஓட்டுவீங்க... நம்ம பெருமையை நாமே பேசலைன்னா எப்படி? இதுதானே உங்க மாரல்...?

- ஜான்ஸி ராணி



மிரட்டிய சிவாஜி... பயமுறுத்திய அமிதாப்..!


மன்சூர் கான் இயக்கத்தில் ராய் நடித்த மற்றொரு படம் 'காக்கி'. அமிதாப் பச்சன், அக்ஷய் குமார், அஜய் தேவ்கன் என்று பல பெரிய நட்சத்திரங்கள் நடித்த படம். அமிதாப்புக்கு வயசான போலீஸ் துணை கமிஷனர் கேரக்டர். காட்டின் வழியாக ஒரு தீவிரவாதியை மும்பைக்கு அழைத்துச் செல்லும்போது அவர் சந்திக்கும் சவால்கள் தான் கதை. மகாராஷ்டிராவில் நாசிக் பகுதியின் மிக வறட்சியான ஏரியாவில் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது.

ஒரு ரோடு. வலப்புறத்தில் அதை ஒட்டி னாற்போல அடர்ந்த சப்பாத்திக் கள்ளி முட்புதர்கள். அதைத் தாண்டினால் நாற்பது அடி ஆழச் சரிவு. அங்கே ஒருநாள் மாலை படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. வேகமாக ஒரு ஜீப் வந்து, திடீரென்று சடன் பிரேக் போட்டு நிறுத்த வேண்டும். இதுதான் காட்சி. அதன் ஒத்திகை நடந்தது. ஒரு ஸ்டன்ட் நடிகர் தூரத்தில் ஜீப்பில் தயாராக இருந்தார். நானும், ஸ்டன்ட் டைரக்டர் அமீன் அலியும் நடுரோட்டில் நின்று கொண்டிருக்க, ஐஸ்வர்யா ராய் முட்புதருக்குச் சற்று தள்ளி ஒரு நாற்காலி யில் அமர்ந்திருந்தார். மற்றவர்கள் ஆங் காங்கே நின்று தங்கள் வேலைக்கு ஆயத்த மாகிக் கொண்டிருந்தார்கள். சிக்னல் கொடுத்தவுடன், ஸ்டன்ட் நடிகர் ஜீப்பைக் கிளப்பிக்கொண்டு ஃபுல் ஸ்பீடில் வந்து கொண்டிருந்தார். நிறுத்த வேண்டிய இடத்துக்குச் சற்று முன்பாக ரோட்டில் லேசாக மண் இருந்ததால், ஜீப் நிலை தடுமாறி, முட்புதரை நோக்கிப் பாய்ந்தது.

சில நிமிடங்கள் ஒன்றுமே புரிய வில்லை. நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஐஸ்வர்யா ராயைக் காணோம்! எல்லோரும் புதரை நோக்கி ஓடினோம். சப்பாத்திக் கள்ளி முட்புதருக்குள் விழுந்து கிடந்தார் ஐஸ். அவரைத் தூக்கி, வெளியில் கொண்டுவந்தபோது, நடக்க முடிய வில்லை. உடலில் பல இடங்களில் முள் கீறல்கள். உடனடியாக அவரை நாசிக்குக்கு அழைத்துப் போய் ஆரம்பக் கட்ட சிகிச்சை அளித்து அங்கிருந்து மும்பைக் குக் கொண்டு போனோம். ஐஸ்வர்யா ராயின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டி ருந்தது. சிகிச்சையளித்த டாக்டர் மூன்று மாதம் ரெஸ்ட் எடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். அடுத்த மூன்று மாதங் களுக்குப் படப்பிடிப்பு ரத்து செய்யப் பட்டது. அதனால், கையிலிருந்த மற்றவர் கள் கால்ஷீட்களையும் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போனது.

ஐஸ்வர்யா ராய் பூரண குணமடைந்து, படப்பிடிப்புக்கு ரெடியானபோது, வேறு விதமான பிரச்னை ஏற்பட்டது. வறட்சி யாக இருந்த நாசிக் பகுதியின் பூமி, மழைக் காலத்துக்குப் பின் பச்சைப் பசேலென்று ஆகிவிட்டது. ஏற்கெனவே வறண்ட பூமியில் எடுத்த காட்சிகளுடன் இது

கே.வி.ஆனந்த்






பொருந்தாது. ராஜஸ்தானில் ஏதாவது ஒரு வறண்ட பகுதியில் படப்பிடிப்பை வைத்துக் கொள்ளலாம் என்றால் அதற்கு அமிதாப் ஒப்புக்கொள்ளவில்லை. காரணம், ஏற்கெனவே, அவர் அந்தத் தேதிகளில் கால்ஷீட் கொடுத்த படத்தின் ஷூட்டிங் மும்பையில் நடந்துகொண்டிருந்தது. எங்களுக்காக அட்ஜஸ்ட் செய்துகொண்டு, இரவும் பகலுமாக இரண்டு ஷூட்டிங்குகளிலும் கலந்துகொள்ள சம்மதித்திருந்ததால், ராஜஸ்தானுக்கு வர முடியாத சூழ்நிலை.

டைரக்டரும் நானும் இந்தப் பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்தோம். அப்போது ஹாலிவுட் படங்களில் பயன்படுத்திய டி.ஐ. என்கிற டிஜிட்டல் இன்டெர்மீடியட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்தேன்.

அது என்ன டி.ஐ? ஒரு காட்சியை ஃபிலிமில் படம் பிடித்து, அதை ஸ்கேன் செய்து, டிஜிட்டல் மீடியத்துக்கு மாற்றி, அதன்பிறகு, கலர் திருத்தங்கள், கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் என்று என்னென்ன விதமான மாற்றங்கள் அவசியமோ, அவற்றைச் செய்து, மீண்டும் ஃபிலிமுக்கு மாற்றுகிற தொழில் நுட்பம் தான் டி.ஐ.

ஆனால், அந்தத் தொழில்நுட்பம் அப்போது இந்தியாவுக்கு வரவேயில்லை. மும்பை பிரசாத் ஸ்டுடியோவில் விசாரித்த போது, இன்னும் ஒரு வருடத்தில் அதை இங்கே கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறோம் என்றார்கள். எங்கள் பிரச்னையை

யும், அவசரத்தையும் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி அவசரப்படுத்தினோம். அடுத்த சில மாதங்களில் சாய் பிரசாத் (எல்.வி.பிரசாத்தின் பேரன்) முயற்சியில் மும்பை ஃபிலிம் சிடிக்குள்ளேயே ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து, அங்கே படப்பிடிப்பை நடத்தி டி.ஐ. டெக்னாலஜி மூலமாக, தரையிலிருந்த பச்சைப் பசேலென்ற புல்தரையை





"ராஜஸ்தானில் படப்பிடிப்பு வைத்துக் கொள்ள அமிதாப் ஒத்துக்கொள்ளவில்லை!"

மட்டும் வறண்ட புல் தரையாக மாற்றிவிட்டோம். அதற்காக ஐம்பது லட்சம் ரூபாய் அதிகப்படியாகச் செலவானது. படம் தடைப்படாமல் முடிந்து ரிலீஸானது பெரிய சாதனைதான்! இந்தியாவில் டி.ஐ. தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்ட முதல் படம் 'காக்கி'தான்.

'காக்கி'யில் அமிதாப்புடன் பணியாற்றியது மறக்க முடியாத அனுபவம் என்றால், 'தேவர் மகனி'ல் சிவாஜியின் அருகில் இருந்து பணியாற்றியதும் அப்படிப்பட்டதுதான்.

பொள்ளாச்சியில் சிங்காநல்லூரர் வீடு என்கிற பெரிய வீட்டில் 'தேவர் மகன்' ஷூட்டிங். வழக்கமாக பி.சி.ஸார் வொர்க் பண்ணும் படங்களில் அவருடைய அஸிஸ்டென்ட்களான நாங்கள் வெகு சீக்கிரமாக ஸ்பாட்டுக்குப் போய்விடுவோம். முதல் நாளன்று காலை ஒன்பது மணிக்கு ஷூட்டிங். ஏழு மணிக்கு நானும் இன்னும் இரண்டு அஸிஸ்டென்ட்களும் அந்த வீட்டை அடைந்தோம். வீட்டுக்காரர் வந்து வீட்டைக்கூடத் திறந்துவிடவில்லை. கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த எங்களுக்குப் பெரும் அதிர்ச்சி! வீட்டின் திண்ணையில் சிவாஜி கம்பீரமாக, கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்தார். அவரை எப்படி எதிர்கொள்வது என்று மிரண்டு போனோம். சிறிது நேரத்தில் வீடு திறக்கப்பட்டது. கொஞ்ச நேரம் கழித்து, பி.சி.ஸார் வந்தார். அவரும் சிவாஜியைப் பார்த்தவுடன் கொஞ்சம் டென்ஷனாகிவிட்டார். அப்புறம் கமல் வந்தபோது அவருக்கும் டென்ஷன்! மறுநாளிலிருந்து சிவாஜி வருவதற்கு முன் வந்துவிட வேண்டும் என்று ஆளாளுக்கு ஒரே பரபரப்பு.

'போற்றிப் பாடடி பெண்ணே' பாடல் காட்சிக்கு முன்பாக சிவாஜி குழந்தைகளுடன் ஜாலியாக விளையாடியபடி இருப்பார். அப்போது சிவாஜி பேசியது சற்றே ஓவர் ஆக்டிங்காக இருப்பதாக நினைத்தார் பரதன். ஆனால், சிவாஜியிடம் நேரடியாகச் சொல்ல மிகவும் தயங்கினார். மெதுவாக சிவாஜியிடம் சென்று, மெல்லிய குரலில், 'குழந்தைகளோட நீங்க நடிக்கிறதால கொஞ்சம் சாஃப்ட்டாகப் பேசினீங்கன்னா ரொம்ப நல்லா இருக்கும்' என்று வெகு நாசூக்காகச் சொல்லவும், சிவாஜி டைரக்டரை அர்த்தம் பொதியப் பார்த்தார்.

(ஆக்ஷன் தொடரும்)

வடிவம் : **எஸ்.சந்திரமௌலி**



✱ அழகான ஆசை

அரசியல் அரிச்சுவடி என்றால் என்ன?



✱ செருப்பு சர்ச்சை!

● அருண் ஜெய்சிங், கோவை

? திருவண்ணாமலையில் செருப்பு அணிந்து கிரிவலம் சென்றாராமே சிநேகா... இது சரியா?

! கிரிவலம் என்பது வேறு. கோயில் பிரகாரத்தில் வலம் வருவது என்பது வேறு. கிரிவலத்தின்போதுகூட செருப்பு அணியக் கூடாது என்று பல பக்தர்கள் கருதுகிறார்கள். ஆனால், தடையுத்தரவு இருப்பதாகத் தெரியவில்லை. தடையை மீறியிருந்தால் தவறுதான்.

● இ.பு.ஹேமமாலினி, சென்னை - 101

? காதலுக்குக் கண்கள்தான் வாசல் என்றால், விழிகள் இழந்தோர் காதலிப்பதே இல்லையோ?

! ஏன் காதலிக்காமல்! அனைத்தையும் காண அவர்கள் பயன்படுத்தும் அக விழியே காதலின் ஆதாரம்.

● பி.ஜெயபிரகாஷ், சர்கார்பதி

? அரசியல் கட்சிகளுள் பிளவைச் சந்திக்காதது பா.ஜ.க. மட்டுமே என்று ராஜ்நாத் சிங் சொல்வது சரியா?

! பஜ்ரங் தள் என்றும் ஆர்.எஸ்.எஸ்.

நீங்கள் கேட்டவை

தராசு

என்றும் வி.எச்.பி. என்றும் பா.ஜ.க. என்றும் ஏற்கெனவே பிளவுபட்டுள்ளன ஹிந்துத்வா அமைப்புகள். போதாக் குறைக்கு பா.ஜ.க.வில் சமீபகாலமாக ஏகப்பட்ட விரிசல்கள்.

● எஸ்.சக்தி, ராஜபாளையம்

? போலீஸ் தாக்கினால் திருப்பித் தாக்குவோம் என்று தைரியமாக தைலா புரத்து விழாவில் காடுவெட்டி குரு பேசி யிருக்கிறாரே... இது குறித்து?

! இதில் தைரியம் என்ன இருக்கிறது? ஜனநாயக முறையில், நாகரிக வரையறை களை மீறாமல், நியாயமாகப் போட்டியி டவும் போராடவும்தான் தைரியம் தேவை.

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? "இலக்கியவாதிகளுக்கு இருக்கும் சுதந்திரம் திரைக் கதையாசிரியருக்கு இல்லை" என்கிறாரே கமல்?

! திரைக்கதையாசிரியர்களைப் போல, பல தரப்பு ரசிகர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயம் இலக்கியவாதி களுக்கு இல்லை.

● கே.ஏ.நமசிவாயம், பெங்களூரு ❒

? நடிப்புக்கும் நடப்புக்கும் உள்ள வேறுபாடு பற்றி அறிந்தால் இந்த ரசிகர் மன்றங்கள் தோன்றுமா?

! அந்த வித்தியாசம் அறியாததால் எழுபவை அல்ல ரசிகர் மன்றங்கள்; அந்த வித்தியாசத்தையும் மீறித்தான் அவை உருவாகின்றன. திரை பிம்பத்தின் மீது கொள்ளும் மோகம், நிஜ வாழ்வில் நடிகர் எப்படி இருந்தாலும், என்ன தவறு செய் தாலும், அதை ஒதுக்கிவிட்டு அவரை ஏற்கிற மயக்கத்தை ஏற்படுத்துகிறது.

● மலை அரசன், வேலூர்

? யாரிடம் அன்பு வைத்திருக் கிறோமோ, அவரிடம்தான் அதிகம் கோபம் வரும் என்பது நிஜமா?

! நிஜம்தான். உரிமையின் வெளிப் பாடாகக் கோபப்படுகிறபோது, அவர்கள் நமது கோபத்தின் காரணத்தைப் புரிந்து கொள்வார்கள்; காரணமில்லாவிட்டாலும் பொறுத்துக் கொள்வார்கள். இதற்கும் பரஸ்பர அன்புதான் துணை நிற்கிறது.

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? கருணாநிதியின் பேரன்கள் அனை வரும் சினிமா தயாரிப்பாளர்கள் ஆகி விட்டார்களே?

! அதன் காரணமாகத் தமிழ் சினிமாவின் தரம் உயர்ந்து விட்டதா என்ன?!





• சினிமா தலைமுறை

● பி.கவிதா, சீர்காழி

? உண்மை தோற்கும் இடம் எது?

❒ ரூ.150/- பரிசு பெறுபவர் :

கே.ஏ.நமசிவாயம், பெங்களூரு

! உண்மை தோற்பதில்லை. அது தோற்க வேண்டும் என்று விரும்புவோரின் உள் ளம்தான் அப்படியொரு பூச்சை, உண் மைக்கு அளிக்கிறது. தூசியினால் வைரத் தின் ஒளியும் மதிப்பும் குறைந்துவிடுமா?

● வாசுதேவன், நவி மும்பை

? தமிழகத்தில் அரிசி உற்பத்தி வெகு வாகக் குறைந்துள்ளது பற்றி?

! கவலைக்குரிய விஷயம்தான். காவிரி

நதிநீர்ப் பிரச்னை இழுபறியாக இருப்பினும், விஞ்ஞான ரீதியாகப் பல்வேறு அணுகுமுறைகளைக் கையாண்டு விளைச்சலைப் பெருக்க நடவடிக்கைகள் எடுப்பது ரொம்ப அவசியம். தமிழக அரசு இதற்கு முன்னுரிமை தரவேண்டும்.

● பா.அசோக், விருதுநகர் ★

? மேடைக்கு மேடை அரசியல்வாதிகள், 'அரசியல் அரிச்சுவடி தெரியுமா?' என்கிறார்களே... அது என்ன அரசியல் அரிச்சுவடி?

! தெரியாது?!... ● அடித்துப் பேசினால் பொய்யும்



★ பெருகும் விரிசல்கள்



★ வெற்று வீரம்?


★ ரூ.75/- பரிசு பெறுபவர் :

பா.அசோக், விருதுநகர்

மெய்யே! ● ஆட்சியைப் பிடிப்பதே அரசியல் நோக்கம். ● இலவசம் என்றால் வோட்டுகள் குவியும்! ●... இப்படியே கடைசி வரை எழுதிக்கோங்க.

● என்.சண்முகம், திருவண்ணாமலை

? காந்திஜியுடன் விருந்து சாப்பிட அமெரிக்க அதிபர் ஒபாமா விருப்பம் தெரிவித்திருப்பது இந்தியாவுக்குப் பெருமைதானே?



★ இந்தியாவின் பெருமை

! இந்தியாவுக்குப் பெருமை தான். காந்திஜியை ரூபாய் நோட்டிலும் தபால் தலையிலும் சமாதியிலும் மட்டும் காண்கிற நமது தலைவர்களுக்குப் பெருமை இல்லை.

● அ.ச.நாராயணன், திருநெல்வேலி

? டெல்லி பள்ளியொன்றில் பரிதாபத்துக்குரிய பலி ஏற்பட்ட பின்னராவது இங்குள்ள மெட்ரிக் பள்ளிகளில் முறையான வசதிகள் செய்யப்படுமா? அரசு இதைக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா?

! அதற்கெல்லாம் அரசுக்கு ஏது நேரம்? கல்வி பெறுவதை அடிப்படை உரிமையாக்கி, உயர்கல்வியை வியாபாரமாக்கி, பத்தாம் வகுப்புப் பரீட்சையை ஒழித்துக் கட்டி, சமச்சீர் கல்வியைத் திணித்துக் குழப்புவதற்கே நேரம் போதவில்லையே!

● எஸ்.ஏ.கேசவன், கோவில்பட்டி

? 'கேள்வி-பதில்' பத்திரிகைகளின் பிரதான அங்கமாகப் பிரகாசிப்பது எதனால்?

! வாசகர்களின் நேரடி பங்கேற்பு மூலமாகப் புதுப்புது ஜன்னல்களைத் திறந்துவிட முடிவதால்.



கோளத்தின் ஆரம்ப அழகோடு, பாலக்காடு நெடுஞ்சாலையில் குளுகுளு சூழலோடு உள்ள குனிய முத்தூர் (அட! கோயமுத்தூர்லதான் இது இருக்கு) சுகுணாபுரத்தில் குழலூதும் கிருஷ்ணனைப் போல பார்க்க சம்பமா, கண்ணுக்கு இதமா, அதைவிட ரொம்ப சுத்தமா இருந்தது







ஸ்ரீ கிருஷ்ணா ஆர்ட்ஸ் அண்ட் சயன்ஸ் காலேஜ். (இது ISO முத்திரை வாங்கிய காலேஜுங்க.) இந்த காலேஜின் ஆக்க சக்தி யூத்களைச் உலகுக்கும் அறிமுகப் படுத்த... என்ட்ரி கொடுத்தோம்... ஜாலி எலெக்ஷன் மூடோடு...





எக்ஸ்க்யூஸ் மீ மிஸ்டர் ஏழுமலை சாமி!



இறந்துபோன அனாதைகளை அடக்கம் செய்யும் சமூகப் பணியை நான் செய்யற தால என்னை 'மிஸ் பிரபலமாக' செலக்ட் செஞ்சிருக்காங்க. இது என்னோட எண்ணத் துக்குக் கிடைச்ச அங்கீகாரம்.

- Ms.பிரபலம் - மகாலட்சுமி

Ms/Mr. பிரபலம்



கள்ளம் கபடு பார்க்கத் தெரியாது. வெள்ளந்தித்தனமா நட்பை முதுகில மூட்டையா சுமப்பேன். அதனாலதான் என்னைத் தேர்ந்தெடுத்து இருப்பாங் கன்னு நினைக்கிறேன்.

- Mr.பிரபலம் - கனகராஜ்

எங்க காலேஜ்
கா.கௌதம் (I BCA -A) எழுதிய...

"பிணவறையில் ஒன்றோடொன்று கலந்து கிடந்தன - சாதிச் சண்டையில் மடிந்த உடல்கள்" என்ற மின்னல் வரி மாதிரி யோசிக்கிறேன்... எந்த வலையை வீசினா அகப்படும் எனக்கொரு கவிதை?

- அனுஸ்ரீ. (I BSc)







'சிரி' கண்டன்

* என்ன ஸார், இண்டர்வியூ பண்ணாம என் முகத்தையே பார்த்துக்கிட்டிருக்கீங்க
இது 'நேர்முக'த்தேர்வும்மா... கொஞ்சம் பேசாம இரு

* உம்பேரு என்னப்பா?
முனுசாமி
எத்தனை குழந்தைகள்?
மூணு சாமி!



* இட்லி சாஃப்ட்டா இருக்குமா?
சாப்புட்டா இட்லி இருக்காது
வயித்துக்குள்ள போயிடும்

- மணிகண்டன்

(மணிகண்ட பக்தா! இனிமேல் நீ கடி கண்டன் என எல்லோராலும் அழைக் கப்படுவாயாக!)

வெஜிடேரியன் கொலு!



கலர் கலர் பொம்மையில வெச்சது கலாசார கொலு. கலாசாரம் மாறாம காய்கறிகளைக் கலர் கலரா வெக்கிறது எங்க கல்லூரி கொலு.

(அந்தக் கொலு முடிஞ்சதும் ஏதாவது சாப்பிடுவோம். இந்தக் கொலு முடிஞ்சதும் அப்படியே கொலுவையே சாப்பிடுவோம்!)

இங்க... படிச்சா வேலை!




"எங்க மாணவர்களின் படைப்பாக்கத் திறனை வெளிக்கொண்டு வர 'தூரிகை' என்ற இதழை நாங்க வெளியிடுறோம். இயற்கைக்கு எதிரான பாலிதீன் பைகளை ஒழிக்கும் விழிப்புணர்வை மக்களிடம் பரப்ப 'ராக்' போன்ற நிறுவனங்களுடன் இணைந்து எங்கள் கல்லூரி செயல்படுது. பிற கல்லூரியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கும் கல்வி ஊக்கத் தொகை அளித்து அறிவு புகட்டி, எங்கள் எல்லைக்கு அப்பாலும் சமத்துவத்தை அளிக்க முயல்கிறோம். படிச்சா வேலை கிடைக்கணும்... அதற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்றோம்!"

- செயலர் திருமதி பத்மாவதி,
(ஸ்ரீ கிருஷ்ணா ஆர்ட்ஸ் அண்ட் சயன்ஸ் காலேஜ்)

"பதினேழு மாணவர்களோடு பத்து ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியில் இன்று 3000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். மூவாயிரம் மாணவர்கள் பங்கு பெறும் குளிர்சாதன வசதியுடன் கூடிய பெரிய கலையரங்கம், திறந்தவெளி திரையரங்கு இவையெல்லாம் மாணவர்களின் கலைத் திறமைக்கு உரமேற்றும் கல்லூரியின் உற்சாகச் செயல்பாடுகள். விளையாட்டுத் துறையில் வீரர்களை உருவாக்கும் திட்டத்தில்... பல மாணவர்களை உலக அளவில் வாலிபால் போட்டிக்கு உருவாக்கி இருக்கிறோம். இதற்காகவே இந்திய அரசின் அர்ஜுனா மற்றும் துரோணாச்சாரியா விருது பெற்ற பயிற்சியாளர் ஸ்ரீதரனை நியமித்திருக்கிறோம். ISO 2008 தரச்சான்றிதழ் பெற்ற எங்கள் கல்லூரி, மும்பை IIBF, BSNL போன்ற நிறுவனங்களுடன் Tie-up செய்து மாணவர்கள் பயனுற வழி செய்திருக்கிறது. ஐம்பதுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் மாணவர்களின் வேலைவாய்ப்புக்கான சாத்தியத்தை உருவாக்கியிருக்கிறோம்.

- கல்லூரி முதல்வர் டாக்டர் கே.சுந்தரராமன்
(ஸ்ரீ கிருஷ்ணா ஆர்ட்ஸ் அண்ட் சயன்ஸ் காலேஜ்)



இது போதாதா?

தெரியாமத்தான் கேட்கறேன்

சுருளிப்பட்டி தைலா

கல்லூரிகளில் சீட்களை அதிகமாக்கினால் இட ஒதுக்கீடு தேவையில்லை.

- ராகுல்காந்தி

அச்சச்சோ! அப்புறம் எப்படி அரசியல் நடத்துவீங்க?

கிட்டத்தட்ட நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்தில் ரூ. 2267 கோடி செலவில், 1.45 கோடி கலர் டி.விக்களை தமிழக அரசு இலவசமாக வினியோகித்துள்ளது. மேலும் ஐந்நூறு கோடி ரூபாய் மதிப்புள்ளவை வினியோகமாகும்.

- தயாநிதி மாறன்

அடுத்த எலெக்ஷனுக்கு ஃபிரிட்ஜா... வாஷிங் மிஷினா சொல்லிடு... ஊட்ல பவர் பிளக் ரெடி பண்ணிக்கணுமில்லே!

நீதிமன்றத்தோடு கண்ணாமூச்சி விளையாடலாகாது. நீங்கள் நெருப்போடு விளையாடுகிறீர்கள்!

- மாயாவதியிடம் உச்சநீதிமன்றம்

அவங்களுக்கும் பொழுதுபோகத் தேவலையா?

ஒரே நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மின்வாரிய அதிகாரிகளின் செல்ஃபோன் எண்கள் மாற்றப்பட்டுள்ளன. பொதுமக்கள் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு புகார் தர முடியாமல் திணறும் நிலை.

கேபிள் ஃபால்ட் ஆகறப்போ இதே வேகத்துல மாத்துவீங்களா?

தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள சரிவு, ஆறு மாதங்களில் சீராகும்.

- மத்திய இணையமைச்சர் சச்சின் பைலட்

பேர்லயே பைலட் இருக்கறதால ஆறு மாசத்துக்கு அந்தாண்ட பறந்து போய்ப் பார்த்துச் சொல்றாரா...?





* வெங்கி பாபு

தமிழ்த்திரையுலகம் தொழில்நுட்பத்தில் எவ்வளவு தூரம் முன்னேறிச் செல்கிறது என்பதற்குச் சிறந்த உதாரணம் - 2007ம் ஆண்டுக்கான சிறந்த அனிமேஷன் படமாக 'இனிமே நாங்கதான்' என்கிற தமிழ்த் திரைப்படம் தேசிய விருதுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. மாயபிம்பம் மீடியா நிறுவனம் சார்பாக மூன்று கோடி செலவில் இப்படத்தைத் தயாரித்தவர் ஸ்ரீதேவி; இயக்குநர் வெங்கி பாபு.

''இன்றைக்குத் தேசிய விருது கிடைத்தாலும் ஆரம்பத்தில் நிறைய தடைகளைச் சந்தித்திருப்பீர்களே'' என்றால் படபட வெனப் பேசுகிறார் வெங்கி பாபு.

''வட இந்தியாவுல உருவாக்கப் பட்ட அனிமேஷன், 2டி படங்கள் எல்லாமே புராணக் கதைகள் கொண்ட படங்கள் தான். ஆனா 'இனிமே நாங்கதான்' படம் வெகுஜன கதாபாத்திரங்களைக் கொண்ட ஒரு சமூகப் படம். என்னோட குறிக்கோளே அனிமேஷன் படத்தைக் கிராமம் வரைக்கும் கொண்டு போகணும் என்பது தான். அவங்களுக்கு டாம் அண்ட் ஜெர்ரியோ, டினோசரையோ கதாபாத்திரங்களா வெச்சா ரொம்ப போரடிக்கும். அதனாலதான் நாம் தினமும் பார்க்குற மனிதர்களைக் கதாபாத்திரங்களா உருவாக்கிப் படம் பண்ணினேன். ரிச்சி தெருவுல வாங்கின கம்ப்யூட்டர்களின் உதவியோட, முழுக்க முழுக்க கோடம்பாக்கத்தைச் சேர்ந்த அனிமேஷன் பொறியாளர்களின் உழைப்புல உருவான படம் இது. இந்திய மொழிகள்ல இளையராஜா முதல்முதலா ஒரு அனிமேஷன் படத்துக்கு இசையமைச்சார்னா அது இந்தப் படம்தான். நல்லா படம் பண்ணின எங்களுக்கு, அதைச் சரியா மார்க்கெட் பண்ணத் தெரியலை. நிறைய தடைக்கற்களைத் தாண்ட வேண்டியிருந்தது. அப்பச்சன் 'மைடியர் குட்டிச் சாத்தான்' படம் பண்ணும்போதும் இதே போல பல பிரச்னைகளைச் சந்திச்சிருக்கார். ஆனா படம் வெளிவந்து ஒரு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்திச்சு. அப்படியொரு திருப்புமுனைப் படமா 'இனிமே நாங்கதான்' அமைஞ்சதுல எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்'' என்கிறார்.

2010ல்





''வெளிநாட்டுப் படங்களோடு நம் அனிமேஷன் படங்களால் போட்டி போடமுடியுமா?'' என்றால், ''அவங்க பல ஆண்டுகளாக இந்தத் துறையில இருக்காங்க. அந்தத் தரத்தை நம்மாலயும் எட்ட முடியும். ஆனா அதுக்குச் சில ஆண்டுகள் பிடிக்கும். அதேசமயம் அனிமேஷன் துறைக்கு இங்கே நல்ல எதிர்காலம் இருக்கு. அடுத்த பத்து வருஷங்கள்ல தமிழ்த் திரையுலகுக்கு அனிமேஷன் படங்களால நிறைய பெருமை கிடைக்கப் போகுது'' என்று நம்பிக்கையோடு பேசுகிறார்.

வெங்கியின் அடுத்த ப்ராஜக்ட், 'புரட்சித் தலைவன்'. இந்த அனிமேஷன் படத்தின் ஹீரோ, எம்.ஜி.ஆர்.

''ஒரு ஹீரோன்னா எப்படி இருக்கணும்ங்கிறதுக்குச் சரியான உதாரணம் எம்.ஜி.ஆர். இன்றைய ரசிகர்களுக்கு எம்.ஜி.ஆர் பட அனுபவம் கிடைக்கணும்னுதான் அவரையே கதாநாயகனா வெச்சு அடுத்த படம் பண்றேன். இந்தப் படத்துல அவர் ஜோடி சரோஜா தேவி. அவங்ககிட்ட இதைச் சொன்னதும் ரொம்ப சந்தோஷப்பட்டாங்க. 'ஆயிரத்தில் ஒருவன்' பாணியில் எங்க எம்.ஜி.ஆர் அனிமேஷன் படம் இருக்கும். ஒரு எம்.ஜி.ஆர் படத்தோட அத்தனை அம்சங்களும் கொண்ட படமா வெளிவரும். 2010 இறுதியில நீங்க புரட்சித் தலைவனைச் சந்திக்கலாம்.''

அவார்ட் அனிமேஷன்

- செந்தில்

புரட்சித் தலைவன்!





ஜிமிக்கி போட்ட

"**எ**னக்குச் சின்ன வயசுலேயே காது குத்தியாச்சாக்கும்..." என காது கடுக்கனையும் தோட்டையும் தொட்டு வீர வசனம் பேசும் ஆண்களும் பெண்களும் ஏராளம்.

தங்கம், வைரம் என தோடுகள் பிரகாசித்தாலும் இளம் பெண்களைக் கவருவது இமிட்டேஷன்தான். காஸ்ட்யூம் ஜுவல்லரி, ஆன்டிக், குந்தன், முத்து, விக்டோரியன், பிட்ஸ், மெட்டல்... போன்ற காதுத் தோடுகளை விரும்பி அணிகிறார்கள். ஸ்டைல், ஃபேஷன் மற்றும் பட்ஜெட் என எல்லாவற்றிலும் திருப்தி.

ஜீன்ஸ், ஸ்கர்ட்டுடன் ஒற்றைக் கல் பதித்த சிம்பிள் ஸ்டட் நன்றாக இருக்கும். சல்வார் கமீஸ் மற்றும் குர்தி, லாங் ஸ்கர்ட்டுடன் விக்டோரியன், ஷாண்ட்லியர், இயர் ரிங் (மிக நீளமாக, கற்கள் பதித்த தொங்கட்டான்கள்)தான் லேட்டஸ்ட் சாய்ஸ்!

ஓவல் ஷேப் முகமாக இருந்தால் (நெற்றி, முகவாய்க் கட்டையைவிட

உடையழகு... நடைபழகு...



அகலமாயிருக்கும்) எல்லாவித கம்மல்களுமே போடலாம்.

வெர்ஸடைல் முகம்! இருந்தாலும் முத்து ஸ்டட் போட்டால் பளிச்... டியர் ட்ராப் (Tear drop) டிஸைனும் எடுபடும்.

ரவுண்ட் ஷேப் (முகம் எத்தனை அகலமோ அத்தனை நீளமும் இருக்கும்) முகத்துக்குத் தொங்கட்டான்கள் சூப்பர். விதவிதமாக டாங்ளிங் (dangling) போட்டு ஜிங் ஜிங்னு ஸ்கூட்டியில் பறங்கம்மா... சின்ன ஸ்டட் போடாதீங்க...

ஹார்ட் ஷேப் (தாடைப் பக்கம் குறுகி, நெற்றி பரந்திருக்கும்) உள்ளவர்கள், பிரமிட்

மயிலே..!

ஸ்டைல் இயர் ரிங் போடலாம்.

பெரிய பெரிய வளையங்கள், ஹூப் டிஸைன் (hoop) வளையங்கள் எந்தவித ட்ரஸ்ஸுடனும் பொருந்திப் போகும். கலர் கலர் வளையங்கள் ஜீன்ஸ் - டீஷர்ட்டுடன் போட்டால் தூள்தான்!

குடை ஜிமிக்கி, முத்து ஜிமிக்கி இதெல்லாம் அதிகமாக அணிவது திருமணப் பெண்கள்தான். 'ஜிமிக்கி போட்ட மயிலே மயிலே... என்று ஆண்களும் பாடிப் பார்க்கிறார்கள். ஆனால், பெண்களின் சாய்ஸ் வேறாகிவிட்டது. (சுதா ரகுநாதனும், நித்யஸ்ரீயும் ஜிமிக்கி போட்டுத்தான் கச்சேரி செய்கிறார்கள். அவர்கள் கச்சேரி பரிமளிப்பதற்குக் காரணம் ஜிமிக்கியாக இருக்குமோ... என கான்டீனில் விவாதிப்பவர்களும் உண்டு) சம்பிரதாய, பழைமையான நகைகளை மறக்காதீங்கம்மா...

இனி சில சுவாரஸ்யத் தகவல்கள்...

★ எகிப்து மியூஸியத்தில் இருக்கும் புராதன மம்மியில், ஒரே காதில் இரண்டு இயர் ரிங்ஸ், ஒரே காதில் பல ஸ்டட், வளையங்கள் போடுவது லேட்டஸ்ட் என்று நினைப்பவர்கள், பல நூறு வருடங்களுக்கு முன்பே 'மம்மி' போட்டாச்சு என்பதைக் கவனத்தில் கொள்க.

★ சுமார் 2500 வருடங்களுக்கு முன்னால் தோடில் ஒரு தனிப்பகுதியே இருக்குமாம்; சென்ட் போடுவதற்கு! காதிலிருந்து வாசம்... (பாவம் ஆண்கள், ஏமாந்து போய் நாச்சுரல் வாசம் என நம்பினார்கள்)


★ 1840-1850களில் மேல் நாடுகளில், பெண்கள் காதைத் தலைமுடியால் மறைப்பது உச்சகட்ட ஃபாஷன். அதனால் கம்மல்கள் போட முடியாததால் இரவில் போடுவார்களாம். இதனால் 'ஸ்லீப்பர்ஸ்' என்ற திருநாமம் ஸ்டட்களுக்கு.

★ முத்துத் தோடுகளுக்கு ஆயுசு கெட்டி. இதிலிருக்கும் ஆர்கனிக் மெட்டீரியலினால் முந்நூறு வருடங்களுக்குப் பிறகும்கூட கெடாமல் பிரகாசிக்குமாம். ஏகப்பட்ட தலைமுறைகளுக்குப் போகும்...

- லதாசேகர்

தீராத விளையாட்டு விட்டலன்

விட்டலன் கணக்கு



பஞ்சத்தைத் தொடர்ந்து போசலபாவா தமது நிலத்தை விற்கும்படியானது. மன்னனின் நிலத்தில் ஒரு பகுதியை குத்தகை எடுத்துத் தானியங்களை விளைவிக்கும் நிலை வந்தது. அதில் விளைச்சல் கணிசமாக இருந்தது என்றாலும் போசல பாவாவின் பக்தியே அவருக்கு வேறொரு விதத்தில் இடையூறாக இருந்தது.

எப்போதும் விட்டலனின் சிந்தனையில் உள்ள இவர் நம்மை ஒன்றும் விரட்ட மாட்டார் என்பது பறவைகளுக்குக் கூடத் தெரிந்திருக்க வேண்டும். தானியங்களைத் தடையின்றி தின்று தீர்த்தன. போதாக் குறைக்கு வழிப்போக்கர்கள் கேட்டால் (முக்கியமாக அவர்கள் பண்டரிபுரம் செல்பவர்களாக இருந்தால்) தானே கதிர்களை அறுத்து அவர்களுக்குக் கொடுக்க போசல பாவா தயங்கியதில்லை.

அவர் மனைவி மமதாபாய்க்கு இதனால் கவலை ஏற்பட்டது. மமதாபாய் கணவரிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தாள். பிறகு ''கொஞ்சம் கவனமாக இருங்கள். கதிர்களை அறுத்து வழிப்போக்கர்களுக்கு அளிக்க வேண்டாம். இது விட்டலனின் மீது ஆணை'' என்று கூறினாள். இதற்கு மட்டும்தான் கணவர் கட்டுப்படுவார் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.

ஆனால் அடுத்த நாளிலிருந்து வேறொரு விந்தை நடந்தது. வழிப்போக்கர்கள் கதிர்களைக் கேட்க, ''வெட்டித்தர முடியாத சூழலில் இருக்கிறேன். எனவே நீங்களாக உங்களுக்கு வேண்டிய கதிர்களை அறுத்துத் தின்று பசியாறிக் கொள்ளுங்கள்'' என்றார்.


ராஜதூதர்கள் அரசருக்குரிய பணத்தைப் பெற்றுச் செல்ல வந்தார்கள். ''நீங்கள் கொடுக்க வேண்டிய ஏழு வராகன்களை உடனே கொடுங்கள்'' என்றார்கள். போசலபாவாவிடம் கையிருப்பாக மூன்று வராகன்கள் தான் இருந்தன.

அந்த ஊரில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் பெண்மணியிடம் மீதி வராகன்களைப் பெறலாம் என்று போனார் போசலபாவா.

ஆனால் அவருக்கும் முன்பாக சில தீயவர்கள் அந்தப் பெண்மணியை அடைந்தார்கள். ''போசலபாவாவுக்குக் கடன் கொடுத்தால் அதை நீ மறந்து விட வேண்டியதுதான். அரசனுக்குக் கொடுப்பதற்காக அதை எடுத்துச் செல்லும் வழியில் எவனாவது வழிப்போக்கன் கேட்டால் அந்தத் தொகையைக் கொடுத்து விடுவான். வட்டிக்கு ஆசைப்பட்டு முதலையே இழந்து விடாதே'' என்றனர். அவளும் அவ்வாறே செய்தாள். வேறொரு ஊரில் வசித்த, தனக்குத் தெரிந்த ஒருவரிடம் கடன் வாங்கக் கிளம்பினார்.

இதற்குள் அந்த துஷ்டர்கள் தங்கள் அடுத்த கட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார்கள். அரசதூதர்களிடம் சென்று, ''போசலபாவா உங்களை ஏமாற்றி விட்டு வேறெங்கோ தலைமறைவாகி விட்டான்'' என்று கூறினர்.

அப்படியானால் எப்படியும் போசல பாவா சீக்கிரமே ரகசியமாக வந்து மனைவியை அழைத்துச் செல்வான் அல்லது குறைந்தது அவளைப் பார்க்க வருவான் என்று முடிவெடுத்த அரசதூதர்



கள் போசலபாவாவின் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டனர்.

அவர் மனைவி மமதாபாய்க்கு வீட்டுச் சிறை! தண்ணீர் எடுக்கக்கூட நதிக்குச் செல்ல முடியாத நிலை. மமதாபாய் கண்ணீர் சிந்தினாள்.

இதுகண்டு மனம்பொறாத விட்டலன் வெட்டியான் வேடத்தில் அரசு அலுவலகத்துக்குச் சென்று போசலபாவா சார்பில் ஏழு வராகன்களைக் கட்ட, அதற்கான ரசீதை வேறு சில அரச வீரர்கள் சுமந்து கொண்டு போசலபாவாவின் வீடு நோக்கி வந்தனர். தெரிந்தவரிடமிருந்து நான்கு வராகன்களைக் கடன் வாங்கிக்கொண்டு வீட்டு வாசலில் நுழைந்துகொண்டிருந்த

அருண் சரண்யா

போசலபாவாவிடம் ரசீதைக் கொடுத்தார்கள். விவரம் புரியாமல் தன்னிடமிருந்து ஏழு வராகன்களை எடுத்துக் கொடுத்த போசலபாவாவிடம், "நீங்கள்தான் ஏற்கெனவே உங்கள் ஆளின் மூலம் தொகையைக் கொடுத்தனுப்பி விட்டீர்களே" என்று கூற, போசலபாவா விழித்தார். அந்தத் திகைப்பு சில நொடிகள்தான் நீடித்தது. தன்னிடம் சோளமாவு பெற்றுக் கொண்டு அதை ரொட்டியாக்கி, தாங்களும் உண்டு தனக்கும் கொடுத்த முதிய தம்பதியரின் உருவம் அவர் மனத்தில் எழுந்தது.

''விட்டலா, விட்டலா'' என்று கதறியபடி தமது வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த பாண்டுரங்கனின் திருவுருவத்தை நமஸ்கரித்தார்.

அதே சமயம் கடன் கொடுக்க மறுத்த பணக்காரி மிகவும் குழப்பத்தில் இருந்தாள். 'எனது சேமிப்பில் நான்கு வராகன்கள் குறைகிறதே எப்படி?' என்று விதவிதமாகக் கணக்கு போட்டும் அந்த நான்கு வராகன்களுக்கு விடை தெரியவில்லை. விட்டலனின் கணக்கே வேறு அல்லவா?



போசலபாவாவின் பஜனைக் கீர்த்தனங்கள் நாளுக்குநாள் மிகவும் பிரபலமாகின. பண்டரிபுரத்துக்கு அவர் செல்லும்போதெல்லாம் கூட்டம் கூடியது.

அபங்க அமுதம்

தேவா துஜா மீ கும்பார
நாஸீ பாபாசே டோங்கர
ஐசா ஸந்தப்தே ஹோா ஜாதீ
கடே ஸாதூசீ ஸங்கதீ
பூர்ண க்ருபா பகவந்தாசீ
கோராகும்பார மாகே ஹேசி
- கோராகும்பர்

"விட்டலா நீயோ தெய்வம். நானோ குயவன். படர்ந்திருக்கும் என் பாவ மலையை நீதான் தகர்க்கவேண்டும். நல்லோரின் நட்பு எனக்குக் கிடைக்க உனது அருள் வேண்டும். இதைத்தான் நான் உன்னிடம் வேண்டுகிறேன்."

பத்துபேர் அடங்கிய குழு ஒன்று இந்தக் காரணத்துக்காகவே போசலபாவாவின் பஜனை நடக்கும் இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது அந்த வழியே சென்றுகொண்டிருந்த பாம்பு அந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவனைக் கடித்துவிட, அவன் இறந்தான்.

மற்றவர்கள் அதிர்ச்சி அடைந்தனர், வருத்தப்பட்டனர். கூடவே மற்றவர்கள் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு செயலையும் செய்தனர். அந்தப் பிணத்தை ஓர் ஆடையால் மூடிக்கொண்டு பஜனை நடக்கும் இடத்துக்குச் சென்றனர். சடலத்தைக் கீழே கிடத்திவிட்டு மற்ற ஒன்பது பேரும் போசலபாவாவின் பஜனையில் கலந்து கொண்டனர். சரணகோஷங்களைப் பாடிக் கொண்டே கூட்டத்தினரைப் பார்த்து ''நீங்களும் உடன் பாடுங்கள். கைத்தாளம் போடுங்கள்'' என்று போசலபாவா சைகை காட்ட, அனைவரும் அப்படியே செய்தனர். ஆனால் ஒருவன் மட்டும் அசையாமல் படுத்திருந்தான். 'இவன் மட்டும் ஏன் இங்கு படுத்து உறங்குகிறான்?' என்று எண்ணினார். அது இவனல்ல, 'இது' என்பதை அறியாத போசலபாவா. ''நல்லதொரு பொழுதை இழந்துவிடாதே. மற்றவர்களைப் போலவே எழுந்து கூத்தாடு. இறைவனின் நாமத்தைப் பரவசத்தோடு உச்சரி'' என்றார் அழுத்தம் திருத்தமாக. அடுத்த கணமே அந்தப் பிணத்துக்கு உயிர்ப்பு வந்தது.



வண்ணப்படம் : **வேதா**
படங்கள் : **ஸ்ரீஹரி**

சனிப் பெயர்ச்சி பலன்கள்

26.9.2009 லிருந்து 21.12.2011 வரை



கனிவு குணம் கொண்ட மேஷ ராசிக் காரர்களே, உங்களுக்குக் கடந்த இரண் டரை வருட காலமாக 5ம் இடத்தில் இருந்து வந்த சனி பகவான் தற் போது ஆறாம் இடம் பெயர்வதால், அநேக நற்பலனை அள்ளித்தரப் போகிறார். வீடு, தொழில், குழந் தைகள் பற்றி இருந்து வந்த மனக் கவலையைச் சரி செய்வார். மனக் குழப்பம் அடியோடு விலகி, குழந்துக்கு மன ...புது தெம்பும், ன்தரி யமும் உண்டா கும். நீண்ட காலம் முடிவு பெறாமல் இருந்து வந்த வழக்கு ... வியாபாரம் செழித்து



மேஷம்

பெறும். பூர்வீகச் சொத்துகளில் இருந்து வந்த பிரச்னைகள் சரியாகும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். தடை விலகி திருமணம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் இல்லாதவர்களுக்குப் பாக்கியம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த சிக்கல் விலகும். நண்பர், உறவினர் களால் நற்பலன் கிட்டும். உடல் ஆரோக் கியம் சீராகும். புதிய வீடு, மனை வாங்க நேரிடும். சிலருக்கு வாகன சௌக்கியம் ஏற்படும். உடன்பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கஷ்டங்கள் விலகி ஒற்றுமை ஏற்படும். மாணவ மாணவிகளுக்குக் கல்வி யில் இருந்து வந்த கணக்கம் மாறி முன் னேற்றம் ஏற்படும். குடும்பப் பெண்கள் பாராட்டுகளைப் பெறுவார்கள். சமூக சேவகர்களுக்கு விருதுகள் கிட்டும். அர சியல்வாதிகளுக்கு ஏற்றமான ஆண்டு!

பேச்சுக்கலையில் வல்லவரான ரிஷப ராசிக்காரர்களே, உங்கள் ராசியில் கடந்த இரண்டரை வருட காலம் 4ம் இடத்தில் சஞ்சரித்த சனி பகவான் தற்பொழுது 5ம் இடம் என்று சொல்லக்கூடிய பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் பெயர்ச்சி ஆகி வருவது நற்பலனை அள்ளித் தரும். குழந்

தஞ்சை பரத்வாஜ்



ரிஷபம்

நைகள் இடம் மாறிப் போவார்கள். மனத்தில் இருந்து வந்த பயம் விலகும். பூர்வீகச் சொத்துகள் பாகப் பிரிவினை ஆகும். புதிய தொழில் தொடங்க ஏற்ற தருணம். மூத்த சகோதரர் மூலம் அனுகூலம் உண்டாகும். பண வருவாய் பெருகும். கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். திருமணக் காரியம் பூர்த்தி ஆகும். குழந்தைப்பேறு கிட்டும். தொழில் ஸ்தானத்தில் இருந்துவந்த தொந்தரவுகள் விலகும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். குடும்பத் தலைவிகளுக்கு நன்மதிப்பு கிட்டும். பொறுப்புகள் அதிகம் வந்துசேரும். வாதியல்

வாதிகளின் நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். ஏற்றுமதி - இறக்குமதி தொழில் செய்ய நல்ல ஆதரவு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் செய்வோர் ஆதாயம் பெற நேரிடும். மாணவ- மாணவிகளுக்கு அதிக

மதிப்பெண்களும் பாராட்டும் பரிசும் கிட்டும். பத்திரிகைகளில் உயர் பதவி கிட்டும். மின்னணு தொழில் செய்வோருக்கு ஏற்ற மிகு ஆண்டாக இருக்கும்.

சனிக்கிழமைதோறும் நவக்கிரக கோயிலுக்குச் சென்று சனீஸ்வர பகவானுக்கு விரதம் இருந்து, எள் தீபம் போட்டு வர சங்கடங்கள் விலகும்.

• • •

நகைச்சுவை மிக்க மிதுன ராசிக்காரர்களே... உங்கள் ராசியில் 3லிருந்து 4 ஆம் இடம் வருவது அர்த்தாஷ்டம சனி ஆகும். உடனே அர்த்தாஷ்டம சனி என பயப்பட தேவை இல்லை. 4 ஆம் இடம் என்பது வீடு, வாகனம், கல்வி, தொழில், சுகம், ஆரோக்கியம், தாய் போன்றவற்றைக் குறிக்கும் இடம் ஆகும். ஆதலால் சிலருக்குப் புது வாகனம் வாங்கும் யோகம் சித்திக்கும். சொந்த வீட்டை விட்டு நிர்ப்பந்தம் காரணமாக வேறு வீட்டுக்குச் செல்ல நேரிடும். தேவை இல்லாத வைத்தியச் செலவு வந்து சேரும். சிலருக்கு அதிரடியாக வேலை மாற்றம் நேரும். திருமண முயற்சி பலிதமாகும். தொழிலில் மந்த நிலை மாறி அபிவிருத்தி ஏற்படும். உடல், ஆரோக்கியம் சீராகும். பணப் பற்றாக்குறை தீரும். யாருக்கும் கடன் கொடுக்கக் கூடாது. ஜாமீன் போடக் கூடாது. தவிர்க்கமுடியாத செலவுகள் ஏற்படும். மாணவ மாணவிகள் படிப்பில் அக்கறை எடுத்துப் படித்து வருதல் நலம். சினிமா துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தொழில் செய்வோருக்கு நல்ல வருவாய் ஏற்படும்.



மிதுனம்

சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயருக்குத் துளசி மாலை சாற்றி நெய் தீபம் ஏற்றி வர சங்கடங்கள் விலகும்.

• • •

ஆளுமைத் திறன்மிக்க கடக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2வது இடத்திலிருந்து 3வது இடத்துக்கு சனிபகவான் பெயர்ச்சி ஆவதால் மனத்தில் தைரியமும், தெம்பும் தானாகவே வந்துவிடும். அப்பாடா ஏழரை சனியிலிருந்து விடுபட்டு விட்டோம் என்று நினைப்பீர்கள். 3ம் இடம் என்பது காரியம் ஸ்தானம், வீரிய ஸ்தானம் ஆகும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். சுபகாரியப் பேச்சு பலிதமாகும். கோர்ட்டுக்கேஸ், வாங்கலில் இருந்து வந்த சிக்கல் விலகும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்துவேற்றுமை நீங்கி, கணவன்



கடகம்

மனைவிக்குள் சுமூகமான சூழல் நிலவும். கடன் சுமை தீரும். கல்வியில் இருந்து வந்த சுணக்கம் மாறி படிப்பில் உற்சாகம் ஏற்படும். சுபவிரயங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சொந்தத் தொழில் புரிவோருக்கு நல்ல வருவாய் கிட்டும். அரசியல்வாதிகளுக்கு இருந்து வந்த தொந்தரவுகள் விலகி மன அமைதி கிட்டும். அச்சுத்துறை, பத்திரிகைத் துறையினருக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். கட்டடத் துறையினருக்கு நல்ல வருவாய் இருக்கும். ரியல் எஸ்டேட் தொழில் செய்வோருக்கு நல்ல ஆதாயம் கிட்டும். பரிகாரம் தேவையில்லை.

சுறுசுறுப்பாக இயங்கும் சிம்ம ராசிக்காரர்களே உங்கள் ராசிக்கு 2ல் சனி பெயர்ச்சி ஆகி தன யோகத்தை அளிப்பார். ஜென்மச் சனியின் பாதிப்பு விலகி பாதசனி நற்பலனை அளிக்கும். 2ல் சனி வரும் போது பணம் தேடி வரும். திருமணம் கைகூடும். உடல் ஆரோக்கியம், குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வாக்குவன்மை மேலோங்கும். மனக் குழப்பம் தீரும். கடன் பிரச்னை தீரும். வீடு வாகன சௌக்கியம் உண்டாகும். குழந்தைகளால் மன சஞ்சலம் கிட்டும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். தொழில் ஆதாயம் கிட்டும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். தொழில் துறை சார்ந்தவர்களுக்கு நல்ல வருவாய் கிட்டும். அச்சு, இயந்திரத் தொழில் செய்வோருக்கு நல்ல ஆதாயம் கிட்டும். ஏற்றுமதி- இறக்குமதி தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விளையாட்டு வீரர்கள், அரசு அலுவலர்களுக்குப் பதவி உயர்வு தேடி வரும். சமூக ஆர்வலர்களுக்குப் பாராட்டு கிடைக்கும். சனிக்கிழமைதோறும் சனி பகவானுக்கு தீபம் ஏற்றி சனி காயத்ரி படித்து வர சங்கடங்கள் தீரும்.



சிம்மம்

சாந்த குணம்கொண்ட கன்னி ராசிக்காரர்களே உங்கள் ராசிக்கு சனி வருவது ஜென்ம சனி என்று சொல்வார்கள். விரைய சனியைவிட ஜென்ம சனி ரொம்ப நற்பலனை அளிக்கும். பல லட்சங்கள் சம்பாதிக்கும் யோகம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மனக் குழப்பம் விலகி சந்தோஷம் மேலிடும். சனி பார்வை 3ஆம் இடத்தில் படுவதால் சகோதர, சகோதரிகளால் நல்ல ஆதாயம் கிட்டும். கல்வியில் இருந்து வந்த தடைகள் விலகும். மேற்கல்விக்காக வெளிநாடு செல்லும் யோகம் வரும். பணம், காசுக்குக் குறைவு வராது. வைத்தியச் செலவு குறையும். குழந்தைகள் வழியில் சுபச் செலவுகள் ஏற்படும். அரசியல் பிரமுகர்களுக்கு நற்காலம். கட்டடக் கலைஞர்களுக்கும் சினிமா கலைஞர்களுக்கும் ஏற்றம் தேடி வரும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். அரசு சார்ந்த தொழில் செய்வோருக்கு நல்ல வருவாய் கிட்டும். சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்குத் தீபம் ஏற்றி 9 முறை வலம் வந்தால் சங்கடங்கள் நீங்கும்.



கன்னி

மற்ற ராசிகள் அடுத்தவாரம்...

20 அடியும்... 18 வருடங்களும்...

நானும் நண்பரும் அந்த மியூஸிக் அகாடமியின் உள்ளே நுழைந்தபோது, முதியவர்களைக் காட்டிலும், இளைஞர்களும், இளம்பெண்களும் மிகுந்த ஆர்வத்தோடு ஆங்காங்கே நின்றிருப்பதைப் பார்த்தோம்.

''இந்த கேண்டீன் மைசூர் போண்டாவும், ஃபில்டர் காஃபியும் சாப்பிடத்தான் இவ்வளவு கூட்டம். இப்ப இருக்கிற இளைய தலைமுறைக்கு இசை பற்றி என்ன தெரியப் போகிறது?'' என்று சொன்ன என் நண்பர், கூட்டத்தோடு போய் அவர் சொன்ன ஐட்டங்களை வாங்கி வந்து என்னிடம் ஒரு பிளேட் கொடுக்க, நாங்கள் அங்கிருந்த புல்வெளியில் நின்றபடி சாப்பிடத் தொடங்கினோம்.

''இதுக்கு ஏன் ஸார் மைசூர் போண்டான்னு பேர் வந்தது?'' என்று நண்பர் கேட்க, ''மைசூர் ரசம்ன்னு எங்க வீட்ல அடிக்கடி வைப்பாங்க. அந்தப் பேரே ஏன் வந்ததுன்னு தெரியாம பலநாள் யோசித்ததுண்டு'' என்று நானும் விளையாட்டாகச் சொன்னேன்.

''ஏன்... மைசூர்பாகை விட்டுட்டீங்களே...'' என்று கொஞ்சம் கேலியான பெண் குரல் கேட்க, நானும், நண்பரும் சற்றே திடுக்கிட்டுப் போனோம்.

கல்லூரி மாணவிகள் நான்கு பேர் அருகில் வந்தனர்.

''ஸார் வணக்கம். பொதுவாக இளைய தலைமுறைக்கு சங்கீதமும் தெரியாது. இங்கிதமும் தெரியாது என்று எங்களைச் சொல்லிவிட்டு, நீங்கள் 'மைசூர் போண்டா' ஆராய்ச்சியில் இறங்கிட்டீங்களே. உங்களை எங்களுக்கு நல்லாத் தெரியும். எப்படி அறிமுகம் ஆகறதுன்னு யோசிச்சோம்... அதுக்குள்ள இவரே (என் நண்பரைக் காட்டி) எங்களை வர வச்சுட்டார்'' என்று சொல்லிச் சிரித்தனர்.

அதற்குள் இசை நிகழ்ச்சி தொடங்க, ''ஸார் ஏழரை மணிக்கு, இந்த நிகழ்ச்சி முடிஞ்சிடும். ஒரு சின்ன கலந்துரையாடல் வைத்துக் கொள்ளலாமா? காலேஜ் மேகஸினுக்குத் தேவையா இருக்கு'' என்று அன்போடு கேட்க, நான் 'சரி' என்று சொல்ல, அவர்கள் அரங்கத்துக்குள் விரைந்தார்கள்.

''ஏழரை மணிக்கா? அப்ப ஏழரைதான்'' என்று நண்பர் சொல்லிவிட்டு, ''என்ன



ஆச்சர்யம் பாத்தீங்களா? இந்தக் காலப் பெண்கள் எவ்வளவு தைரியமா இருக்காங்க. அடேயப்பா?''ன்னு வியந்தவர், ''வாங்க உள்ளே போகலாம்'' என்றார்.

பாட்டுக் கச்சேரி முடிந்து, நாங்கள் மீண்டும் புல்வெளிக்கு வர, அந்தப் பெண்கள் எங்களை எதிர் நோக்கிப் புல்வெளியில் அமர்ந்து புன்னகை செய்தார்கள்.

''ஐயா, சங்கீதம் குறித்த நகைச்சுவையோடு பேட்டியைத் தொடங்குவோமே!'' என்றார் அந்தப் பெண்களுள் சுமி என்ற பெயருடையவர்.



''மகாராஜபுரம் சந்தானம் அவர்களின் தந்தையார் விசுவநாதையர் மகாமேதை. சிறந்த நகைச்சுவையாளருங்கூட. ஒரு முறை அவர் குழுவைச் சேர்ந்த மிருதங்க வித்வானுக்கு, கச்சேரிக்கு வந்த இடத்தில் முடியாமல் போக, அவசர அவசரமாக உள்ளூர் மிருதங்க வித்வானை ஏற்பாடு செய்ய, கச்சேரி ஒருவழியாக முடிந்ததாம். ஊர்க்காரர்கள் நம் விசுவநாத அய்யரிடம் வந்து, 'எங்களூர்க்காரர் எப்படி வாசித்தார்?'' என்று கேட்டார்களாம்.

'பிரமாதம் முதல்ல கொஞ்ச நேரம் எம்பாட்டுக்கு வாசிச்சார். பிறகு அவர் பாட்டுக்கு' வாசிச்சார்!' என்று சிரிக்காமல் சொன்னாராம்.'' இதை நான் சொன்னவுடன் பெண்கள் சத்தம் போட்டுச் சிரித்தார்கள்.

''ஏரிக்கரையின் மேலே போறவளே பெண் மயிலே... இந்தப் பழைய சினிமாப் பாட்டு என்ன ராகம்?'' என்றார் நண்பர்.



சிரிப்போம் ஜெயிப்போம்!

''ஆரபி ராகம்' முதலாளி படத்திலே டி.எம்.சௌந்தர ராஜன் பாடியிருப்பார்'' என்று சுமி சொல்ல,

''பாடல் கவிஞர் கா.மு. ஷெரிப், இசை கே.வி.மகாதேவன்'' என்று அடுத்த பெண் கூறினாள்.

நண்பர் மலைத்துப் போய் நிற்க, நான் கேட்கத் தொடங்கினேன். ''நம் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடியவர் யார்? இப்போது என்ன ராகத்தில் அந்தப் பாடலைப் பாடுகிறோம்?''

பெண்கள் சற்றே யோசிக்க, ''அப்படிக் கேளுங்க... இப்ப என்ன செய்வீங்க?'' என்று கை தட்டினோம்.

''மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை எழுதிய பாடல் இது. மோகன ராகத்தில் பாடுகிறோம். இந்த மோகன ராகம்தான் சங்க காலத்தில் 'முல்லைப் பாணி' என்னும் பண்ணாக இருந்ததாக தமிழிசை அறிஞர் மதுரை மம்மது குறிப்பிடுகிறார்'' என்று சுமி கூறினார்.

''சபாஷ்! அற்புதம்''

கு.ஞானசம்பந்தன்

என்று நானும், நண்பரும் கைதட்டினோம்.

சுமிதான் அடுத்த கேள்வி கேட்டார்.

''வெற்றி மேடைக்குச் செல்லும் படிக்கட்டுகள் எவை என்று சொல்ல முடியுமா?''

''இசையில் ஆர்வம் கொண்ட அந்த இளைஞன், வறுமையோடு போராடியபடி அன்றைய பம்பாய் வீதிகளில் அலைந்து ஒரு உணவகத்தில் வேலைக்குச் சேர்ந்தான். அதன் எதிரே சாலைக்கு அப்பால் இருந்த திரையரங்க இசைப்பாடல்கள்தான் அவனுக்கு இரவு நேரத் தாலாட்டு.

ஒருநாள் அந்த உணவகத்துக்கு ஹிந்தித் திரைப்பட இசைக்குழுவைச் சார்ந்தவர்கள் சாப்பிட வர, அவர்களோடு சேர்ந்து அந்த இசைக்கருவிகளைச் சுமக்கும் பையனாக அவன் திரையுலகம் நோக்கி நடக்கத் தொடங்கினான்.



கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, இசையமைப்பாளராக உயர்ந்து, பல வெற்றிப் படங்களைத் தன் இசையால் ஓடச் செய்ய, ஒரு புகழ் மிக்க படத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சி.

வெள்ளி விழா கேடயத்தைப் பெற்றுக் கொண்ட அந்த இசையமைப்பாளர் மிகக் கனிந்த குரலில் பணிவோடு பேசத் தொடங்கினார். 'நண்பர்களே, இந்தக் கேடயத்தை, இந்தத் திரையரங்கில் பெறுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். இதோ இந்தத் தியேட்டருக்கு எதிரேயுள்ள உணவகத்தில்தான் நான் என் வாழ்க்கையைத் தொடங்கினேன். அந்த உணவகத்துக்கும், இந்தத் திரையரங்குக்கும் இடையில் இருபது அடிகள்தான் இடைவெளி. ஆனால், இந்த இருபது அடியைத் தாண்டி இந்த மேடையை அடைய எனக்கு பதினெட்டு ஆண்டுகள் ஆயிற்று' என்று அவர் நெகிழ்வாகச் சொன்ன போது, திரையரங்கமே அதிர்ந்தது. அந்த இசைமேதை யார் தெரியுமா?'' என்று நான் கேட்டேன்.

''நௌஷத் அலி!'' என்று சுமி சொல்ல, அரண்டு போய் மறுபடியும் கைதட்டினேன்.

''**நௌ**ஷத் யார்?'' என்று நண்பர் இழுக்க,

''தாஜ்மொகல்', 'அன்மோல்கடி', 'மதர் இந்தியா', 'அக்பர்' போன்ற புகழ்மிக்க ஹிந்திப் படங்களின் வெற்றிக்குக் காரணமான இசைச் சக்கரவர்த்தி அவர்'' என்று சுமி கூறினார்.

''தமிழிலும் 'வானரதம்' என்ற படத்துக்கு இசையமைத்துள்ளார். ஹிந்தியில் 'ஆலய மணி', 'பாலும் பழமும்' போன்ற படங்களுக்கும் இசை அவரே'' என்று நான் சொன்னேன்.

''ஸார் இப்பவாவது ஒத்துக்கறீங்களா? இளைய சமுதாயம்தான் எதிர்கால இந்தியா. சரியா?'' என்று சுமி கேட்க,

''நான் என்ன சொல்றது... அதுதான் ராகுல்காந்தியே சொல்லிட்டாரே'' என்று சொல்லிப் புன்னகை புரிந்தேன்.

(தொடரும்)

நாடக விமர்சனம்



எக்ஸ்ட்ரா இன்னிங்ஸ் @ எமலோகம்!

'டி.வி. நியூஸ்' வரத ராஜனின் நாடகக் குழு, இந்த முறை, ஐ.பி.எல். குடும்பம் நாடகத்தில் அளிப்பது சில வியப்புகளை.

நடுத்தரக் குடும்பம். அதை ஆட்டிவைக்கும் ஒரு பிரச்னை. இது தொடர்பாக நாடகப் பாத்திரங்கள் (பெரும்பாலும் கதாநாயகன்) பெறும் படிப்பினை. இப்படித்தான் இவர்களின் மைய இழை இருப்பது வழக்கம். இந்த முறை படிப்பினையை கதாநாயகன் அளிக்கிறான் - மேலுலகவாசிகளுக்கு! போதாக்குறைக்கு குறைவில்லாத அரசியல் கிண்டல்கள் நாடகத்தில் அள்ளித் தூவப் படுகின்றன.

பெயர்க் குழப்பத்தால் வேறொருவருக்குப் பதிலாக கதாநாயகனின் உயிரை எமலோகத்துக்குக் கொண்டு வந்துவிடுகிறான் எமதர்மன். அதற்கு நஷ்ட ஈடாக, தன் குடும்பத்தையும் எமலோகத்துக்கு அழைத்து வரச் செய்கிறான் கதாநாயகன். அங்கு அவர்கள் கணினி சாம்ராஜ்யத்தின் உதவியுடன் சில பழங்காலக் குளறுபடிகளைச் சரிசெய்ய, அதனால் மேலுலகவாசிகளுடன் உரசல்கள் உண்டாகின்றன. வழக்கு தெய்வமன்றத்துக்கு வருகிறது.

'நல்லது செய்தால் அதிகப்படியான ஆயுள் கிடைக்கும் என்பதுபோல் உங்கள் விதிகள் இருந்தால் நல்லவர்களின் எண்ணிக்கை அதிகமாகுமே' என்பதும், உடல் ஊனமுற்றவர்களாக சிலரைப் படைப்பதில் உள்ள அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பதும் பாராட்ட வைக்கின்றன (கதை, வசனம் சந்திரமோகன்).

பொதுவாக, குழப்பங்களும் தவறான நம்பிக்கைகளுமாக மேடைகளில் வளையவரும் வரதராஜன், இதில் தெளிவான சாஃப்ட்வேர் என்ஜினியராக வந்து மாற்றம் காட்டியிருக்கிறார். நடிகர்கள் அனைவருமே சிராகப் பங்களித்திருப்பது சிறப்பு.


நாடகம் பார்க்கும்போது சிவாஜி நடித்த எமனுக்கு எமன், ரஜினி நடித்த அதிசயப் பிறவி, சோவின் நாடகமான சரஸ்வதியின் சபதம் போன்றவை நினைவில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

நகைச்சுவைதான் நாடகப்போக்கு, இதுதான் அதற்கான கரு என்று ஆன பிறகும், 'யாராவது தெய்வ நிந்தனையாக நாடகத்தை நினைத்துவிடக் கூடாதே!' என்ற பதற்றத்தில் ஆங்காங்கே அதிகம் சேர்க்கப்பட்டுள்ள சில வசனங்கள் லேசான தொய்வை ஏற்படுத்துகின்றன.


காட்சிகளும் கலைஞர்களின் உடை மாற்றமும் மின்னல் வேகத்தில் மாறுவதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

நாடகம் சிரிப்பும் சிந்தனையுமாக நகர்கிறது. அந்த அளவில் யுனைட்டெட் விஷுவல்ஸின் ஐ.பி.எல். குடும்பம் அதிக ரன் எடுத்துள்ளது.

- ஜி.எஸ்.எஸ்.



அஞ்சு வருஷ லீவு...



"ஆரம்பத்தில் டெலிஃபோன் துறையில் ஊழியரா வேலை பார்த்தேன். அப்பவே எனக்கு ஓவியம்னா அப்படியொரு ஆத்ம சந்தோஷம். ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ராஜகோபால் என்கிற ஓவிய ஆசிரியர்தான் இப்படியொரு கலைப் பாதையைக் காண்பிச்சவர். என்னோட கலைதாகத்தைக் கண்ட டெலிஃபோன் துறை அதிகாரிகள் கல்லூரியில் ஓவியம் பயில சிறப்பு சலுகையா, அஞ்சு

வருஷம் லீவு கொடுத்தாங்க; படிச்சு முடிச்சிட்டு மீண்டும் வேலையில் சேர்ந்தேன். ஒரு வருஷம் முழுக்க நைட் ஷிஃப்ட் வேலை பார்த்தேன். ஏன்னா காலையில ஃபைன் ஆர்ட் டிப்ளமோ படிச்சேன். இப்போதான் திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் கட்டடக் கலைத்துறையில் (ஓவிய) பேராசிரியராக இருக்கிறேன். முப்பது தனி நபர் கண்காட்சிகள் வைத்திருக்கிறேன். ஜெயகாந்தன், தீபம் பார்த்தசாரதி, தியோடர் பாஸ்கரன்... ஆகியோரிடம் வேலை செய்த சந்தோஷத்தைப் பத்திரப்படுத்தியிருக்கேன். மனித இயல்புகளை ஐம்பது முகங்களைக் கொண்டு பதிவு செய்த நான், இப்போது தமிழகத்தின் டான்ஸ் அண்ட் மியூஸிக்கின் உடல்மொழியை மொழிபெயர்க்கிறேன் - நமது கலையின் வெளிச்சம் உலகமெல்லாம் பரவ வேண்டும் என்பதற்காக'' என்கிறார் 57 வயதாகும் ஓவியர் மாணிக்கவாசகம்.


- அமிர்தா

படங்கள் : சின்னராஜ்





மாணிக்கவாசகம்



''இந்த ஆண்டு சிறந்த நடிகர் விருது பிரகாஷ்ராஜுக்குக் கிடைத்தது எனக்கு மகிழ்ச்சியே. அதேசமயத்தில் நான் இயக்கிய 'பெரியார்' படத்தில் பெரியராக நடித்த சத்தியராஜுக்குக் கிடைக்காதது எனக்கு வருத்தமே!

இன்றைய தினத்தில் நிறைய தனியார் சேனல்களும், பத்திரிகைகளும் ஆளாளுக்கு விருதுகள் வழங்கி விருதுகளுக்கான உண்மையான மதிப்பைக் குறைத்துவிட்டன. இப்போது விருதுகளெல்லாம் ஸ்டார்களை மையமாக வைத்து கமர்ஷியலாகக் கொடுக்கப்படுகின்றன. எனவே ரசிகனுக்கு விருது கிடைப்பது ஏதோ சாதாரண விஷயம் என்பது போன்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. 'கஞ்சீவரம்', 'பெரியார்' போன்ற கலைப்படங்களுக்கும் உயரிய விருதுகள் கிடைப்பது மகிழ்வாக உள்ளது'' என்கிறார் ஞானராஜசேகரன்.

ஞானராஜசேகரன் ஐ.ஏ.எஸ்.



''குத்துப்பாட்டு கேவலமானது!''

உங்கள் பார்வையில் சிறந்த சினிமா என்பது எது?

''சிறந்த சினிமா என்பது நேர்மையான சினிமாவாக இருக்க வேண்டும். 'வர்த்தகம்' ஒன்றையே மனத்தில் கொண்டு எதை எதையோ செய்து ரசிகனின் சிந்தனையை மழுங்கடிக்கக் கூடாது!''

'மோகமுள்'ளுக்குப் பிறகு நாவல்களைப் படமாக்கும் முயற்சி எதுவும் இல்லையே...

''சினிமா என்பது காட்சி ஊடகம். எனது பார்வையில் பெரும்பான்மையான தமிழ் நாவல்கள் சூழலைக் காட்சிப்படுத்தாமல் எழுத்தை மையமாகக் கொண்டே எழுதப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நாவல்களை சினிமாவாக எடுப்பது கடினம். ஆனால், தி.ஜானகிராமன், ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன் போன்றவர்களின் எழுத்துக்களில் காட்சித்தன்மை அதிகமாக இருக்கிறது. ஜெயகாந்தனின் நாவல்களை அவர் முழுவீச்சுடன் எழுதிய காலத்தில் திரைப்படமாக எடுத்திருந்தால், தமிழ் சினிமாவின் ரசனை, மலையாள சினிமா ரசிகர்களின் ரசனை போல உயர்ந்திருக்கும்.

நாவல், நுண்ணிய அழுத்தமான உணர்வுகளை எழுத்துகள் மூலமாக வெளிப்படுத்தக்கூடியது. இன்றைய கமர்ஷியல் சினிமா வேகமாக நகரக் கூடியதாக உள்ளது. பதினைந்து நிமிடங்களுக்கு ஒருமுறை திருப்பமோ, குத்துப்

பாட்டோ வருவது கேவலமானது. நல்ல நாவல்களைப் படமாக்கும்போது இது போன்ற விஷயங்களை ரசிகர்கள் எதிர்பார்க்கக் கூடாது.

சென்சார் போர்டில் முக்கியப் பொறுப்பில் இருந்தபோது, சுமார் 750 படங்கள் வரை காண்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. படங்களில் இயக்குநர் சொல்ல நினைக்கும் விஷயங்களை, முழுமையாகச் சொல்ல முடிகிறதா, ரசிகர்களின் புரிதல்கள் எப்படி என்பது போன்ற அம்சங்களை நான் உற்றுநோக்கினேன். இந்த அனுபவங்கள் மூலமாக என்னுடைய படங்களில் நான் ரசிகனுக்குச் சொல்ல விரும்பும் விஷயங்களைச் சரியான முறையில் சொல்ல முடிந்தது. அதேசமயத்தில் நான் பார்த்த கமர்ஷியல் படங்களின் பாதிப்புகள் எதுவும் எனது படைப்புகளின் மீது படராமலும் பார்த்துக் கொண்டேன்.''

பாடத் திட்டங்களில் சினிமா கல்வி...

''இன்றைய வெகுஜனப் பத்திரிகைகள் சினிமாக்காரர்களைப் பற்றிய தகவல்களைத் தருகின்றனவே அன்றி சினிமாவைப் பற்றிய தகவல்களைத் தருவதில்லை. ரசிகனின் சினிமா ரசனையை உயர்த்த எந்த முயற்சியையும் இந்தப் பத்திரிகைகள் எடுப்பதில்லை. சினிமா பற்றிய பாடத் திட்டங்கள் இதுபோன்று இருக்கக்கூடாது. சிறந்த சினிமாக்களை அணுகும் முறை பற்றியும், ரசிகனின் சினிமா ரசனையை உயர்த்துவதாக இருக்கும்படியும் பாடத்திட்டங்கள் அமைய வேண்டும்'' என்று சொல்லும் ஞானராஜசேகரன் ஐ.ஏ.எஸ்., மத்திய அரசின் ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார்.

- ராகவ்குமார்

புதிய முதல்வர்

"இந்திரா காந்தி மரணம் அடைந்த போது, அவரது மகன் ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவி ஏற்கவில்லையா? அதுபோல, ராஜசேகர ரெட்டியின் மரணத்துக்குப் பிறகு அவர் மகன் ஜகன்மோகன் ரெட்டி ஆந்திராவின் முதலமைச்சர் ஆவதில் என்ன தவறு?" இப்படி வெளிப் படையாகவே ஆந்திர காங்கிரஸ் வட்டாரத்தில் ஜகன்மோகன் ரெட்டி ஆதரவாளர்கள் பேச, சோனியா காந்தி ரொம்பவே



அப்செட்.

ஜகன்மோகன் ரெட்டியை முதல்வராக்க காய்களை நகர்த்திக் கொண்டிருப்பவர், ராஜசேகர ரெட்டியின் மிக நெருங்கிய நண்பர் கே.வி.பி.ராமசந்திர ராவ். இரண்டு பேரும் குல்பர்க்காவில் மருத்துவக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். ஒருமுறை காங்கிரஸ் கட்சி சார்பில் ஆந்திரப் பிரதேச மேலவைக்குப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தவர் ராவ். அதன் பிறகு, 'தேர்தல் எல்லாம் உனக்கு வேண்டாம்' என்று சொல்லி அவரைத் தம் ஆலோசகராகத் தம்முடன் வைத்துக் கொண்டார் ஒய்.எஸ்.ஆர். கடந்த ஆண்டு ஏப்ரலில் இவரை ராஜ்ய சபா உறுப்பினராக்கி டெல்லிக்கு அனுப்பி வைத்தார்.

ராஜசேகர ரெட்டி மரணமடைந்த செய்தி உறுதியான மறுகணமே முதல்வர் நாற்காலிக்கான ரேஸ் ஆரம்பமாகிவிட்டது. அதைத் திரை மறைவில் இருந்து தொடங்கி வைத்தவர் ராமசந்திர ராவ்தானாம். ஒய்.எஸ்.ஆரின் அமைச்சரவையின் நெம்பர் டூ ஆன ரோசையா இடைக்கால முதல்வராகப் பதவி ஏற்றதை ஜகன் மோகன் ரெட்டி கோஷ்டியால் ஜீரணிக்க முடியவில்லை. ரோசைய்யாவின் அமைச்சரவையில் முறைப்படி பங்கேற்க ஒய்.எஸ்.ஆர். ஆதரவு அமைச்சர்கள் முன்வராமல், ஜகன்மோகன் ரெட்டியை முதல்வராக்க வேண்டும் என்று சொன்ன போது, "அமைதியாய் இருங்கள்" என அவர்களைச் சமாதானப்படுத்தியது ராவ்தானாம்.

தற்போதைய ஆந்திர காங்கிரஸ் கமிட்டி தலைமைப் பதவியில் இருக்கும் டி.ஸ்ரீனிவாசுக்கு முதலமைச்சர் பதவியில் ஒரு கண். கடந்த சட்டசபைத் தேர்தலில் நிஜாமாபாத் அர்பன் சட்டசபைத் தொகுதியில் போட்டியிட்டு தோற்ற இவரைத் தவிர, மாரி சசிதர் ரெட்டி, ஹனுமந்த ராவ், ஜனா ரெட்டி, திவாகர் ரெட்டி ஆகியோருக்கும் முதலமைச்சர் பதவி மீது ஒரு



✱ ரோசைய்யா

கண். ஆனால், இவர்களுக் கெல்லாம் எம்.எல்.ஏ.க்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை. ஜகன்மோகன் ரெட்டி முதலமைச்சரா வதற்கு இவர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புக் குரலை சைலண்ட்டாக்கிய சாமர்த்திய சாலி ராமசந்திர ராவ்தான்.

இப்போது முதலமைச்சர் ரேஸில் இருப்பவர்கள் ஜெய பால் ரெட்டி, ஜகன்மோகன் ரெட்டி, புரந்தேஸ்வரி ஆகி யோர்தான். ஜெயபால் ரெட்டி நல்ல நிர்வாகி, லஞ்ச ஊழலில் ஈடுபடாதவர், சிறந்த பேச்சாளர் என்ற பிளஸ் பாயிண்ட்கள் இருந்



* ஜகன்மோகன் ரெட்டி

* ஒய்.எஸ்.ஆர்



டெல்லி வட்டாரத்தில் சொல்கிறார்கள்.

விசாகப்பட்டினம் தொகுதியில் ஜெயித்து, இப்போது மத்திய அமைச்ச ராக இருக்கும் புரந்தேஸ்வரி என்.டி.ஆரின் மகள். அவரை முதலமைச்சராக்குவதற்கு பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன.

''புரந்தேஸ்வரி முதல மைச்சரானால் இரண்டு விஷ யங்கள் நிச்சயம். சட்ட சபையிலும், வெளியிலும் என்.டி.ஆரின் மகளான முதலமைச்சர் புரந்தேஸ்வரிக்

* சந்திரபாபு நாயுடு



புரந்தேஸ்வரி?

தாலும், கட்சி மட்டத்தில் பெரிய செல்வாக்கு இல்லை. ஜகன்மோகன் ரெட்டியை இந்தத் தேர்தலில்தான் முதல் முறையாக அரசியல் களமிறக்கி, ஜெயிக்க வைத்து எம்.பி. ஆக்கினார் அவரது தந்தை ராஜசேகர ரெட்டி. ஆனாலும், ஜகன் ரெட்டிக்கு பிஸினஸ்தான் ஃபர்ஸ்ட். அரசியல் இரண்டாம் பட்சமாகவே இருந்து வந்தது. வெறும் நூறு நாள் எம்.பி. ஆக இருந்த அனுபவத்தின் அடிப்படையில் ஜகனுக்கு முதலமைச்சர் நாற்காலியைத் தூக்கிக் கொடுக்க சோனியா விரும்ப வில்லை. அதே சமயம் ஜகனுக்கு முதல மைச்சர் பதவியைக் கொடுக்காத பட் சத்தில், வருகிற முதலமைச்சர் ஒய்.எஸ். ஆரைப் போல கட்சியின் கோஷ்டிப் பூசல்களை ஒடுக்கி, ஆட்சியை நடத்திச் செல்பவராக இருக்க வேண்டும் என்றும்

கும், என்.டி.ஆரின் மாப்பிள்ளையான எதிர்க்கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுவுக்கும் இடையிலான மோதல்கள் சுவாரஸ்யமாக இருக்கும். ஜகன் ரெட்டிக்கு முதலமைச்சர் பதவி கிடைக்காத கோபத்தில் ராயலசீமா பகுதியில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும். ஒருவேளை ஜகன் மோகன் ரெட்டி முதலமைச்சராகி விட்டால், கே.வி.பி.ராமசந்திர ராவ் நிழல் முதல்வராக ஆந்திராவை ஆட்டி வைப்பார்''என்கிறார் ஒரு மூத்த பத்திரிகை யாளர்.

- கௌதம் ராம்

வட்டமேஜை

பதவி படுத்தும் பாட்டை பட்ட வர்த்தனமாகப் படம் பிடித்திருந்தது சென்ற வாரத் தலையங்கம்.

- எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

கிரேஸி ட்ரீட் வாசகர் திருவிழா பக்கங்களை எந்தப் பக்கம் படித்தாலும் சாக்லேட் இனிப்புதாங்க.

- பி.ஹேமாம்புஜம், சென்னை

'தெரியாமத்தான் கேட்கிறேன்' படிச்சு, சிரிச்சு வயிறு புண்ணாயிடுச்சு. தெரியாமத்தான் கேட்கிறேன், இதையெல் லாம் ரூம் போட்டு உக்காந்து யோசிப்பீங் களா?

- ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி

அன்று உரிமைக்காகப் போராடிய வருக்கு, இன்று இரண்டு கட்டுரைகள் எழுதியதால் இருபது ஆண்டுகள் சிறை என்றால் இலங்கையில் நடக்கும் அராஜகத் துக்கு வேறு என்ன சாட்சி வேண்டும்!

- ஆர்.ஏ.அமுதன், சென்னை

பரீட்சையில் 'பாஸ்' பண்ணினால் மட்டும் போதாது. பொது அறிவிலும் பாஸ் பண்ண வேண்டும் என்று உணர்த்தி யது ஒய்.ஜி.பி.யின் பேட்டி!

- கிரிஜா ராகவன், கோவை

அண்ணா-100ல் வெளியிட்ட அரிய புகைப்படங்கள் உமக்கு மட்டும் எப்படி கிடைத்தன?

- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

கையில் ஆட்டுக் குட்டியுடனும், நாயகனின் அருகில் பவ்யமாய் நிற்பவரும் ஒருவரே (அஞ்சலி) எனில், 'என் ஹீரோயின் அழகியில்லை' என்று வசந்த பாலன் சொல்வது பொய்!

- கு.ப.இரகுநாதன், பூவிருந்தவல்லி

'கலைஞர் எங்கள் மரியாதைக் குரியவர்; எங்களுக்கிடையே பிளவை உண்டாக்க வேண்டாம்' எனக் கூறிய ராகுலின் ராஜதந்திரம், உண்மையில் பாராட்டத்தக்கதே!

- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

'சீதைவனம்' கதையில் சந்தேகப்படும் கணவனின் குணம் பற்றி மருமகளிடம் கொட்டித்தீர்க்கும் மாமியாரின் ஆவேசம் அசத்தல்!

- ஜே.துரைராஜ், சென்னை

ராஜசேகர ரெட்டியின் அகால மரணம் வேதனைக்குரியது. அந்தத் தலைவரின் இரங்கல் கூட்டத்தில் மனிதாபிமானத் துடன் நடந்து கொள்ளாத காங்கிரஸ் பிரமுகர்களின் நிலையைக் குறித்து அழுவதா? சிரிப்பதா?

- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

தம்பிகளைக் கவர்ந்த

அறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு

விழா கொண்டாடப்படும் நேரத்தில் அவரைப் பற்றிய கட்டுரை + படங்களை வெளியிட்டது பாராட்டுக்குரியது.

- அ.முரளிதரன், மதுரை

'சாக்லெட் கிருஷ்ணா' கிரேஸி கொடுக்க, லைவ் அப்டேட் போல நீங்கள் கொடுத்தது 'வெல் ட்ரீட்!'

- எஸ்.ஜானகி, சென்னை

அருண்சரண்யா தொடரின் 'அபங்க அமுதத்தில்' தெய்வத்தை இப்படியும் ஒரு பார்வை பார்க்க முடியுமா என்று எண்ணி ஆச்சரியப்பட்டேன்.

- அய்யாறு வாசுதேவன், சென்னை

தேசிய விருது பெற்ற பிரகாஷ்ராஜின் மனந் திறப்பு 'முத்தாய்ப்பாய்' இருந்தது! வாழ்த்துகள்!

- ஜி.ரெஜினாபானு, பழனி

அண்ணா-100 பகுதியில் அண்ணாவின் அரிய புகைப் படங்களை வெளியிட்டு அவருக்குப் புகழ் மாலை சூட்டி, அண்ணாவின் அன்புத் தம்பிகளை வெகுவாகக் கவர்ந்து விட்டீர்கள்!

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

சென்ற வாரத்துக்குரிய துப்பறிய வாங்க போட்டி - 11க்கான விடையை வாசகர்கள் யாரும் சரியாக யூகித்து எழுதவில்லை. எனவே யாருக்கும் பரிசு இல்லை.

- ஆர்

கல்கி!




அடுத்த இதழ்
இறைவுணர்வுச் சிறப்பிதழ்
பயனுண்டு பக்தியினாலே!
பக்தின்னா என்னாங்க?
மக்கள் பேட்டி
பாடலாத்ரி
ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியை...
சீதையைச் சிறைவைத்த இடம்
வி.ஐ.பி. பக்தர்கள்
இன்னும்... இன்னும்...
S. Bhushan

மங்கையர் மலரின்
திருமண மலர்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/- (அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ 15/-)



வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க Profile விளம்பரம் ரூ. 2500/-



வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, மங்கையர் மலர் என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.
தொலைபேசி: 4343 8888 Fax : 044 - 4343 8899
email: marketing@kalkiweekly.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.